# சாத்தானின் ஊழியர்கள்





ஜி.நேசன்

EE 5
...LALAI WEST
CHUNNAKAM
...ARY

Miss. V. Sabapathippillai
Mallakam

ஜன-மித்திரன் வெளியீடு: 15

# சாத்தானின் ஊழியர்கள்

SITHY VINAYAGAR LIBRARY
EES
EARLALAI WEST
CHUNNAKAM

ஜி. நேசன்

ஜன-மித்திரன் வெளியீடு

JANA-MITHIRAN VELIYEEDU

"SATHTHANIN OOLIYARKAL"

**Author:** *G. NESAMANI*

*COPY RIGHT*

RESERVED WITH
THE PUBLISHERS

**PRICE Rs. 3/60**

Published by:
VIRAKESARI
P.O.Box 160, COLOMBO.

**EXPRESS NEWSPAPERS(Cey)LTD.**
185, GRANDPASS ROAD,
COLOMBO-14.

# ஒரு வார்த்தை....

ஈழத்தின் பிரபல நாவலாசிரியர்களின் தரம் மிக்க படைப்புக்கள் ''வீரகேசரி பிரசுர''மாக மாதந்தோறும் வெளி வருகின்றன.

பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் படித்துப் புகழும் வீரகேசரி பிரசுரங்களை நீங்களும் படிக்கிறீர்களா?

இதுவரை படிக்காவிட்டால் இன்றே உள்ளூர் விற்பனையாளரிடம் சென்று ஒரு ''வீரகேசரி பிரசுர''த்தை வாங்கிப் படித்துப் பாருங்கள்.

அத்துடன் ''வாசகர் பரிசுத் திட்டம்'' உங்களுக்கு இலவச நூல்களைப் பெற்றுக்கொள்ள உதவுகின்றது.

ஆறு வீரகேசரி பிரசுரங்களை அடுத்தடுத்து நீங்கள் வாங்கினுல் ஏழாவது வீரகேசரி பிரசுரம் உங்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

ஒவ்வொரு வீரகேசரி பிரசுரத்திலும் ''வாசகர் பரிசுத் திட்ட'' கூப்பன் உண்டு.

அறிவை விருத்தி செய்யவும், ஆற்றலை வெளிப்படுத்தவும் வீரகேசரிப் பிரசுரங்களைத் தவருது படியுங்கள்.

குறிப்பிட்டளவு பிரதிகளே வெளிவருவதால், முன்கூட்டியே உள்ளூர் விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்கு ஆடர்செய்யுங்கள். அல்லது நிர்வாகி, புத்தக இலாகா, வீரகேசரி, த. பெ. 160, கொழும்பு என்ற விலாசத்திற்கு எழுதுங்கள்.

## அடுத்து வரும்...



# ஜன மித்திரன் வெளியீடு

இமயமலைச் சாரலில் உள்ள சாஜோடே கிராமத்தில் நடந்தது இந்த உண்மைக் கதை!

பனி உறைந்துகிடக்கும் இம் மலைநாட்டு மக்களின் இரத்தத்தை உறையவைத்தவள் ஒரு அழகிய இளம் பெண்!

அவளை அண்டியவர்கள் எவரும் மரணத்திலிருந்து தப்பிக்கொள்ளவில்லை! இவளுக்கு எப்படி இவ்வளவு அபார சக்தி வந்ததென்பதை ஆராய்ந்தார்கள் ஒரு சர்வகலாசாலை புரொபஷரும்—மாணவனும்!

—சுவையான சம்பவங்கள் கொண்ட நாவல்—

# மர்ம மங்கை—நார்தேவி

ஜி. நேசன் அளிக்கும்

மகத்தான நாவல்!

(உண்மைக் கதை)

ஜனமித்திரன் வெளியீடு - 16

# குறிப்புரை

இங்கிலாந்தின் செஷயர் பகுதியில் உள்ள அலட்ரிப் எட்ஜ் என்ற இடத்திலுள்ள மாதா கோவிலின் குருவானவர் வண. ஜோன் சிம்மன்ஸ் மதத்தில் உயிரையே வைத்திருப்பவர். மிகவும் கடுகடுப்பானவர்.

அவர் ஒரு சனிக்கிழமை காலை அப்பகுதியிலுள்ள பிராந்திய பத்திரிகை நிருபர்களையெல்லாம் அவசரமாக ஒரு மாநாட்டுக்கு அழைத்தபோது, அவர்கள் ஆச்சரியப் பட்டார்கள்.

பத்திரிகை நிருபர் மாநாடு நடத்துவதற்கு அவரிடம் அப்படி என்ன முக்கிய விஷயம் இருக்கிறது என்று யோசித்துக்கொண்டு சென்ருர்கள்.

முகில் போன்ற பால் வெள்ளைத் தாடியைக் கொண்ட மூக்குக் கண்ணுடி அணிந்த அந்தக் குருவானவர் எல்லா நிருபர்களும் வந்து சேரும் வரைக்கும் காத்திருந்தார்.

நிருபர்களை வரவேற்று உட்கார வைத்துவிட்டு, அடிக்கடி உள்ளே சென்று வந்தார். நிருபர்கள் அனைவரும் வந்து சேர்ந்ததும், அவர்களுக்கு பிஸ்கட்டுகளும், காப்பியும் வழங்கப்பட்டது.

பின், எல்லோரையும் உள்ளே அழைத்துப் போனுர்.

''நண்பர்களே... இங்கிலாந்தின் பேய் மகாராணி மெக்ஸின் சென்டர்ஸைச் சந்தியுங்கள்'' என்ருர்

நிருபர்கள் அதிர்ந்து போனுர்கள்.

அது குருவானவரின் சாப்பாட்டு அறை. நடுவில் பெரிய மேஜை கிடந்தது. அந்த மேஜையின் ஒரு தொங்கலில், கையில் சிலுவையொன்றை இறுக்கமாகப் பற்றிப் பிடித்தபடி நிருபர்களையெல்லாம் மருள மருளப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்—

ஒரு அழகி.

நிருபர்கள் திகைப்பதைக் கண்டு குருவானவர் மீண்டும் பேசினுர்: ''இப்போது பிரிட்டனில் பேய் பூஜை நடைபெற்று வருவது உங்களுக்குத் தெரியும் அல்லவா? இந்தப் பேய் பூஜைகளில், சாத்தானின் சக்தியைப் பயன் படுத்திப் பல பயங்கரக் காரியங்கள் செய்யப்படுவதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். பேயை வணங்கும் அந்த இருள் மதத்தவர்களின் தலைவன் அலெக்ஸ் சென்டர்ஸின் மனைவி மெக்ஸின் சென்டர்ஸ் இவள், தான் இவ்வளவு நாளும் ஆண்டவருக்கு எதிராக நடந்துவிட்டதை உணர்ந்து, மனம் திருந்தி என்னிடம் அடைக்கலம் புகுந்திருக்கிருள்...''

நிருபர்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாக விளங்கியது.

நடுங்கியவாறு தங்களைக் கவனித்துக்கொண்டிருக்கும் அப் பெண்ணை அவர்கள் பார்த்துக்கொண்டு நின்ருர்கள். துடிப்புள்ள இளம் நிருபர் ஒருவர், கதிரையை இழுத்துப்போட்டு அவளுக்கு அருகில் உட்கார்ந்தார். தனது டேப் ரிக்கார்டரைத் தட்டிவிட்டார்.

''திருமதி மெக்ஸின்...... பேய் வழிபாட்டாளர்களை விட்டு நீங்கள் ஓடிவரக் காரணம் என்ன?'' என்று அந்த நிருபர் கேட்டார்.

மெக்ஸின் மயக்கத்தில் இருப்பதைப் போல அந்த நிருபரைப் பார்த்தாள். அவளின் இமைகள் துடிக்கவில்லை. பேசும்போது ஆணுடைய குரலைப் போலிருந்தது.

''அந்தப் பேரோவின் ஆவி அடிக்கடி என்னிடம் வந்தது. முதலில் இரவில் மாத்திரம் வந்துகொண்டிருந்த ஆவி, பகலிலும் வரத் தொடங்கியது. என்னிடம் என்னை அறியாமலேயே, அந்த ஆவியின் மீது ஒருவித பாசம் எழுந்துவருவதை உணர்ந்தேன். அது காதலாக மாறிவிடுமோ என்று பயமாக இருந்தது. எனக்கு அறிமுகமான சாத்தானின் துணையுடன் பேரோவின் ஆவியை என் அருகில் வராமல் பண்ண முயன்றேன். பேரோவின் ஆவி என்னைக்கொல்ல முயன்றது......''

குரல் தள தளக்க அழகி மெக்ஸின் பேசிக்கொண்டே சென்ருள்.

அந்த நிருபர் அவளைத் தடுத்து நிறுத்தினர்.

''என்ன சொல்கிறீர்கள்? ஒன்றுமே விளங்கவில்லையே'' என்ருர்.

குருவானவர் மெக்ஸினுக்கு அருகே வந்து அவளின் தோளில் கையை வைத்தார். ''மகளே! நடந்ததை ஆரம்பம் முதல் சொல்லு...... அப்போதுதான் இவர்களுக்கு விளங்கும்'' என்ருர்.

26 வயது நிரம்பிய அழகி மெக்ஸின் சென்டர்ஸ், தான் பேயின் காதலியாக இருந்தது எப்படி? பேய் தன்னுடன் உடல் உறவு கொண்டது எப்படி? தாங்கள் பேயை வணங்குவது எப்படி? பேயை ஏவி விட்டு மனிதர்களைப் பழிவாங்குவது எப்படி? அதனிடமிருந்து தப்பி வந்தது எப்படி? என்ற இரகசியங்களை கொஞ்சம் கொஞ்சமாக வெளியிடத் தொடங்கினுள்.

இங்கிலாந்தின் அலட்ரீப் எட்ஜ் பகுதியைச் சேர்ந்த அழகி மெக்ஸினின் கதை உங்கள் இரத்தத்தை உறைய வைக்கும். வாசித்துப் பாருங்கள்.

# விற்பனைக்குரிய புத்தகங்களின் விபரம்

| புத்தகத்தின் பெயர் | எழுதியவர் | விலை |
|---|---|---|
| குமாரபுரம் | ஏ. பாலமனோகரன் | —3.40 |
| புதிய தலைமுறைகள் | வை.அஹ்மத் | —3.90 |
| அந்தரங்க கீதம் | உதயணன் | —3.60 |
| உலகங்கள் வெல்லப்படுகின்றன | கே. டானியல் | —3.60 |
| பிரளயம் | செங்கைஆழியான் | —3.40 |
| வரலாறு அவளைத் தோற்றுவிட்டது | கே. ஆர். டேவிட் | —3.60 |
| கிரௌஞ்சப்பறவைகள் | வ. அ. இராசரத்தினம் | —3.90 |
| நெஞ்சக்கனல் | கே.வி.எஸ். வாஸ் | —3.40 |
| உமையாள்புரத்துஉமா | புரட்சிபாலன் | —4.40 |
| நெஞ்சில் ஓர் இரகசியம் | கருணசேன ஜயலத் | —4.90 |
| யாத்திரை | பொ. பத்மநாதன் | —3.90 |
| கனவுகள் வாழ்கின்றன | இந்திராதேவி சுப்பிரமணியம் | —3.90 |
| நான்கெடமாட்டேன் | க.அருள்சுப்பிரமணியம் | —3.60 |
| இரவின் முடிவு | செங்கை ஆழியான் | —3.90 |
| விடிவுகால நட்சத்திரம் | கே. விஜயன் | —4.90 |
| போடியார் மாப்பிள்ளை | எஸ். ஸ்ரீ ஜோன்ராஜன் | —3.60 |
| போராளிகள் காத்திருக்கின்றனர் | கே. டானியல் | —3.40 |
| காலங்கள் சாவதில்லை | தெளிவத்தைஜோசப் | —3.90 |
| ஊமை உள்ளங்கள் | ஞானரதன் | —3.60 |
| காட்டாறு | செங்கை ஆழியான் | —4.90 |

# சாத்தானின் ஊழியர்கள்

## 1. பாழடைந்த சுரங்கத்தில் பதினெரு நாட்கள்

“அல்ட்ரீப் எட்ஜ் பகுதி நிலக்கரிச்சுரங்கம் நிறைந்தது. அங்குதான் நான் என் அம்மாவுடனும், அப்பாவுடனும் வசித்து வந்தேன்.

என் அப்பா ஒரு கிளப்பில் வேலே செய்தார். பெரும் சூதாடி. கிடைக்கும் பணத்தைச் சூதாட்டத்தில் இழந்து விட்டு வெறும் கையுடன் வீட்டுக்கு வருவார்.

அம்மா, மதத்தில் தீவிர பற்றுக்கொண்ட கத்தோலிக்கப் பெண். ஆனுல், பிற்காலத்தில் அவளுக்குப் பேய் மதத்தில் நம்பிக்கை வந்துவிட்டது. என்னேப் பேய் மதத்தில் சேர்த்துவிட்டதும் அவள்தான்!

அவள் மதத்தில் நம்பிக்கையிழந்து, பேயைப் பின்பற்ற ஆரம்பிப்பதற்குக் காரணமாக இருந்த சம்பவம் எனக்கு இன்னும் நன்ருக ஞாபகம் இருக்கிறது.

அப்போது எனக்குப் பதின்மூன்று வயது. பள்ளிக்கூடம் போய்க்கொண்டிருந்தேன்.

திடீரென அம்மாவுக்குத் தடிமல் ஏற்பட்டது. பின் காய்ச்சல் வந்தது. கால்கள் இரண்டும் மரக்கட்டைகளாக வீங்கிவிட்டன. இரண்டு நாட்கள் நான் பள்ளிக்கூடம் போகாமல் அவளுக்கு உதவியாக இருந்தேன்!

வழமையாக நாங்கள் போகும் டாக்டரிடம் காட்டிப் பார்த்தாள். மருந்து கொடுத்தார். குணமாகவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அம்மாவின் முழு உடலும் வீங்கத் தொடங்கியது.

என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தசமயம், அம்மாவின் சிநேகிதி ஒருத்தி வந்தாள். மார்கிரெட்மாமி என்று அவளை நான் அழைப்பேன். அம்மாவை கண்டு அவள் திடுக்கிட்டுப்போனாள்! உடல் அவ்வளவு வீங்கிய பிறகும் சும்மா இருக்கிறாயே என்று கடிந்தாள்.

டாக்டரின் மருந்துக்கு குணமாகாமல் போன விஷயத்தை அம்மா சொன்னாள்.

மார்கிரெட் மாமி கொஞ்சநேரம் யோசித்தாள். பிறகு 'இது டாக்டரின் மருந்துக்குக் குணமாகாது. நான் ஒரு ஆளை அழைத்து வருகிறேன்...! அவர் குணமாக்கித் தருவார்' என்றாள்.

மார்கிரெட் மாமி சொன்னதை அம்மா பெரிதுபடுத்திக்கொள்ளவில்லை. ஆனால், மாமி மறுநாள் ஒரு மனிதரை அழைத்து வந்துவிட்டார். ஒல்லியான மனிதர். குழிவிழுந்த கன்னங்கள்! பார்க்கப் பைத்தியக்காரனைப் போலிருந்தார். ஆனால், அந்த மனிதரின் கண்களுக்கு ஒரு வித காந்த சக்தி இருந்தது. அவரின் பேச்சும் அப்படித்தான்! கேட்கச்சுவையானதாகவும், குரல் கம்பீரமாகவும் இருந்தது!

அவர்தான் அலெக்ஸ்சென்டர்ஸ்!

அந்த மனிதர் என் எதிர்காலக் கணவராக வருவார்-எனது தலையெழுத்தையே மாற்றியமைப்பார் என்று அப்போது நான் கருதவில்லை.

அந்த மனிதரும் என்னைக் கொஞ்சமும் லட்சியம்செய்ய வில்லை.

மார்கிரெட் மாமி, அவரின் பெயரைச்சொல்லி அறி முகம் செய்தாளே தவிர, அவர் யார்? எப்படிப்பட்டவர் என்று சொல்லவில்லை.

அந்த மனிதர் படுக்கை அறைக்கு வந்தார். கதிரையில் உட்கார்ந்து அம்மாவையே பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு ஒரு கிளாசில் தண்ணீர் கொண்டுவரும்படி சொன்னார்.

நான் கொண்டு வந்தேன். கிளாஸை வாங்கித் தனது மெல்லிய விரல்களினால் வளைத்துப்பிடித்து, அதில் உள்ள நீரையே பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு,தன் பாக்கெட்டிலிருந்து எதையோ எடுத்தார்.

மெல்லிய சிலுவையைப்போன்றதொன்று. அதை நீரில் சற்று நனைத்துக்கொண்டு என்னவோ முணுமுணுத்தார். பிறகு அம்மாவிடம் நீட்டி, அதைக்குடிக்கும்படி சொன்னார்.

அம்மா தயங்குவது தெரிந்தது. மதத்தில் தீவிர நம்பிக்கை கொண்ட அவள் மந்திரத்தை நம்பப்பயப்படுகிறாள் என்று தெரிந்தது. மாமி முன்னால் வந்தாள். கிளாசை வாங்கி, அம்மாவிடம் கொடுத்து, ''குடி, எல்லாம் சரியாகி விடும்...!'' என்றாள். அம்மா குடித்தாள். அவள் அருவருப்போடு குடிப்பது தெரிந்தது.

அதன்பிறகு அலெக்ஸ் போய்விட்டார். மார்கிரெட் மாமி, சிறிதுநேரம் இருந்துவிட்டுப் போனாள். மாலையில் அப்பா வந்ததும்,அம்மா பகல் நடந்ததுபற்றிச்சொன்னாள். அப்பா குடும்ப விவகாரத்தில் கொஞ்சமும் கவனம் செலுத்தாத மனிதர்! இதெல்லாம் அனாவசியமான வேலை என்று சொன்னார். தன்பாட்டில் படுத்துவிட்டார்.

காலையில் விழித்ததும், எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அம்மாவின் வீக்கமெல்லாம் வற்றிவிட்டது. அவள் சுகமில்லாமல் வருமுன்னர் எப்படி இருந்தாளோ, அப்படி இருந்தாள்.

அப்போது எனக்கு அவ்வளவு விபரம் தெரியாவிட்டாலும், எல்லாவற்றையும் ஓரளவு புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அம்மாவும், தான் குணமடைந்துவிட்டதைக் கண்டு ஆச்சரியம் அடைந்திருந்தாள்.

அலெக்ஸின் மந்திரம் அதிசயிக்கத்தக்க விதத்தில்அம்மாவைக் குணமாக்கிவிட்டது.

அம்மா என்னைப்பார்த்துமார்கிரெட் மாமியைஅழைத்து வரும்படி சொன்னாள். போய் அழைத்துவந்தேன்.

அம்மா மாமியையும், அலெக்ஸையும் வாயாரப் புகழ்ந்தாள். மாமிக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

என் அம்மா மெதுமெதுவாகப் பேய் பூஜைக்காரர் பக்கம் சேர்ந்தது இப்படித்தான்.

ஆரம்பத்தில், அலெக்ஸூம்,மார்கிரெட் மாமியும் பேய் பூஜைக்காரர்களென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால், சிறு தலையிடி வந்தால்கூட மார்கிரெட்மாமி மூலமாக, அலெக்ஸை வரவழைத்து தண்ணி மந்திரித்துக் குடிக்கும் அளவுக்கு நிலைமை மாறியது!

இப்படியே, அலெக்ஸ் எங்களின் குடும்ப நண்பராகிவிட்டார். படிப்படியாக அவரும் மாமியும் பேய் பூஜைக்காரர்கள் என்று தெரிந்தது. நாங்கள் அதிர்ச்சியடையவில்லை. காரணம், அந்த அளவுக்கு எங்கள் மனம் பக்குவப்பட்டுவிட்டது!

ஒருநாள்இரவு அம்மா என்படுக்கை அறைக்குவந்தாள். ''நாளை மாலை உன் தோழிகளுடன் ஊர்சுற்றப் போய்விடாதே. நான் வெளியே போகிறேன். அதனால் வீட்டில் இருந்துகொள்'' என்றாள்.

அப்போது அப்பா சில இரவுகளில் வீட்டுக்கு வரமாட்டார். அப்பா என்று ஒரு மனிதர் பெயரளவில்தான் இருக்கிறார் என்று எண்ணிக்கொண்டு இருந்தேன். அதனால், அப்பாவைப்பற்றிய பிரச்சினை எழவில்லை.

வழக்கமாக அம்மா இரவுகளில் வெளியே செல்வது கிடையாது. என்ருலும், அவள் எங்கே போகிருள் என்று நான் விசாரிக்கவில்லை.

இரவு அவள் எப்போது வந்தாளென்று தெரியாது. காலையில் நீண்டநேரம்வரை களைப்போடு உறங்கிஞள். இரவு அவள் சென்றஇடம்பற்றிக் கேட்டேன். அவள் சொன்னதைக் கேட்க ஆச்சரியமாக இருந்தது.

பேய் பூஜைக்குப் போயிருக்கிருள். அலெக்ஸ் அவளை வரச்சொல்லியிருக்கிருர். பேய் பூஜை, அவள்மனதில் நல்ல இடம் பிடித்திருந்தது. அதில் ஏராளமான ஆட்கள் கலந்து கொள்கிருர்களாம்.

முழு இங்கிலாந்திலும் உள்ள 'பேய் மதத்'தவர்களின் தலைவர் அலெக்ஸ்தாஞம்!

அலெக்ஸ், பார்ப்பதற்கு அப்படி நோஞ்சானைப்போல இருந்தாலும் 'மிகப்பெரிய ஆள்' என்ருள் கண்களை அகல விரித்துக்கொண்டு.

அதன் பிறகும் அவள் பலதடவை சென்ருள்.

அலெக்ஸ் அடிக்கடி வீட்டுக்கு வந்து போஞர்! அவரோடு வேறு ஆட்களும் வருவார்கள்.

எங்கள் வீட்டிலும் பேயை வரவழைக்கும் மந்திரங்கள் நடக்கத்தொடங்கின. இவை பெரிய பூஜைகள்அல்ல, சாதாரண பூஜைகள். இந்தப் பூஜைகளை நான் ஆவலோடுபார்த்துக்கொண்டிருப்பேன். வேடிக்கையாக இருக்கும். இப்படி இருக்கும்போதுதான், ஒரு நாள் இது நடந்தது.

எங்களின் வீட்டுக்கு அலெக்ஸ், தனது நண்பர்களான ஒரு தம்பதிகளுடன் வந்திருந்தார். அவர்கள் எல்லோரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது, நான் அவர்களுக்கு காப்பி எடுத்துச் சென்றேன்.

அலெக்ஸ் என்னைக் கூர்மையாகப் பார்த்தார். பிறகு அம்மாவைப் பார்த்து, ''உங்கள் மகளின் எதிர்காலத்தைப் பார்க்கவேண்டும்'' என்ருர். அம்மாவின் முகம் மலர்ந்தது.

'சரி' என்ருள். அன்றிரவே அதை செய்யலாம் என்று அலெக்ஸ் சொன்ஞர். எனக்குப் பெரும் சந்தோஷமாக இருந்தது.

இரவு நீண்டநேரம் அவர்கள் அனைவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். அலெக்ஸுடன் வந்த தம்பதிகள் போய்விட்டார்கள். அலெக்ஸ் அம்மாவுடன் இருந்தார்.

சிறிது நேரத்தில் அம்மா என்னைக்கூப்பிட்டாள். பூஜைக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகின. நான் பேயின் காதலியாக மாறுவதற்கு அஸ்திவாரம் இடப்பட்ட சம்பவம் அதுதான்.

என் அம்மாவின் படுக்கை அறைக்கு அடுத்த அறையில் தான் பூஜை வேலைகள் நடைபெறுவதுண்டு. அந்த அறைக்குள் நானும், அம்மாவும், அலெக்ஸும் இருந்தோம்.

அலெக்ஸ் சப்பாத்துக்களையும், சேர்ட், கோட்டையும் கழற்றிவிட்டு வெறும் உடலுடன் இருந்தார். கறுத்த ஸ்கார்ப் ஒன்றை எடுத்து தலையை மூடிக்கொண்டார். கீழே உட்கார்ந்து என்னைத் தன் முன்ஞல் இருக்கச் சொன்ஞர். பக்கத்தில் அம்மா இருந்தாள்.

ஊதுவத்தி கொளுத்தப்பட்டு, சாம்பிராணி போடப்பட்டது. அலெக்ஸ் கண்களை மூடிக்கொண்டு என்னவோ மந்திரங்களைச் சொன்ஞர். போகப்போக அவரது உடல் நடுங்கத் தொடங்கியது.

நான் கண்ணிமைக்காமல் அலெக்ஸைப் பார்த்துக் கொண்டு இருந்தேன்: அவரது மெல்லிய வெறுமையான உடல் உருக்கொண்டு ஆடியது. முன்ஞல் இருக்கும் சாம்பிராணித் தட்டில் இருந்து எழும் புகை அவரது முகத்துக்குத் திரையிட்டுக் கொண்டிருந்தது. அவரைப் பார்ப்பதற்கே பயமாக இருந்தது.

கண்களை மூடிக்கொண்டிருந்தவர் திடீர் எனத் திறந்தார். மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருக்கும் போதே அவரின் இரண்டு கைகளும் உயர்ந்து என் தோள்களுக்கு வந்தன.

எனது உடல் சிலிர்த்தது. அவரது கைகள் மரக்கட்டைகளைப்போல இருந்தன. விரல்கள் இறுக்கமாகத் தோள்களைப் பிடித்துக்கொண்டன.

என்னைக் கூர்மையாகப் பார்த்துக்கொண்டே பேசத் தொடங்கினார்.

எனது கடந்தகால வாழ்க்கையைப் பற்றிச் சொன்னார். பிறகு எதிர்காலத்தில் நடக்கப்போவதைப் பற்றிச் சொன்னார். நான் படிப்பை முழுமையாக முடிக்க மாட்டேன். ஆனால், இங்கிலாந்தில் பிரபலம்பெற்ற பெண்ணாக விளங்குவேன் என்றார்.

அம்மா, இடைக்கிடை கேள்விகள் கேட்டாள்.

நான் எந்த விதத்தில் பிரபலம் பெறுவேன் என்று கேட்டாள். அலெக்ஸ் என்னைப்பார்த்துக்கொண்டே பதில் சொன்னார். அவரின்குரல் தெளிவாக, கூர்மையாக வெளியே வந்தது. ''இந்த யுவதி பேயின் புகழை உலகெங்கும்பரவச் செய்வாள்'' என்றார்.

அம்மா அதிர்ந்துபோய் அப்படியே உட்கார்ந்திருந்தாள். நானும் திகைத்துப்போனேன். அலெக்ஸின் கைகள் என்தோளைவிட்டு அகன்றன. கொஞ்சம் கொஞ்சமாக அப்படியே அடங்கிவிட்டார்.

எல்லாம்முடிந்து முன் ஹாலுக்குப் போயிருந்து பேசிக்கொண்டிருக்கும்போது நானும் அங்கே இருந்தேன்.

அலெக்ஸ் சொன்ன விஷயங்களின் அர்த்தத்தை அம்மா கேட்டாள். ஆனால், அவருக்குத் தான் என்ன சொன்னார் என்றே தெரியவில்லை. தன் உடலில் ஆவி ஒன்று புகுந்து அந்த விஷயங்களை வெளியிட்டதால், தனக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாதென்று அவர் சொன்னார்.

பிறகு, அவர் சொன்னவற்றை அம்மா சொல்ல, அவர் விளக்கம் கொடுத்தார். எனது ராசிப்படிக்கு மந்திர உலகில் நல்ல எதிர்காலம் இருக்கிறதாம்.

அவர்களின் பேய்க் கடவுள்கள் இலகுவில் எல்லோருடனும் நட்பு கொள்ளமாட்டார்கள். ஒரு குறிப்பிட்ட ராசிக்காரர்களுடனேயே சிநேகம் கொள்வார்களாம்.

எனது ராசி அதற்குச் சாதகமாக இருக்கிறதாம். இதற்குப்பிறகு என்னைப்பற்றி அவர்கள் அவ்வளவு பேசவில்லை. ஆனால், அன்று அலெக்ஸ் சொன்ன விஷயங்கள் என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டன. பேய்மதத்தில்சேர்ந்து மந்திரங்கள் சொல்லவேண்டும். அதிசயிக்கத்தக்க முறையில் மற்றவர்களின் வியாதியைக் குணப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

அலெக்ஸுடன் நன்ருகப் பழகத் தொடங்கினேன். அவரின் அழகான, சாதுர்யமான பேச்சுக்கள் என்னைவெகுவாகக் கவர்ந்துகொண்டிருந்தன.

ஒருநாள் அவர் சில மந்திர 'நோட்ஸ்'களைக் கொண்டு வந்து என்னிடம்தந்தார். அவற்றைப்படித்து டைப் செய்து கொடுக்கும்படி சொன்ஞர். அதில் எதுவும் எனக்கு விளங்காவிட்டாலும் டைப் செய்து கொடுத்தேன்.

அவருக்கு மிகவும் சந்தோஷம். உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். இந்த மந்திரங்களை எனக்கும் படிப்பித்துத் தாருங்கள் என்றேன்.

சம்மதம் சொன்ஞர். இதைப்பற்றி அம்மா எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. நான்மந்திரங்கள் படிப்பது நல்லதுஎன்று ஒத்துப்பாடிஞள்.

அலெக்ஸ் சிரித்தார்!

''மெக்ஸ் அது இலகுவான காரியமல்ல. முதலில் நீ ஞானஸ்நானம் பெற வேண்டும். அதற்குப் பதிஞெரு நாட்கள் கோவிலில் இருந்து தவம் செய்ய வேண்டும்'' என்ருர்.

அதற்குப் பரவாயில்லை என்றேன்.

எனக்கு எல்லாம் ஒரு திகில்அனுபவமாக இருந்தது. அதஞல், என்னை அழைத்துச் செல்வதற்கான நாளை அலெக்ஸ் குறிப்பிட்டதும் மிகவும் சந்தோஷமாக இருந்தது.

குறிப்பிட்ட தினம் இரவு அலெக்ஸ் வந்தார்.

அதற்கு முன் எனக்குத்தேவையான விசேட உடைகளை எடுத்துத்தயாராக வைத்திருக்கும்படி அவர் சொல்லிஇருந்த தால் எல்லாவற்றையும் தயாராக்கி வைத்திருந்தேன்.

ஒரு சோடி தூய வெள்ளை உடை, மெல்லிய துணியி ஞல் தைக்கப்பட்டது. ஒரு தலையணை, படுக்கைக்குத்தேவை யானவைகள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு அவரோடு புறப்பட்டேன். அம்மா, வாசலுக்கு வந்து என் நெற்றியில் முத்தம் கொடுத்து வழி அனுப்பி வைத்தாள்.

நானும் அலெக்ஸூம் அவரின் காரில் சென்றேம், கார் ஓடிக்கொண்டிருக்கும்போது, தனது மந்திர விஷயங்கள் பற்றி அவர் சொன்னர். அவர் செய்வது எகிப்திய மாந்தி ரீகமாம். அது மிகவும் பொல்லாததுடன், பலன்சீக்கிரத்தில் கிடைத்து விடுமென்றும் சொன்னர்.

பல நூறு வருடங்களுக்கு முன்பு இறந்த எகிப்திய மன் னர்களான, 'பேரோ'க்களின் ஆவிகளுடன் அவருக்குத் தொடர்பு இருக்கிறதாம்! பல ஆவிகள் தாங்கள் இறந்ததும் புதைக்கப்பட்ட இடத்தில் பல பெறுமதியான பொருட்கள் வைக்கப்பட்டு இருப்பதாகவும், அவை எங்கு இருக்கின்றன என்ற இரகசியத்தையும் வெளியிட்டு இருக்கின்றனவாம்.

நான் எகிப்திய பிரமிட்டுக்களைப் பற்றி நிறையக் கேள் விப்பட்டிருக்கிறேன். அவற்றினுள், அந்தக்கால மன்னர் களின் பொக்கிஷங்கள் எல்லாம் இருக்கின்றன என்று தெரியும். அந்தப் பொக்கிஷங்கள் கிடைத்தால் ஒரே நாளில் கோடீஸ்வரராகிவிடலாம்.

அதனுல், அந்தப் பொக்கிஷங்களை எடுக்க முயன்ருல் என்ன என்று கேட்டேன்.

அலெக்ஸ் பதில்சொல்லவில்லை. சிரித்துவிட்டுஇருந்தார்.

கார் இருண்ட வீதிகளில் ஓடி நகரைக் கடந்தது.

பாழடைந்த சில கட்டிடங்கள் இருக்கும் இடத்திற்கு அருகில் நின்றது. நன்ருகப் பார்த்தேன். அது என்ன

இடம் என்று எனக்குப் புரிந்தது. பழைய நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கும் பகுதி அது.

அங்கு நிலக்கரி முடிந்துவிட்டதாலோ என்னவோ அதிகாரிகள் அந்த சுரங்கங்களை மூடியிருந்தார்கள்.

அங்கே, ஏன் அலெக்ஸ் காரை நிறுத்துகிறாரென்று நான் யோசித்த அதே சமயம், அவர் இறங்கு என்று எனக்கு உத்தரவிட்டார். என் தலையணையையும், சீட்டையும் அவர் எடுத்துக்கொள்ள, நான் மற்றப்பார்சலை எடுத்துக்கொண்டு காரைவிட்டு இறங்கினேன். அவர் டார்ச் விளக்கொன்றைக் கையில் வைத்திருந்தார். அதைத் தட்டி விட்டு, வெளிச்சத்தைப் பாய்ச்சிக்கொண்டு முன்னால் நடந்தார். நான் பின்னால் சென்றேன். ஒற்றையடிப்பாதையில் நடந்தோம். பாழடைந்து கிடக்கும் நிலக்கரிச் சுரங்கத்தின் காரியாலயத்துக்குச்சென்றோம். அப்போதுதான் அங்கு வேறொருகார் நிற்பதை நான் கண்டேன். என்றாலும், நான் அதைப்பற்றி எதுவும் கேட்கவில்லை. மனதில் கொஞ்சம் பயம் பிடிக்கத் தொடங்கியது.

கட்டிடத்தின் வாசல் கதவு பாதி உடைந்திருந்தது. அதைக் கடந்து உள்ளே சென்றோம். வழிநெடுக பொருட்களும், மரக்கட்டைகளும் சிதறிக் கிடந்தன. தூசியும், நிலத்தவளைகளும் ஏராளம்.

மற்றொருஅறையைக் கடந்துகட்டிடத்தின்உள்ளேவந்துவிட்டோம்.அலெக்ஸ்நின்றார்.தன்கையில் இருக்கும் தலையணையையும்,படுக்கையையும் என்னிடம்தந்துவிட்டு,டார்ச் விளக்கைக் கீழே பாய்ச்சினார். அப்போதுதான் தரையிலிருக்கும் சிறியகதவுஒன்றை நான் கண்டேன். அதை எம்பி உயர்த்தினார்.திறந்தது, உள்ளே படிக்கட்டுகள் சென்றன.அது சுரங்கத்துக்குள் செல்லும் பாதை.

எனக்குத் திக்கென்றிருந்தது.

இந்தப்பாழடைந்த சுரங்கம் இடிந்து விழுந்து எங்களை மூடிக்கொண்டால் என்ன செய்வது?

அலெக்ஸின் குரல் என் சிந்தனையைத் தடைசெய்து, பயத்தையும் போக்கியது! ''மெக்ஸின் கவனமாக உள்ளே இறங்கு'' என்றார்.

என்னிடம் இருந்த பொருட்களை எல்லாம் அவர் வாங்கிக்கொண்டார். என்கையில் டோர்ச்சைத் தந்து முதலில் உள்ளே இறங்கச் சொன்னார்.

நான் இறங்கினேன்.

அந்தப் படிகளில் மாத்திரம் சுமார் பதினைந்து நிமிடங்கள் சென்றன. பின் சுரங்கம் வழியாக நடந்தோம். அந்த சுரங்கத்தில் பல கிளைச் சுரங்கங்கள் இருந்தன.

ஆனால், அலெக்ஸோ பழக்கப்பட்டவரைப் போல நேரான வழியில் என்னை அழைத்துப்போனார். இறுதியாக ஒரு கதவு வந்தது. அலெக்ஸ் அதில் மூன்றுமுறை தட்டினார். கதவு திறக்கப்பட்டது! உள்ளே பார்த்ததும் நான் ஆச்சரியப்பட்டேன்.

பாழ்பட்டு, தூசி அடைந்து போய்க் கிடக்கும் அந்த நிலக்கரிச் சுரங்கத்தில் எந்த மனித ஜீவனாவது இருக்கும் என்று நான் கொஞ்சமும் கருதவில்லை.

கதவு திறக்கப்பட்டதும், மூன்று பெண்களும், இரண்டு ஆண்களும் நின்றார்கள். அதோடு நாங்கள் கடந்து வந்த சுரங்கப்பகுதிக்கு முற்றிலும் மாறுபட்ட அமைப்பைக் கொண்ட அறையாக அது தெரிந்தது.

வாசலில் நின்ற அத்தக்கணம், எனக்கு அந்தஅறையின் உட்பகுதியை நன்றாகப்பார்க்கச்சந்தர்ப்பம்கிடைக்கவில்லை அதற்குள்ளாக உள்ளே நின்ற அந்தப் பெண்களில் ஒருத்தி ''வாருங்கள்... நீண்ட நேரமாக உங்களுக்காகக் காத்திருக்கிறோம்'' என்றாள்.

நாங்கள் உள்ளே சென்றோம். அந்த மூன்று பெண்களில் இருவர் முப்பதுவயதைக்கடந்தவர்கள். ஒருத்தி யுவதி. அவளுக்கு வயதுஇருபது இருக்கலாம். மிகவும் கவர்ச்சியாக உடையணிந்திருந்தாள். அவளின் மார்பகங்கள் இரண்டும் அரைவாசி வெளியே தெரிந்துகொண்டிருந்தன.

ஆண்களில் ஒருவருக்கு ஐம்பது வயதிருக்கும். வழுக்கைத் தலையர். குட்டையான மனிதர். அடுத்தவருக்கு முப்பத்தி ஐந்து வயதிருக்கலாம். கண்ணுடி அணிந்து, அழகாக காட்சி அளித்தார்.

அவர்களுக்கு என்னை அறிமுகம் செய்துவைத்தார் அலெக்ஸ்.

அந்தப் பெண்களில் மிகவும் இளமையான, கவர்ச்சியாக உடையணிந்திருக்கும் பெண்ணின் பெயர் யூஜின்.

அவள் என்னைப்பார்த்து அழகாகச் சிரித்தாள்.

எல்லோரும் உள்ளே சென்ருேம். உள்ளே போகப் போகத்தான் அங்கு நடக்கும் விஷயங்களைப்பற்றி என்ஞல் கொஞ்சம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது!

அந்த மண்டபம் ஒரு கோவிலைப்போல நேர்த்தியாக வைக்கப்பட்டிருந்தது. நடுவில் மேடைபோன்ற பலிபீடம் இருந்தது. மெழுகுதிரி பற்றவைப்பதற்கான ஸ்டாண்டுகள் ஏராளமாக இருந்தன. வேறுபல அதிசயமான பொருட்களும் இருந்தன.

அங்கே சென்றதும் பேய் மதத்தில் சேர்ந்து, பேயின் புகழைப்பரப்ப நான்முன்வந்திருப்பதற்காக மூன்று பெண்களும் என்னைப் பாராட்டினுர்கள்.

நான் அதிசயமாக எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே சடங்குக்கு நேரமாகிறது என்று அலெக்ஸ் அவசரப்படுத்திஞர்.

பெண்கள் மூவரும் ஒரு பெட்டி வைக்கப்பட்டிருந்த இடத்துக்குச் சென்ருர்கள். அது பழங்காலத்துத் தடித்த பெட்டி!

அதைத் திறந்து பல பொருட்களை எடுத்துச் சென்று, பலிபீடத்தில் வைத்தார்கள்! இறுதியாக அலெக்ஸ் அங்கு சென்ருர். மிகவும் பயபக்தியுடன் பெட்டிக்குள்ளிருந்து ஒரு பொருளை எடுத்தார். அதைக்கண்டதும் நான் மிகவும் ஆச்சரியம் அடைந்தேன். அது தங்கநிற சிலுவையைப் போல இருந்தது. ஆஞல், மேலேவளையமாக இருந்தது.

அவர், அதை எடுத்துப்போய், பலிபீடத்தின் நடுவில் வைத்தார். அதுதான் பேயின் அடையாளம் என்று எனக்கு பின்னர் தெரிந்தது!

நான்கு கத்திகளும்,கொண்டுசென்று வைக்கப்பட்டன.

மற்ற ஆண்கள் இருவரும் பலிபீடத்திலிருந்த மெழுகு திரிகளைப் பற்ற வைத்தார்கள்.

பெண்கள் பெட்டிக்குள் இருந்து கறுப்பு அங்கிகளை எடுத்து அணிந்துகொண்டார்கள். அந்த அங்கிகளைப் பார்த்ததும், என் உடல் சிலிர்த்தது! முதுகுப்புறத்தில் மண்டையோட்டின் அடையாளம் இருந்தது.

யூஜின் என்னை அழைத்தாள். எல்லோரும் பலிபீடத்துக்குச் சென்றோம்.

அவளும், மற்ற இருபெண்களும், மற்ற இரண்டு ஆண்களும், நானும் பலிபீடத்துக்கு முன்னால், தரையில் உட்கார்ந்துகொண்டோம்.

அலெக்ஸ் பீடத்துக்கு முன்னால் சென்று சில மந்திரங்களைச் சொன்னார். சிறிதுநேரம் சென்றது. அவர் யூஜினுக்கு சைகை காட்டினார். அவள் உடனே என்னை எழும்பச் சொல்லி தானும் எழுந்தாள்.

சாம்பிராணித்தட்டுஒன்றை எடுத்தாள்.அதன்புகையை என் முகத்தில் விழவைத்துவிட்டு, என் கால்கள் இரண்டுக்கும் நடுவில் தட்டை வைத்தாள். பிறகு, பின்புறமாக வந்து எனது உடைகளைக் களையத்தொடங்கினாள். நான் நிர்வாணமாக்கப்படுவதைக் கண்டு முதலில் வெட்கப்பட்டேன். ஆனால், அந்த இடத்தின் சூழ்நிலை வெட்கத்தை மறந்து அப்படியே நிற்க வைத்தது!

எல்லா உடைகளும் களையப்பட்டன. அப்படியே நின்றேன். கீழிருந்து எழும் சாம்பிராணிப்புகை என்னை மூடிக்கொண்டு இருந்தது. அலெக்ஸ், பல மந்திரங்களை உச்சரித்துக்கொண்டிருந்தார். திடீரென பேயின் அடையாளத்தைக் கைகள் இரண்டிலும் தூக்கினார்! பலமாக சில மந்திரங்களை

சொல்லிவிட்டு, முன்னால் இருக்கும் மெழுகுதிரியை ஊதி அணைத்தார்.

திடீரென அங்கு மயானஅமைதி நிலவியது. யூஜின் என் கையைப் பிடித்திழுத்தாள். அவளுடன் சென்றேன்.

இருவரும் இடப்பக்கமாகச் சென்றோம். ஒரு கதவைத் திறந்துவிட்டாள். பெரிய அறை இருந்தது. அங்கு அவர்களின்பொருட்கள் ஏராளமாக இருந்தன! அந்த அறையைக் கடந்து அடுத்த அறைக்குச் சென்றோம்.

அது ஒரு குளியல் அறை- குளியல் தொட்டிஒன்று இருந்தது. நீர்க் குழாய் ஒன்றிருந்தது!

யூஜின், என்னைத்தொட்டிக்குள் இறங்கச் சொல்லிவிட்டுக் குளிப்பாட்டினாள்! அவள் என்னைக் குளிப்பாட்டியது ஒரு அதிசயமானவிதத்தில். நான் நீரினுள் இருக்கும்போது பஞ்சு ஒன்றை எடுத்து ஏதோ மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு மேல் முழுவதும் தடவிவிட்டாள்.

கடைசியில், அந்தப் பஞ்சை அறையின் ஒரு மூலையில் நிலத்தில் புதைத்தாள். நான் துடைத்துவிடப்பட்டதும் எனக்கு மெல்லிய, வெள்ளை நிறத்திலான அங்கி தரப்பட்டது. திரும்பவும் பூஜை மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

இதுவரைக்கும் நானும், யூஜினும் ஒருவார்த்தையாவது பேசிக்கொள்ளவில்லை.

பூஜைமண்டபத்தில் அலெக்ஸ் தொடர்ந்து ஏதோ பூஜைகள் நடத்திக்கொண்டிருந்தார். கண்களை மூடியபடி ஜெபித்துக்கொண்டிருந்தார். யூஜின், என்னைப் பலிபீடத்தின் முன்பாக நிறுத்தினாள். அவள் ஒதுங்கிவிட்டாள்.

கொஞ்சநேரம் சென்றது. அலெக்ஸ்என்னைநோக்கி வந்தார். மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு, என்னை மூன்று முறை வலம் வந்தார். பிறகு எனது வெள்ளை அங்கியைப் பிரித்தார். தோள்களைப் பிடித்தார். என்னை நிலத்தில் சரியச் சொல்கிறார் என்று தெரிந்தது. சாய்ந்து மல்லாந்து படுத்துக்கொண்டேன்.

பலிபீடத்தில் எரிந்துகொண்டிருக்கும் மெழுகுதிரிகளை எடுத்தார்.

இரண்டு மெழுகுதிரிகள் என் இருபக்க மார்பகங்களின் மீதும் வைக்கப்பட்டன. வேறொன்று அடிவயிற்றில் வைக்கப்பட்டது. மற்றது நெற்றியில் வைக்கப்பட்டது.

பிறகு மதுக்கிண்ணம் ஒன்றை எடுத்துவந்தார்! மந்திரங்களைச் சொல்லிக்கொண்டே ஆள்காட்டிவிரலினால் கிண்ணத்தைத்தொட்டு மெழுகுதிரிகளைச் சுற்றி உடலில் வட்டமிட்டார். கிண்ணத்தில் சிவப்பு நிறச் சாயம் இருந்திருக்கிறது. எல்லாம் முடிந்ததும் என் உடலில் நான்கு வட்டங்கள் இருப்பதைக் கண்டேன்!

அந்தச் சடங்கு முடிந்ததும், அவர் மீண்டும் பலிபீடத்தை நோக்கிச் சென்றார். யூஜின்வந்து மெழுகுதிரிகளை எடுத்துச்சென்று பலிபீடத்தில் வைத்துவிட்டு வந்து என்னை எழுந்து நிற்குமாறு சொன்னாள். அலெக்ஸ் வந்தார். அவரின் கையில் சிவப்புநிற தடித்த முத்துக்கள் கோர்க்கப்பட்ட மாலை ஒன்றிருந்தது. அதை என் கழுத்தில் அணிவித்தார்.

யூஜின், வெள்ளை அங்கியை எடுத்து என்மேல் போட்டாள். அத்தோடு அன்றைய சடங்கு முடிந்துவிட்டது.

அலெக்ஸ், தனது கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டே இனி பதினொரு நாட்களுக்கு நான் தியானத்தில் ஈடுபடவேண்டியிருப்பதால் இந்தச் சுரங்கத்திலேயே இருக்கவேண்டும் என்றார். எனக்குத் துணையாக யூஜினும், மற்ற இரு பெண்களும் இருந்து எல்லாவற்றையும் சொல்லித்தருவார்கள் என்றார்.

அதன்பிறகுதான் என்னைமதத்தில்சேர்க்கும்பிரமாண்டமான சடங்கு நடைபெறும் என்றார். பிறகு, அவரும், மற்ற ஆண்கள் இருவரும் போய்விட்டார்கள்.

அந்தப் பாழடைந்த நிலக்கரிச் சுரங்கத்தின், பேய்க் கோவிலில் எப்படித்தான் பதினொரு நாட்களைக் கழிக்கப் போகிறேனோ என்று முதலில் நான் பயந்து கொண்டிருந்

தேன். ஆனால், நான் எதிர்பார்த்ததுபோல அங்கு போரடிக்கவில்லை. அத்தோடு அங்கு இருக்கப்போவதைக் குறித்து நான் கொஞ்சமும் பயப்படவில்லை என்பதையும் சொல்லிவிடவேண்டும்.

மூன்று பெண்களும் என்னுடனேயே இருந்தார்கள். குறிப்பாக யூஜின் சதா என்னுடனேயேயிருந்தாள். சுருக்கமாகச்சொல்வதானால், அவள்தான் எனது ஆசிரியை. மற்றவர்கள் இருவரும் உதவியாளர்களைப்போலவே இருந்தார்கள். மற்றவர்கள் இருவரும்தான் வெளியேசென்று உணவு வாங்கி வருவார்கள்.

இரவு வெகுநேரம் கழித்து உறங்குவதால், எல்லோரும் பகல் பொழுதானதன் பின்புதான் விழித்தெழுவோம். எழுந்ததும், முதல் வேலைகளை முடித்துவிட்டுச் சாப்பிடுவோம். பிறகு யூஜின், மந்திரக்கதைகளை எனக்குச்சொல்லுவாள். அந்தக் கதைகள் கேட்பதற்குச் சுவையாக இருந்தாலும், அவற்றை யூஜின் ஏன் எனக்குச் சொல்கிறாள் என்று போகப் போகத்தான் தெரிந்தது.

அந்தக் கதைகள்மூலமாக தங்களின் மதத்தில் எனக்கு அதிகமான ஈடுபாட்டை ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் அவர்களின் நோக்கம்.

பிற்பகல்பொழுதில் மதச் சடங்குகள் நடத்துவது எப்படி? அவற்றை நடத்துவதால் கிடைக்கும் பலன்கள் என்ன என்று அவள் விளக்குவாள். மாலையில் நடக்கும்நிகழ்ச்சிகள் சுவையானதாக இருக்கும். சில நாட்களில் மந்திரங்கள் சொல்லித்தருவாள்.

அவற்றை நான் பாடமாக்கவேண்டும். சில நாட்களில் பூஜைகள் நடத்தும் விதத்தைச் சொல்லித் தருவாள்.

இரவு நீண்ட நேரத்துக்குப் பின்பே மூவரும் படுப்போம். நாங்கள் படுப்பது பூஜைப் பொருட்கள் வைக்கப்படும் அறையில். அங்கு நிலத்தில் இரண்டு மெத்தைகள் இருந்தன. அவற்றில் படுத்துக்கொள்வோம்.

அந்த அறையில் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போது நடு இரவில் பலத்த சத்தங்கள் கேட்கும். ஆரம்பத்தில் அந்த சத்தத்தைக்கேட்டு நான் மிகவும் பயந்தேன். மூன்ருவது நாள் நான் அதைப்பற்றி யூஜினிடம் கேட்டேன்.

அவள் சிரித்தாள். அது சுரங்கத்தில் இருக்கும் எலிகள் ஏற்படுத்தும் ஓசை என்று சொன்னுள்.

எலிகள் என்ருல் எனக்கு மிகவும் பயம். அதனுல், அவற்ருல் நமக்கு ஆபத்து எதுவும் நேராதா என்று கேட்டேன். இல்லை என்று சொன்னுள் யூஜின். அவை அந்த அறைக்குள் நுழைய முடியாதபடிக்கு கதவு இறுக்கமாக இருக்கிறது என்ருள். இப்படியே பதினெரு நாட்கள் கழிந்தன. அங்கிருந்து நாங்கள் வெளியேறுவதற்கு முதல்நாள் யூஜின் என்னிடம் நான் பாடம்செய்திருந்த மந்திரங்களைச் சொல்லும்படி கேட்டாள்.

சரியாகச் சொன்னேன்! மிகவும் சந்தோஷப்பட்டாள். நான் ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் மனப்பாடம்செய்துவிட்டதாகவும், நல்ல அறிவாளி என்றும் பாராட்டினுள்.

என்னை பெண் மந்திரவாதியாகவும், உதவிப் பெண் சாமியாராக்குவதற்கும் அலெக்ஸிடம் சிபார்சு செய்வதாச் சொன்னுள்.

நான் அந்தப் பதினெரு நாட்களும் அந்தச் சுரங்கத்தினுள் இருந்தது அந்தப் பதவிகளைப் பெறுவதற்கு ஆயத்தமாகிக்கொள்வதற்காகத்தான் என்று அப்போதுதான் எனக்குத் தெரிந்தது.

நான் வீடு திரும்பியதும் என் அம்மாவுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஒரு தெய்வத்தைக் கவனிப்பதைப்போல சகல மரியாதைகளுடனும்என்னைக் கவனித்தாள்.

முன்னரைப்போல என்னிடம் வேலைகள்எதுவும் சொல்வது கிடையாது. வீட்டுக்குவரும் அவளின் சிநேகிதிகளிடம் எல்லாம் என்னைக்காட்டி, நான் பெண் சாமியார் ஆகப்போகிறேன் என்று பெருமையோடு சொல்லிக்கொண்டிருந்தாள்.

அப்போது நான் சதா வெள்ளை உடை அணிந்துகொண்டிருந்தேன். அந்த உடையில் நான் மிகவும் அழகாக இருந்தேன். என்னைப் பார்ப்பதற்கு எனக்கே மிகவும் பெருமையாக இருந்தது.

நான் சுரங்கத்திலிருந்துவந்த மூன்ருவது நாள் அலெக்ஸ் வீட்டுக்கு வந்தார். என்னைப் பெண் சாமியாராக்கும் சடங்கு விரைவில் நடைபெற இருப்பதாகவும் அதற்குத் தயாராக இருக்கும்படியும் சொன்னார்.

அதன்பின் திடீரென ஒருநாள் இரவு வந்தார். அது ஒரு வியாழக்கிழமை. என்னைப் பெண் சாமியாராக்கும் சடங்கு சனிக்கிழமை இரவு நடைபெற இருப்பதாகவும், அதனுல் நான் மறுநாளும், அதற்கு அடுத்தநாளும் விரதம் இருக்க வேண்டும் என்றும் சொன்னார். அந்த இரண்டு நாட்களும், நான் காலையிலேயே நீராடவேண்டும். எவரையும் பார்க்காமல், பேசாமல் ஒரு அறைக்குள் அடைபட்டுஇருக்கவேண்டும். எனக்கு நீராகாரம் மாத்திரமே கொடுக்கப்படவேண்டும். நான் இருக்கும் அறையில் சதா ஊதுபத்தியும், சாம்பிராணியும் புகைவிட்டுக்கொண்டிருக்க, நான் மந்திரங்களைச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும். சனிக்கிழமை இரவு சரியாகப் பத்து மணிக்கு என்னை அழைத்துப்போக அலெக்ஸ் வருவார்.

இந்த நிபந்தனைகளைப் போட்டுவிட்டு அவர் போய்விட்டார். அம்மாவுக்கு உற்சாகம் தாளவில்லை.

என்னைப் படுத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு என்னவெல்லாமோ செய்துகொண்டிருந்தாள். மறுநாள் காலையில் என்னுடைய விரதம் ஆரம்பமாகியது!

காலையில் அம்மா என்னை எழுப்பிவிட்டு குளிக்கஅழைத்துப் போனுள். பின் வெள்ளை உடையை அணிவித்து என் படுக்கை அறையைச் சுத்தம் செய்து அங்கே அழைத்துப் போனுள்.

அன்றும், மறுநாளைப் போல அம்மா கஷ்டப்பட்டு வேலைகள் செய்ததை நான் என்றுமே பார்க்கவில்லை. அத்

தோடு, அவள் ஓடியாடி வேலைகள் செய்வதைப் பார்க்க விநோதமாகவும் இருந்தது.

நான்பிறருடன் பேசக்கூடாதென்று அலெக்ஸ்சொன்ன தால், அவள் என்னோடு ஒருவார்த்தையாவதுபேசவில்லை. ஆனால், அடிக்கடி அறைக்குள் வந்து ஊதுபத்திகளையும், சாம்பிராணியையும் எரித்துவிட்டுச் சென்றாள்.

நான் கட்டிலில் உட்கார்ந்துகொண்டு மந்திரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தேன்.

இரண்டாவது நாள் இரவு –

எனக்கு மிகவும் களைப்பாக இருந்தது. உணவுஇல்லாத தால் உடல் பலமிழந்தது போல இருந்தது. தலை சுற்றுவது போலவும் இருந்தது. பத்துமணி ஆகியது. அலெக்ஸின் கார் வந்து வாசலில் நிற்கும் சத்தம் கேட்டது.

சில விநாடிகளில் அவர் வந்தார். அவர் நான் இருந்த அறைக்குள் புகுந்ததும் நான் திடுக்கிட்டேன். காரணம், அவர் பூஜை செய்யும்போது அணியும் கறுத்தஉடையுடன் அங்கு வந்திருந்தார்.

அவர் ஒருநாளும் அந்த உடையுடன் வருவது கிடை யாது.

என்னைப் பார்த்துவிட்டு 'வா போகலாம்' என்றார்.

நான் எழும்பிவந்தேன். நான் நடக்கச்சிரமப்படுவதை கண்டதும், என்னைப் பிடித்துக்கொண்டு அழைத்துப் போனார். அம்மாவும் எங்களோடு வர முயன்றாள்.

ஆனால், அலெக்ஸ் வேண்டாமென்று சொல்லிவிட்டார்.

அவளை வரவேண்டாம் என்று சொன்னதும், அம்மா வின் முகம் கறுத்துவிட்டது. என்றாலும், அவள் எதுவும் சொல்லாமல் பேசாமல் இருந்துவிட்டாள்.

அவளுக்கு அலெக்ஸ் மீது பயம்.

கார் ஓடிக்கொண்டிருக்கும்போது, அலெக்ஸ் என்னோடு எதுவுமே பேசவில்லை பதினைந்து நிமிடங்கள் போல கார் ஓடிவிட்டு, பேர்க்லி வீதியைத்தாண்டி ஒரு வீட்டின் முன்

ணல் நின்றது. அலெக்ஸ் இறங்கிப்போய் கேட்டைத் திறந் தார். காரை உள்ளே எடுத்துவிட்டு, இறங்கிப் போய்க் கேட்டை மூடிவிட்டு வந்து மீண்டும் ஓட்டிச் சென்ருர்.

அப்போதுதான் நான் அந்த வீட்டைப் பார்த்தேன். மாளிகைபோன்ற வீடு. ஆனுல், இருளில் மூழ்கிக்கிடந்தது.

அலெக்ஸ் போர்ட்டிகோவில் காரை நிறுத்தியதும், இரு வரும் இறங்கினேம். அவர் கதவைத் திறந்து என்னை உள்ளேவிட்டார்.

உள்ளே மங்கலான விளக்குகள் எரிந்துகொண்டிருந் தன. இருவரும் மாடிக்குச் சென்ருேம்.

மாடியில் ஒரு கதவைத் திறந்து உள்ளே போனேம்.

அங்கு பட்டப் பகல்போல லைட் எரிந்துகொண்டிருந் தது.

## 2. வாலிப சாமியாரின் விபரீத விளையாட்டு!

அந்த மண்டபம் ஒரு கோவிலைப் போல இருந் தது. சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும் அங்கு கூடி இருந்தார்கள். நடுவில் இடம் விட்டு இரு பக்கமும் முழந்தாளில் இருந்து கொண்டிருந் தார்கள்.

பக்திமயமாக இருந்தார்கள்.

தொங்கலில் அவர்களுக்கு முன்னல் பளிங்குப் பீடம் ஒன்றிருந்தது.

அதன் பின்னால், அலெக்ஸைப்போல கறுத்த உடை அணிந்திருந்த இரண்டு மனிதர்கள் நின்றார்கள். அவர்களுக்குப் பின்னால் சுவரில் இராட்சத பேய் அடையாளம் இருந்தது.

கதவு திறக்கப்பட்டபோது எவரும் திரும்பிப் பார்க்கவில்லை. அவ்வளவு பக்திச் சிரத்தையோடு இருந்தார்கள்.

அலெக்ஸ் மெதுவாகக் கதவை அடைத்துவிட்டு என்னை நேரே பலி பீடத்துக்கு அழைத்துப் போனார்.

இதற்கிடையில், இந்தப் பலி பீடம் எப்படிப்பட்டது என்று நான் விளக்கிவிட வேண்டும்.

கற்களால் ஆன இரண்டு கால்களுக்கு மேல் ஐந்து அடி அகலமும், எட்டு அடி நீளமும் கொண்ட மேடை போன்ற கல் வைக்கப்பட்டதுதான் அது.

நானும், அலெக்ஸூம் முன்னால் சென்றபோதுதான் பீடத்துக்கு முன்னால் முழந்தாளிட்டிருந்த அந்த வாலிபனைக் கண்டேன்.

அவனும் என்னைப்போல வெள்ளை உடை அணிந்து பயபக்தியுடன் அங்கு முழந்தாளில் இருந்துகொண்டிருந்தான்.

பலிபீடத்தை அண்மித்ததும், அவனுக்கு அருகில் போய் இருக்கும்படி அலெக்ஸ் சொன்னார்.

சொல்லிவிட்டு அவர் பீடத்துக்கு அப்பால் நின்றுகொண்டிருக்கும் இரண்டு சாமிமார்களுக்கும் அருகில் சென்றார்.

நான் வாலிபனுக்கு அருகில் போய் முழந்தாளில் இருந்தேன். கடைக்கண்ணால் அவனைப் பார்த்தேன். அவனும் மெதுவாக என்னை நோட்டம் விடுவது தெரிந்தது. அழகானவனாக இருந்தான். வயது இருபத்தி ஐந்துதான் இருக்கும்.

அவனும் என்னைப்போல பேய் மதத்தில் புதிதாகச் சேர்ந்தவன் என்பது அப்போது எனக்குத் தெரியவில்லை.

என்னைப்போல அவனையும் சாமியாராக்குவதற்கு அப்போது பூஜை நடந்துகொண்டிருக்கிறது.

அலெக்ஸ் அந்த இரண்டு மனிதர்களுக்கும் நடுவில் போய் நின்ருர். அவரின் தோளில் தங்க நிற பட்டி ஒன்று மாட்டப்பட்டது. அவர்தான் தலைமை சாமியார் என்பதைக் காட்டுவதற்கு போடப்படும் பட்டி அது.

அலெக்ஸ் பலத்த குரலில் மந்திரங்களைச் சொல்ல, நானும் மற்றவர்களும் பதில் சொல்லிக்கொண்டிருந் தோம். என் பெயர் உச்சரிக்கப்பட்டது. அந்த வாலி பனது பெயரும் உச்சரிக்கப்பட்டது. அவனது பெயர் ஹரிஸ் என்று தெரிந்துகொண்டேன்.

ஆரம்பக்கட்ட மந்திரங்கள் முடிந்தன. அப்போது தான் எனக்கு அருகில் வந்த அந்தப் பெண்ணை நான் கவனித்தேன். அது யூஜின். அவளும் எனக்குப் பின்னுல் மற்றவர்களுடன் இருந்திருக்கிருள். நான் கவனிக்க வில்லை.

அவள் எங்களுக்கு முன்னுல் பலிபீடத்துக்கு அருகே போய் முழந்தாளிலிருந்தாள். பின் சிறிது நேரத்தில் எழுந்து நின்ருள். அமைதியாகத் திரும்பினுள். அவளின் முகத்தை நன்ருகக் கவனித்தேன்.

ஒருவித விகாரமான தோற்றம் பெற்றிருந்தது. கண்கள் அகல விரிந்திருந்தன. மெதுவாக நடந்து வாலி பனுக்கு முன்னுல் வந்தாள். அவனுடைய தோள்கள் இரண்டையும் மென்மையாகப் பிடித்தாள்.

அவன் எழுந்து நின்ருன். நான் அணிந்திருப்பதைப் போன்ற வெள்ளை நிற அங்கி ஒன்றையே அவனும் அணிந் திருந்தான். குருமார் அணியும் அங்கியைப் போன்றது அது. இடையில் பட்டி கட்டப்பட்டு, சில பெரிய பொத் தான்களினுல் திறப்பு இணைக்கப்பட்டிருக்கும்.

யூஜின், வாலிபன் ஹரிஸின் கண்களைப் பார்த்தாள். பிறகு பலத்த குரலில், ''இந்த உலகின் இரட்சகர் சாத்தான்தான்...... அவரே உனது தலைவர் என்றும், வழிகாட்டி என்றும் ஏற்றுக்கொள்கிருயா......?'' என்று கேட்டாள்.

அவன் ''ஆம்'' என்றான்.

''அவரது உண்மை ஊழியனாக நீ தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறாய்... எவருக்கும் கிடைக்காத இந்தப் பத வியை நீ உன் சுயதேவைக்குப் பயன்படுத்தாமல் பொதுநலத்துக்குப் பயன்படுத்துவேன் என்று சத்தியம் செய்......'' என்றாள்.

அவன் சத்தியம் செய்தான்.

யூஜின் பேசும்போது என் உடல் புல்லரித்தது. அவ ளது குரல் மிகவும் கூர்மையாக இருந்தது. அமைதியாக இருக்கும் அந்த மண்டபத்தில் பலமாக எதிரொலித்தது.

வாலிபன் ஹரிஸின் தோளிலிருந்த யூஜினின் கைகள் அப்படியே கீழே இறங்கி வந்து அவனுடைய அங்கியைப் பிணைத்திருக்கும் பட்டியில் நின்றன. மெதுவாக பட்டி யின் முடிச்சை அவிழ்த்தாள். பட்டி அகன்று பின்னால் தொங்கியது. பின் அவளின் கைகள் பட்டன்களை ஒவ் வொன்றாக நீக்கின.

இதைச் செய்யும்போதும் யூஜினின் கண்கள் அவனு டைய கண்களையே பார்த்துக்கொண்டிருந்தன.

இது நடக்கும்போது பலிபீடத்துக்கு அப்பால் நிற் கும் அலெக்ஸும், மற்ற இரு ஆண்களும் தங்கள் பாட் டில் மந்திரங்களைச் சொல்லிக்கொண்டும், சடங்குகளைச் செய்தவாறும் இருந்தார்கள். அவர்கள் யூஜினையோ, வாலிபனையோ, என்னையோ கொஞ்சமும் பார்க்கவில்லை.

யூஜின் அவனுடைய அங்கியை இணைத்திருக்கும் பட் டன்கள் அனைத்தையும் கழற்றிவிட்டாள். அங்கி பிரிந்து நடுவில் திறந்து நின்றது. அவள் அவனுடைய கைகள் இரண்டையும் நிமிர்த்தி அங்கியைக் கழற்றினாள்.

கழற்றி அப்படியே அவன் பின்னால் போட்டாள். எனக்கு நெற்றியில் கொஞ்சம் வியர்த்தது. காரணம் ஹரிஸ் நிர்வாணமாக நின்றான்.

யூஜின், அவனுடைய கண்களை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு திரும்பினாள். அவளுடைய பார்வை என் மேல் விழுந்தது.

அவளின் ஒவ்வொரு அங்க அசைவும், என்னைத் தடுமாற வைத்துக்கொண்டிருந்தது. இராணுவ வீரன் ஒருவனைப்போல உடலைக் கட்டுப்படுத்தி நடந்தாள்.

அவள் எனக்கு முன்னால் வந்ததும், அவ்வளவு நேரமும் எவ்வித அச்சமும் இன்றி இருந்த எனக்குப் பயம் ஏற்படத் தொடங்கியது.

முன்னால் நின்ற ஹரிஸிடம் கேட்ட அதே கேள்விகளை என்னிடமும் கேட்டாள். நானும் ஆம் என்று பதில் சொன்னேன்.

அவளின் கண்களைப் பார்க்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தேன். அவற்றில் தெரியும் ஒருவித ஒளி என் கண்களைக் கூச வைப்பதுபோல இருந்தது. கண்களை இமைக்காமல் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவளின் கைகள், என் உடையைக் களையும்போது, நான் விறைத்துப்போய் நின்றேன். பின்னால் ஏராளமான ஆட்களிருக்கிறார்கள். அவர்கள் எல்லோர் முன்னிலையிலும் நிர்வாணமாக நிற்பதென்பது சாதாரண காரியமா?

என்றாலும் என்னால், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தைரியம் இருக்கவில்லை.

யூஜின் வாலிபன் ஹரிஸையும், என்னையும் பார்த்து என் பின்னால் வாருங்கள் என்று சொன்னாள். இருவரும் சென்றோம். பலி பீடத்துக்கு அப்பால் அலெக்ஸும், மற்ற இருவரும் இருக்கும் இடத்தைத் தாண்டிச்சுவரை நோக்கிச் சென்றோம்.

சுவரிலிருக்கும் பேயின் அடையாளத்துக்கு முன்பாக முழந்தாளில் இருக்கச் சொன்னாள். இருந்தோம்.

அவள் அப்பால் போய்விட்டாள்.

அலெக்ஸ் பலத்த குரலில் மந்திரங்கள் சொல்லிக் கொண்டிருந்தார்.

திடீரென எங்கள் இருவரின் தலைகள் மீதும் இரண்டு சட்டி போன்ற பொருட்கள் வைக்கப்பட்டன. அவற்றில் நெருப்புத் தணல் கொட்டப்பட்டது.

அலெக்ஸ் திரும்பி ஏதோ மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு அவற்றில் என்னவோ போட்டார். இரண்டு சட்டிகளும் தீப்பிடித்து எரியத் தொடங்கின.

தீ சுவாலை விட்டு எரிந்தது. எனது தலைக்குள்ளிருப் பவை எல்லாம் கொதிக்கத் தொடங்குவதைப் போல் இருக் கும்போதுதான் அது அகற்றப்பட்டது. பின், அலெக்ஸ் ஏதோ மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு எங்கள் மீது தண்ணீர் தெளித்தார்.

பிறகு சிறிய வெள்ளிக் கோப்பை ஒன்றில் மந்திரித்த நீரையும், பஞ்சையும் எடுத்துக்கொண்டு முன்னால் வந் தார்.

எங்களுக்கு முன்னால் நின்று கோப்பையையும், பஞ்சையும் உயர்த்திப் பிடித்துக்கொண்டு, பலத்த குரலில் சில மந்தி ரங்களை உச்சரித்தார். அவர் அதைச் சொல்லிக்கொண் டிருக்கும் போதே யூஜின் என் அருகில் வந்தாள். என்னை பலி பீட மேடைக்கு மேல் படுத்துக்கொள்ளும்படி சொன் னாள்.

நான் அதில் ஏறுவதற்கு மற்ற ஆண்கள் இருவரும் உதவி செய்துவிட்டு, அகன்று மரியாதையாக நின்று கொண்டார்கள்.

யூஜின் என் அருகில் வந்து எனது தலையை நேராக சரி செய்துவிட்டாள். மார்பகங்களைப் பிடித்திழுத்து விட் டாள். கால்களிரண்டையும் அகற்றிவிட்டாள்.

மெதுவாக என் காதுக்கருகில் வந்து ''எது நடந்தா லும், உடலை அசைக்காமல் அப்படியே இரு'' என்று சொல்லிவிட்டு அப்பால் சென்றாள்.

அலெக்ஸ் தண்ணீர்ப் பாத்திரத்துடனும், பஞ்சுடனும் என்னிடம் வந்தார். தலையை நிமிர்த்திக் கூரையைப் பார்த்து ஏதோ மந்திரங்களை உச்சரித்துவிட்டு, பஞ்சைத் தண்ணீரில் நனைத்தார்.

என் உச்சந் தலையைப் பஞ்சால் தடவினார்.

பஞ்சை நீரில் கழுவிவிட்டு நெற்றியைத் துடைத்தார். பின் கழுத்து, அதன்பின் மார்பகங்கள் இரண்டும் பஞ்சி னுல் கழுவப்பட்டன. பின் அடி வயிறு, அதற்கு அடுத்து கால்கள் இரண்டு.

இப்படி என் உடல் முழுவதும், முக்கிய பகுதிகள் பஞ்சினுல் கழுவப்பட்டன. பின் அவர் அகன்று நிற்க, யூஜின், வாலிபன் ஹரிஸை அழைத்து வந்து எனக்கு அரு கில் படுக்க வைத்தாள். அவனும் என்னைப்போலவே அலெக்ஸினுல் கழுவப்பட்டான்.

அலெக்ஸ் பஞ்சையும், கோப்பையையும் தன் உதவி யாளர்களில் ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு, எங்களுக்கு அருகில் வந்தார். யூஜினும் வந்தாள். அலெக்ஸ் சாம்பி ராணித் தட்டை உயர்த்திப் பிடித்துக்கொண்டு மந்திரங் களைப் பலமாகச் சொல்ல, யூஜின், வாலிபனின் காதில் மெதுவாக முணு முணுத்தாள். அவன் திரும்பினுன்.

அப்போது நானும் அவனும் நேருக்கு நேர் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம்.

அவன் அழகான வாலிபன். கண்கள் பச்சை நிறத் தில் இருந்தன. ஆனுல், அவனுடைய செய்கை என்னை அதிரவைத்தது.

என் பக்கமாகத் திரும்பியவன், என்மீது வந்தான். திடுக்கிட்டுப் போனேன். அவன் என் கற்பைப் பறிக்கப் போகிருனு? நல்ல வேளையாகத் திரும்பி யூஜினைப் பார்த் தேன். என்னிடம் தெரியும் பதட்டத்தை அவள் கண் டிருக்கவேண்டும். என்னை எச்சரிப்பதைப்போல முறைத் துப் பார்த்தாள்.

எது நடந்தாலும் அமைதியாக இரு என்று அவள் சொன்ன வார்த்தைகள் ஞாபகம் வந்தன. பேசாமல் இருந்தேன். அவன் என்மீது தன் உடலை அழுத்தினுன். அப்படியே இருந்தான். நல்ல வேளையாக என் கன்னித் தன்மையைக் கெடுக்க முனையவில்லை.

நேரம் செல்லச் செல்ல, அவனது உடலின் பாரம் எனக்கு வலியைக் கொடுத்தது. தாங்கிக் கொண்டேன்.

அலெக்ஸ் எங்கள் மீது தண்ணீர் தெளித்தார்.

பின், சாம்பிராணித் தட்டையெடுத்துப் புகையை விட்டார். அதன் பின் அவர் கைகள் இரண்டையும் மேலே உயர்த்திக்கொண்டு, பலமாக மந்திரங்களை உச்சரிக்க, கூடி இருந்தவர்கள் பதில் சொன்னார்கள்.

பின், யூஜின் வந்து வாலிபன் ஹரிஸை என் மேல் இருந்து எழச் சொன்னாள். அவனைப் பலி பீடத்தில் இருந்து இறக்கி அப்பால் விட்டாள்.

இப்போது நான் மாத்திரம்தான் தனியாக அதில் படுத்திருக்கிறேன்.

அலெக்ஸின் உதவியாளர்களில் ஒருவர் அவரின் உடைகளைக் களைந்தார். எனக்குத் திகில் பிடித்தது. அலெக்ஸ் நிர்வாணமாக நின்றபோது அவரைப் பார்ப்பதற்கே அசிங்கமாக இருந்தது. மெல்லிய உடல், எலும்பும் தோலுமாக இருந்தது.

யூஜின் இரண்டு கத்திகளை எடுத்து வந்தாள்.

ஒன்று வெள்ளிப் பிடியைக் கொண்டது. மற்றது கறுத்தப் பிடியைக் கொண்டது.

வெள்ளிப் பிடி உள்ள கத்தி எனது கால்கள் இரண்டுக்கும் நடுவே வைக்கப்பட்டது. மற்றது எனது மார்புக்கு நடுவே வைக்கப்பட்டது. யூஜின் தங்க நிற வைன் கிண்ணம் ஒன்றை எடுத்து வந்து கையில் வைத்துக்கொண்டு நின்றாள்.

மண்டபம் மயான அமைதியில் மூழ்கியிருந்தது. அலெக்ஸின் குரல் மாத்திரம்தான் கேட்டது.

நான் மெதுவாக அலெக்ஸைப் பார்த்தேன். அவர் எங்கோ பார்த்துக்கொண்டிருந்தார். அவரின் கண்கள் இரண்டும் இரத்தமாகச் சிவந்திருந்தன. முகத்தில் ஒருவித வெறி தெரிந்தது.

அவர் மூச்சை உள்ளே இழுக்கும்போது, மார்பு எலும்புகள் புடைத்துக்கொண்டு வெளியே வந்தன.

திடீரென அவரின் குரல் அடங்கியது.

ஊசி விழுந்தாலும் சத்தம் கேட்கும் அமைதி அங்கு நிலவியது.

திடீரென மண்டபத்தில் இருந்து மணி அடிக்கப்பட்டது. எல்லோரும் ஏக காலத்தில் ஏதோ ஒரு மந்திரத்தை உச்சரித்தார்கள்.

பின் அமைதி.

யூஜின் முன்னல் வந்து ஒருவித தைலத்தை என் அடிவயிற்றில் பூசினுள். கத்தியை அகற்றிவிட்டு கால்களிலும் பூசினுள். கத்தியை வைத்துவிட்டு, எனக்கு அருகில் குனிந்து, அலெக்ஸ்சொல்லும் மந்திரத்தைச் சொல்லு என்ருள்.

அவள் விலகிக்கொண்டதும், அலெக்ஸ் ஒரு மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினுர். என் மெய் சிலிர்த்தது. அந்த மந்திரம் என்னதென்று எனக்குத் தெரியும்.

பேயை அழைக்கும் மந்திரம். அலெக்ஸ் சொல்லச் சொல்ல நானும் சொன்னேன்.

கொஞ்சம் கொஞ்சமாக அவரின் உடல் நடுங்கத் தொடங்கியது. மந்திரம் முடியும் தருணம் வரும்போது, மின்சார அதிர்ச்சி பட்டுக்கொண்டிருப்பதைப்போல உடல் நடுங்கியது.

திடீரென நின்ருர். வாயைத் திறந்துகொண்டு என் முகத்தைப் பார்த்தார்.

அது மனித முகமல்ல; விகாரமான பேயின் முகத்தைப் போன்றிருந்தது.

பூ...... என்று ஊதினுர்.

என் கண்களையே என்னுல் நம்பமுடியவில்லை.

அவரின் வாயில் இருந்து நெருப்பு, சுவாலையாக என்னை நோக்கி வந்தது. முகத்தைச் சுடுவதைப் போல இருந்தது. என்னைப் பார்த்து மூன்று முறை அப்படி ஊதி

ஞர். என் உடலில் தீப்பற்றிக்கொள்ளப் போகிறதென்று பயந்தேன். நல்ல வேளையாக அப்படி எதுவும் நடக்க வில்லை.

அதை முடித்துவிட்டு அவர் நின்றதும், யூஜின் என் முன்னுல் வந்து, என் கால்களுக்கு நடுவில் இருக்கும் கத்தியை எடுத்துப் பய பக்தியுடன் அலெக்ஸிடம் கொடுத் தாள்.

அலெக்ஸ் அதைக் கையில் வாங்கிக்கொண்டு, மேலே உயர்த்தி என்னவோ சொன்ஞர். பின் கத்தியை தன் மார்புக்கு கொண்டு வந்தார்.

எனக்கு நடுக்கம் ஏற்படுவதுபோல இருந்தது.

ஆனுல், ஒருவித மயக்கம் என்னை அசைய விடாமல் அப்படியே வைத்துக்கொண்டிருந்தது.

அவர் கத்தியை மார்புக்கு கொண்டு வந்து கீறினுர்.

அதில் கத்தியினுல் பேயின் அடையாளத்தை வரைந் தார். இரத்தம் வடிந்தது. உடனே யூஜின் முன்னுல் வந்து, வைன் கிண்ணத்தை அவரின் அடிவயிற்றில் பிடித் தாள். இரத்தம் அதற்குள் வழிந்தது.

முழு இரத்தமும் அதனுள் வடிந்ததும், ஆண் உதவி யாளர்களில் ஒருவர் முன்னுல் வந்து கத்தியை வாங்கி, என் கால்களுக்கு இடையில் எடுத்த இடத்தில் வைத்தார். வேறொருவர் வந்து தண்ணீரில் நனைத்த பஞ்சை எடுத்து அலெக்ஸின் மார்பில் கத்தியினுல் வெட்டப்பட்ட இடங் களைத் துடைத்தார்.

எனக்கு ஆச்சரியம் ஒன்று காத்திருந்தது.

பஞ்சினுல் துடைத்ததும் காயம் எல்லாம் மறைந்து விட்டது. வெட்டப்பட்ட இடம் முன்னரைப்போல காட்சி யளித்தது.

இது ஒரு கண்கட்டு வித்தையென்று நினைத்தேன். கிண்ணத்திலும் இரத்தம் இருக்காதென்று நினைத்தேன். ஆனுல், என் எண்ணம் தவறுனது என்று பின்னர்தான் தெரிந்தது.

யூஜின், நான் படுத்திருக்கும் பலிபீடத்துக்கும், அலெக்ஸுக்கும் நடுவில் நின்று வைன் கிண்ணத்தை ஏந்திப் பிடித்தாள்.

அதேசமயம், கத்தியை என் கால்களுக்கு நடுவில் வைத்த மனிதர் கறுத்த துணி ஒன்றை எடுத்து வந்து என் முகத்தை மூடினுர்.

அதன்பிறகு என்ன நடந்தது என்று சரியாக எனக்குத் தெரியவில்லை. ஆனுல், வைன் கிண்ணம் என் மார் பகங்களுக்கு மேல் வைக்கப்படுவதை உணர்ந்தேன். முதலில் குளிர்ந்தது. சில நிமிடங்கள் சென்றதும், நெஞ்சில் என்னவோ செய்வதுபோல இருந்தது.

இதயத்துக்குள் என்னவோ துடிப்பதுபோல இருந்தது. படிப்படியாக அந்த உணர்வு உடல் முழுவதும் ஓடுவது போல இருந்தது.

இப்போது அலெக்ஸுடன் சேர்ந்து மண்டபத்திலிருந்தவர்களும் பலமாக மந்திரத்தை உச்சரித்துக்கொண்டிருந்தார்கள். என்னுல் அதை பொருட்படுத்த முடியவில்லை. காரணம் என் உடலுக்குள் ஏற்பட்டிருக்கும் அந்தப் பயங்கர உணர்வு என்னை என்னவோ செய்துகொண்டிருந்தது.

உடல் முழுவதும் ஓடிய அந்தப் புதுமையான உணர்வு மீண்டும் நெஞ்சுக்குத் திரும்பி வருவதைப் போலிருந்தது

தொண்டை அடைப்பதுபோல இருந்தது.

டக்கென்று அந்த உணர்வு நின்றது.

மண்டபமும் அமைதி கண்டது.

மணி அடிக்கப்பட்டது. அலெக்ஸின் குரல் பலமாகக் கேட்டது.

திடீரென நெஞ்சுக்குள் என்னவோ உருண்டது. நெஞ்சைப் பிழிந்து எடுப்பது போல இருந்தது.

நன்ருகப் பயந்துவிட்டேன். ஆண்டவரே... என்னைக் காப்பாற்றுங்கள் என்று கத்திக்கொண்டு எழ வேண்டும் போல இருந்தது. எழ முடியவில்லை.

உடலை அசைக்க முடியவில்லை. மூச்சு அடைத்தது.

நெஞ்சில் ஏற்பட்ட வலி கொஞ்சம் கொஞ்சமாக மேல் எழுந்தது. மார்பகங்கள் இரண்டிற்குள்ளும் அது புகுவது போல இருந்தது. மார்பகங்கள் இரண்டும் பலூனைப் போல விரிந்துகொண்ட மேலே எழுவது போலிருந்தது.

அதன் பிறகுதான் அந்த இராட்சத வலி எழுந்தது. முலைக் காம்புகளுக்கு அருகில் ஏதோ ஊருவதுபோலிருந்தது. பின்—

என் உடலில் ஏற்பட்ட வலிகள் எல்லாம் இரு முலைக் காம்புகளின் வலியாகவும் வெளியேறுவது போலிருந்தது. பம்ப் வைத்து உள்ளே இருப்பவற்றை எல்லாம் உறிஞ்சியெடுப்பது மாதிரி இருந்தது.

என் வாழ்வில் என்றுமே ஏற்பட்டிராத வலி ஏற்பட்டது. பலூனைப் போல ஊதிய மார்பகங்களுக்குள் இருக்கும் எல்லாம் உறிஞ்சி எடுக்கப்பட்டு, அவை சுருங்கிக்கொண்டு வருவதைப் போலிருந்தது.

பின், திடீரென அந்த வலி நின்றது. எனது உடலிலிருந்து பெரும் பாரம் ஒன்று இறக்கப்பட்டது போல இருந்தது. அதன் பின் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை.

ஆனால், அன்று என்ன நடந்தது என பின்னர் ஒரு தடவை யூஜின் விபரித்தாள்.

எனது உடலில் பேய் பூரணமாகப் புகுந்ததும், நான் ஆவேசம் கொண்டவளைப் போல எழுந்து பலி பீடத்தின் மேல் நிர்வாணமாக நின்று ஆடினேனும். அதன் பின், அன்று பூஜையில் கலந்துகொள்ள வந்த பலரின் பெயரைச் சொல்லி அழைத்து, அவர்கள் செய்த பிழைகள், எதிர் காலத்தில் சில நல்ல சம்பவங்கள் நடக்க அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்றெல்லாம் சொல்லி விட்டு மயங்கி விழுந்திருக்கிறேன். எனக்கு சுய உணர்வு வந்தபோது நான் அந்த மண்டபத்துக்கு உள்ளேயிருந்த ஒரு அறையில் இருந்தேன். அருகில் யூஜின் நின்றுகொண்டிருந்தாள்.

நான் பேய் சாமியாகிவிட்டதாகவும், இனி பல வேலைகளை செய்யலாம் என்றும் அவள் சொன்னாள்.

அவள் சொன்னது போலவே அதன் பின் என்னைத் தேடி பலர் வருவார்கள். தங்களின் வியாதிகளை குணப் படுத்த மந்திரங்கள் செய்யும்படி சொல்லுவார்கள். சிலர் தங்களின் கணவன்மார்களது கள்ளக் காதலிகளை கொல்லு வதற்கு ஏதாவது செய்துகொடுக்கும்படி கேட்டுக்கொண்டு வருவார்கள். ஆனால், நான் அந்த மாதிரியான வேலைகள் எதுவும் செய்யவில்லை. வியாதிகளைக் குணப்படுத்துவது போன்ற வேலைகளையே செய்தேன்.

இப்படி இருக்கும் போது, எனக்கு மன திருப்தியைக் கொடுத்த வேலை ஒன்றையும் நான் செய்ததுண்டு.

ஒரு நாள் திடீரென அலெக்ஸும் யூஜினும் வீட்டுக்கு வந்து என்னை அழைத்துக்கொண்டு சென்றார்கள். காரில் சென்றுகொண்டிருக்கையில்தான் எங்கே போகிறோம் என அலெக்ஸ் விபரித்தார்.

ஒரு பெண் திருமணம் செய்து பல வருடங்கள் ஆகின் றனவாம். அவளுக்கு குழந்தைகளே இல்லை. அவள் இது வரைக்கும் மூன்று தடவைகள் கருவுற்றபோதும், மூன்று தடவைகளும் கருச்சிதைவு நடந்துவிட்டதாம்.

அதனால் அவளுக்கு கருச்சிதைவு ஏற்படாமல், அவ ளின் வயிற்றில் குழந்தை தரித்து நிற்க வைப்பதற்காகவே என்னை அழைத்து வந்திருக்கிறார்களாம்.

இதைக்கேட்டதும் எனக்குத் தடுமாற்றமாக இருந்தது. இவ்வளவு பெரிய வேலையை என்னால் செய்ய முடியுமா என்ற சந்தேகம் அப்போதே ஏற்பட்டது.

கார் ஓர் சிறிய வீட்டின் முன்னால் நின்றது. மூவரும் இறங்கி அந்த வீட்டிற்குள் சென்றோம்.

அந்த வீட்டில் எனக்குப் பெரும் கௌரவம் கிடைத்தது. வீட்டுக்காரன் மகாராணியை வரவேற் பதைப் போல என்னை வரவேற்றான். அவனது மனைவி படுத்திருக்கும் அறைக்குள் சென்றதும், கட்டிலில் ஒரு பெண் படுத்திருந்தாள். அவளுக்கு அருகே அவளின் உறவினர் களான சில வயோதிபப் பெண்கள் நின்றுகொண்டிருந்

தார்கள். வானத்திலிருந்து குதித்த பெண்ணைப் பார்ப்பதைப்போல என்னைப் பார்த்தார்கள்.

எனக்கோ பெரும் தடுமாற்றமாக இருந்தது.

யூஜின்மீது எனக்கு இன்னும் நல்ல மதிப்பு இருக்கிறது. காரணம் அவளின் சில நல்ல குணங்கள்தான். நான் தடுமாறுவதை அவள் அவதானித்துக்கொண்டிருந்திருக்க வேண்டும். என் அருகில் வந்து ஏதோ ஒரு மந்திரத்தைச் சொல்லச் சொன்னாள். நான் பாடமாக்கியிருக்கும் மந்திரங்களில் ஒன்று அது. அதனால் உடனே ஞாபகம் வந்தது. அதைச் சொன்னேன். சொல்லி முடிக்கும்போது, என்னுள் என்னை அறியாமல் ஒருவித உணர்வு ஏற்படுவது தெரிந்தது.

அதே சமயம், யூஜின் ஒரு கிளாசில் தண்ணீர் எடுத்து வந்து என்முன் நீட்டிக்கொண்டு அதில் ஒரு விரலை விடச் சொன்னாள். அதேவேளை ஒரு மந்திரத்தைச் சொல்லச் சொன்னாள். நான் சொன்னேன். அது முடியும் போது— என்னிடம் அந்த வீட்டுக்காரி பயபக்தியோடு ஒரு துண்டுத் துணியைத் தந்தாள். அதைக் கைகளில் வாங்கும்போது தான் அது என்னவென்று எனக்குத் தெரிந்தது.

கட்டிலில் படுத்திருக்கும் பெண்ணுக்கு கருச்சிதைவு ஏற்பட்டபோது பாவிக்கப்பட்ட துணியின் ஒரு துண்டு அது. முழுவதும் இரத்தக் கறையாக இருந்தது. யூஜின் எனக்கு அறிவுரை வழங்க, அந்தத் துணியைக் கையில் வைத்துக்கொண்டு மந்திரம் சொன்னேன். பிறகு யூஜின் என்னிடமிருந்து தண்ணீரையும் அந்தத் துணியையும் வாங்கினாள். துணியில் தண்ணீர் தெளித்தாள். சில மந்திரங்கள் சொன்னாள். அதன் பின்பு துணிக்குத் தீ வைக்கப்பட்டது. அந்தத் தண்ணீரை பெண்ணின் உடல் முழுவதும் தெளித்து அவளுக்கு குடிக்கக் கொடுக்கப்பட்டது.

அதோடு அந்த வேலை முடிந்தது. மூன்று மாதங்களுக்குப் பின்னர் அந்தப் பெண் கருவுற்றாள் என்று கேள்விப் பட்டேன். அதன் பின்பு எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் அவளுக்கு குழந்தை பிறந்தது.

இதை ஏன் விபரிக்கிறேன் என்ருல், இதுபோல எத்தனையோ வேலைகளை நான் வெற்றிகரமாக செய்து முடித்தேன்: முதலில் யூஜின் என்னை வழி நடத்தினுலும் போகப் போக எனக்குத் தனியாக அவற்றைச் செய்து முடிக்கும் திறன் ஏற்பட்டது.

அவற்றைச் செய்வதில் எனக்குப் பெரும் ஆவலும் எழுந்தது. நான், ஒரு பெண்ணுக்கோ— ஆணுக்கோ ஏற்பட்டிருக்கும் தீராத வியாதியை தீர்த்துவிட்டதை உணரும்போது எனக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்படும்.

நாளுக்கு நாள் அந்த சக்தி அதிகரித்து வருவதை உணரும்போது எனக்குப் பெருமையாக இருந்தது.

அதோடு நாளுக்கு நாள் எனக்குப் பெரும் கிராக்கியும் ஏற்பட்டு வந்தது. தினமும் எவராவது ஒருவர் வந்து ஏதாவது ஒரு குறையைத் தீர்த்துத் தரும்படி சொல்லி என்னை அழைத்துப் போவார். இந்த வேலைகளுக்காக நான் பணம் வாங்கக்கூடாது என்பது அலெக்ஸின் கண்டிப்பான உத்தரவு.

அதே சமயம் எனக்குப் பிரதியுபகாரமாக ஏதாவது செய்துவிடவேண்டும் என்ற நோக்கில் பலர் பரிசுகள் கொண்டுவந்து தருவார்கள். அதை வாங்கிக்கொண்டு எங்களின் பேய்க் கடவுளுக்கு ஏதாவது காணிக்கை கொடுக்கும்படி அவர்களிடம் சொல்லுவேன்.

எனக்கு ஏற்பட்டிருக்கும் மதிப்பு அம்மாவுக்குப் பெரும் பெருமையைக் கொடுத்தது. அவள் என்னைத் தன் மகளைப்போலக் கவனிக்கவில்லை. தனது அம்மாவைப் போலக் கவனித்தாள்.

இதே சமயம் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் எங்காவது ஒரு இடத்தில் பேய் பூஜை நடக்கும்- அவற்றில் நான் கலந்துகொள்வேன். சில சமயங்களில் நான், யூஜின், வேறு சிலர் ஒன்ருக பூஜையில் கலந்து கொண்டு எங்களின் உடலுக்குள் பேயை வரவழைத்துக்கொள்வோம்.

இப்படி இருக்கும்போதுதான் ஒருநாள் பயங்கர சம்பவம் ஒன்று நடந்தது.

பேய்க் கடவுள்களும், இவர்களின் சக்திகளும் இலேசானவையல்ல என்று எனக்குக் காட்டிக் கொடுத்த சம்பவம் அது.

'பெட்டி' என்ற அழகான யுவதி ஒருத்தி புதிதாக எங்கள் சமயத்தில் சேர்க்கப்பட்டிருந்தாள். அவளுக்கும் என் வயதுதான் இருக்கும். அவளை பேய்க் கடவுளிடம் சமர்ப்பிப்பதற்கான வைபவத்திற்கு அலெக்ஸ் ஒழுங்குசெய்தார். இதை டாம்பீகமான முறையில் இல்லாமல் மிகவும் சாதாரணமாக செய்து முடிக்கவேண்டும் என்று அவர் விரும்பினார்.

அலெக்ஸின் வீட்டில் சடங்கை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

அந்த சடங்கு ஒருசெவ்வாய்க்கிழமைநடக்கப்போகிறது என்று நான் கேள்விப்பட்டேன். ஆனால், அதைப்பற்றி அவ்வளவாக அக்கறை கொள்ளவில்லை.

அந்தச் செவ்வாய்க்கிழமைக்கு முதல் நாளான திங்கட்கிழமை மாலை அலெக்ஸும் யூஜினும் பெட்டி என்ற அந்த யுவதியும் வந்தார்கள்.

அலெக்ஸின் நண்பர் ஒருவரின் வீட்டில் மிக முக்கியமான வேலை ஒன்றுக்கு செல்லவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டிருந்திருக்கிறது. அவர் யூஜினையும் தன்னோடுஅழைத்துக்கொண்டு செல்கிறாராம். அதனால் பெட்டியின் சடங்கை நடத்தும் பொறுப்பை என்னிடமும்—ஹரிஸ் என்றவாலிபனிடமும் ஒப்படைத்திருப்பதாக அலெக்ஸ் சொன்னார். (வாசகர்களுக்கு ஹரிஸ் என்ற வாலிபனை ஞாபகமிருக்கும். என்னோடு சாமியாக்கப்பட்டவன்)

நான் சரி என்று சம்மதித்தேன். இதுபற்றி ஏற்கனவே ஹரிஸிடம் அறிவித்துவிட்டதாகவும் அதனால் செவ்வாய் இரவு பத்து மணிக்கெல்லாம் தனது வீட்டில் சந்திக்கும்படியும் அலெக்ஸ் சொன்னார்.

எனக்கு யுவதி பெட்டியைப் பார்க்கும்போது என்னை அறியாமல் அவள்மீது ஒருவிதப்பற்று ஏற்பட்டது. தோற்றத்தில் யுவதியாகக் காட்சியளித்தாலும் சிறு குழந்தைபோல இருந்தாள்.

அலெக்ஸ் சொன்னபடி மறுநாள் சரியாக பத்து மணிக்கு அவரின் வீட்டுக்குச் சென்றேன். ஹரிஸும் பெட்டியும் அங்கு எனக்காக காத்துக் கொண்டிருந்தார்கள்.

அலெக்ஸின் வீடு அவ்வளவு பெரியதல்ல. அவர் ஒண்டிக் கட்டையாக வாழ்ந்து வந்தார். சாதாரணமாக உள் அறையில்தான் சடங்குகள் நடப்பது வழக்கம். நான் முதலில் யுவதி பெட்டியை அழைத்துப்போய் குளிப்பாட்டி வெள்ளைஉடை அணிவித்து அழைத்துவந்தேன். அலெக்ஸின் பெட்டியிலிருந்து தேவையான பொருட்களை எடுத்து வைத்ததும் சடங்கு ஆரம்பமாகியது.

இது எனக்கு நடந்ததுபோல பெரிய சடங்கு அல்ல—ஹரிஸுடன் சாதாரண சக்திகொண்ட ஒரு பேயே சிநேகமாகி இருப்பதால் அலெக்ஸிற்கு இருக்கும் சக்தி அவனுக்கு இருக்கவில்லை. அதனால் அவன் தனது உடலிலிருந்து இரத்தம் எடுக்கவில்லை. இரத்தத்துக்குப் பதிலாக திறமான வைனைப் பயன்படுத்தினோம்.

பெட்டி தரையில் படுத்திருக்க அவளின் முகம் கறுத்த துணியினால் மூடப்பட்டு மார்பில் வைன் கிண்ணம் வைக்கப் பட்டதும் அவள் வலியால் துடிப்பது தெரிந்தது. பேயின் அறிமுகத்தை வாங்கிக் கொடுக்கும் சடங்கில் அதுதான் முக்கியமான கட்டம். அதனால் நான் பயபக்தியுடன் ஒதுங்கி நின்றுகொண்டிருந்தேன்.

பெட்டிக்கு அருகில் நின்று ஹரிஸ் கைகளைஅகலவிரித்து மந்திரங்கள் சொல்லிக்கொண்டிருந்தான். அவனும்பெட்டியைப்போல நிர்வாணமாகவே நின்றுகொண்டிருந்தான். அவனுடைய கைகள் இரண்டிலும் ஒருவித தடித்த வெள்ளிக் காப்புகள் இருந்தன.

அப்போதுதான் நடக்கக் கூடாதது ஒன்று நடந்தது.

அவன் தலையைக் கவிழ்த்து பெட்டியைப் பார்த்தான்.

அவளின் கால்கள் இரண்டுக்கும் இடையிலும் கத்தி இருந்தது. மார்பில் மதுக்கிண்ணம். இடையை ஒருவிதமாக நெளித்துக்கொண்டிருந்தாள்.

அவளையே பார்த்துக்கொண்டிருக்கும் ஹரிஸின் முகத்தில் ஒருவித மாற்றம் ஏற்படுவதைக் கண்டேன். கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய வாய் மந்திரங்களைச் சொல்வதில் நின்று ஓய்ந்தது.

தன்னையே மறந்தவனாகக் குனிந்தான். அவளின் கால்களுக்கு இடையிலிருக்கும் கத்தியை எடுத்தான். மார்பில் இருக்கும் கிண்ணத்தை எடுத்து அப்பால் வைத்தான். அது எடுக்கப்பட்டதும் அவளின் உடல் ஒருமுறைபலமாக சிலிர்த்தது.

நான் பயந்துவிட்டேன். ''என்ன செய்கிறாய்?'' என்று அவனைப்பார்த்துக் கத்த வேண்டும்போல இருந்தது. ஆனால், தொண்டை அடைத்தது.

அடுத்ததாக அவன் அவளின் முகத்தை மூடியிருக்கும் துணியை அகற்றினான்.

அவன் செய்வது மிகவும் ஆபத்தான காரியம் ஒன்று—காரணம் வைன் கிண்ணம் மார்பில் வைக்கப்பட்டு — முகத்தில் கறுத்த துணி போடப்பட்டு ஒரு குறிப்பிட்ட மந்திரத்தை ஓதும் சமயம்தான் உடலுக்குள் பேய் புகுவதற்குத் தயாராகும். அதே வேளையில், திடீரென மந்திரத்தை நிறுத்தி அப்பொருட்களை அகற்றுவதன் மூலம் அவளின் உயிருக்கே ஆபத்தை உண்டு பண்ணலாம்.

அதனால்தான் நான் மிகவும் பயந்துபோனேன்.

ஆனால் அதிர்ச்சியில் என்னால் இருந்த இடத்தை விட்டு எழமுடியவில்லை. சத்தம்கூட வெளியே வரவில்லை.

விறைத்துப்போய் அப்படியே பார்த்துக் கொண்டு இருந்தேன்.

ஹரிஸ் மயக்கத்திலிருப்பவனைப் போல பெட்டியைப் பார்த்தான். பெட்டியின் முகத்தில் வேதனையின் அறிகுறி

கள் தெரிந்தன. பின் அவளின் பார்வை அவனது உடல் முழுவதும் ஓடியது. அவனது நோக்கம் அவளுக்கும் புரிந்திருக்கவேண்டும். அதே நேரம் அவன் அவளின் மார்பகங்களைப் பிடித்துக்கொண்டு அவளின் உதட்டில் முத்தமிட்டான்.

அவள்மீது சாய்ந்தான். அதற்குமேல் என்னுல்பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவன் அந்தயுவதியின் கற்பைப் பறிக்கப்போகிருன் என்று நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. ''ஹரிஸ்'' என்று கத்திக்கொண்டு எழுந்தேன். அவன் தலையை நிமிர்த்திப் பார்த்தான். முகத்தில் ஒருவித பயங்கரம் தெரிந்தது.

''ஹரிஸ்...... என்ன செய்கிருய்?'' என்று கத்திக்கொண்டு அவனுக்கு அருகே வந்தேன்.

அவன், ''மெக்ஸின்...விலகி நில்'' என்று பற்களைக்கடித்துக்கொண்டு சொல்லியவாறே அருகில் கிடக்கும் கத்தியை எடுத்துக்காட்டினுன். நான் விக்கித்து அப்படியேநின்றேன்.

அவன் தான் மேற்கொண்ட காரியத்தை செய்யத் தொடங்கினுன். பெட்டிக்கு அப்போதுதான் வலி தெரிந்திருக்கவேண்டும். வேதனையினுல் முனகினுள். எனக்கு அங்கு நிற்பதற்கே அருவருப்பாக இருந்தது. வேகமாக ஓடிவந்தேன். கதவைத் திறந்து வெளியே வந்து—கதவைஅடைத்துவிட்டு அதில் சாய்ந்து நின்றேன்.

என் உடலெல்லாம் நடுங்கியது. ஏதோ விபரீதங்கள் நடக்கப்போகின்றன என்று மனம் சொல்லியது. கதவை விட்டு தள்ளாடிக்கொண்டு நடந்தேன். கதிரை ஒன்றில் விழுந்து உட்கார்ந்தேன். என்னசெய்வது என்றே எனக்குத் தெரியவில்லை.

சுமார் அரைமணித்தியாலம் கழிய ஹரிஸ் வெளியே வந்தான். உடை அணிந்திருந்தான். நான் உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் என்னைநோக்கி வந்தான். அவனுடைய முகத்தைப் பார்க்காமல் வேறு பக்கம் பார்த்துக்கொண்டிருந்தேன். முன்னுல் வந்து நின்று ''மெக்ஸின்— உணர்ச்சி

வசப்பட்டு அப்படிச் செய்துவிட்டேன். எல்லாவற்றையும் மறந்துவிடு...'' என்ருன். நான் பதில் சொல்லவில்லை. சிறிது நேரம் தயங்கிவிட்டு—''அலெக்ஸிடம் சொல்லாதே'' என்ற வாறு என் அருகில் உட்கார்ந்தான். நான் உடனே எழுந்து அறைக்குள் சென்றேன். அவனுடன் பேசுவதற்கு நான் விரும்பவில்லை.

அறைக்குள் போய்ப் பார்த்தேன். பெட்டி சுவரோடு உட்கார்ந்து முழங்கால்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டு—அதில் தலையை சாய்த்து இருந்தாள். விசும்பி அழுதுகொண் டிருந்தாள். நிர்வாணமாகவே இருந்தாள்.

நான் உள்ளே வந்தது தெரியுமோ என்னவோ தெரி யாது தொடர்ந்து அழுதுகொண்டிருந்தாள். எனக்கு அவள் மீதும் ஆத்திரமாக இருந்தது. அவளின் வெள்ளை அங்கி நான் கழற்றிப்போட்ட இடத்தில் கிடந்தது. அதை எடுத்து அவள்மீது வீசினேன். அப்போதுதான் அவள் நிமிர்ந்து பார்த்தாள். முகம் வீங்கியிருந்தது. ''வீட்டுக்குப் போ...'' என்றேன். என்னவோ சொல்வதற்கு வாயைத் திறந்தாள். அதற்குள் நான் திரும்பி கதவை நோக்கி நடந்தேன்.

வெளியே வந்ததும் ஹரிஸ் எழுந்து ''மெக்ஸின்'' என்று அழைத்துக்கொண்டு என்னைநோக்கி வந்தான். ''என்னைத் தொந்தரவு செய்யாதே...'' என்று கோபமாகச் சொன் னேன். அப்படியே நின்றுவிட்டான். திரும்பி பக்கத்து அறைக்குள் நுழைந்தேன். அது சமையல் அறை.

எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பயமாக இருந்தது. இதயம் வேகமாக அடித்துக்கொண்டேயிருந்தது. எல்லாம் என் தவறுதானே. பெட்டியின் சடங்கை மேற் பார்வை செய்யும் பொறுப்பை அலெக்ஸ் என்னிடம் ஒப் படைத்துவிட்டுப் போனர். ஆனல் இப்படி நடந்துவிட் டது.

அலெக்ஸ் வந்ததும் நடந்த விபரீதத்தைப்பற்றி சொல் லக் கூடாது. சொன்னல் எனக்குத்தான் மானக்கேடு.

சமையலறையில் இருந்துகொண்டு நான் இப்படி நினைத்துக் கொண்டிருக்கும்போதே இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு கார் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. பிரேக் மிதிக்கப்பட்ட வேகத்தில் 'கிரீச்'சென்ற சத்தம் எழுந்தது. அது அலெக்ஸின் காராகததான் இருக்க வேண்டும். அவசரமாக நான் கதவைத் திறந்து வெளியே வந்தபோது—

ஹரிஸ் அதே கதிரையில் உட்கார்ந்திருந்தான். காரின் சத்தத்தைக் கேட்டு வாசல் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான். என்உத்தரவுப்படி பெட்டி உடைஅணிந்துகொண்டு அங்கிருந்து வெளியேறிக்கொண்டிருந்தாள். அவள் வாசலை நெருங்கும்போது கதவு திறக்கப்பட்டது.

சீறிக்கொண்டுவரும் புலியைப்போல அலெக்ஸ்உள்ளே வந்தார், அவருக்குப்பின்னால்- யூஜின் பதட்டத்தோடு வந்து கொண்டிருந்தாள்.

அலெக்ஸின் முகம் அந்தக்கோலத்தில் இருப்பதை நான் என்றுமே கண்டதில்லை. வெறிகொண்ட பேய் மனிதனைப் போல இருந்தார். பூஜை நடத்தும்போது அணியும் கறுத்த உடையையே அணிந்திருந்தார்.

அவர் உள்ளே நுழைவதைக் கண்டதும் பெட்டி அப்படியே நின்று விட்டாள்.

உள்ளே நுழைந்ததும், அலெக்ஸின் பார்வை பெட்டியின்மீது சென்றது, அடுத்து ஹரிஸைப் பார்த்தது. பின் என்னை முறைத்துப் பார்த்தார்.

''நாய்களே...'' என்று இடி இடிப்பதைப் போலக் கத்திக்கொண்டு உள்ளே பாய்ந்து வந்தார்.

# 3. நான் பேய்ராணி ஆனேன்

அலெக்ஸ் அப்படிக் கத்தியதைக்கேட்டு நான்இடியினால் தாக்குண்டவளைப்போல நிற்க, அவர் பெட்டியின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஹரிஸிடம் வந்தார்.

''துரோகி... என்ன செய்து விட்டாய்?'' என்று கத்திக் கொண்டு பளார் பளாரென அவனுடைய கன்னத்தில் அறைந்தார்.

அவன் எழுந்தபோது பெட்டியை விட்டு விட்டு அவனுடைய கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொண்டு அவனை உலுக்கினார். நான் எதுவும் புரியாமல் அதிர்ந்து போய் அப்படியே நின்றேன். உள்ளே வந்த யூஜினும் அதிர்ச்சியோடு நடப்பதை பார்த்துக்கொண்டு அப்படியே நின்றாள்.

ஹரிஸ்—அலெக்ஸைவிட பலசாலி. ஒருவாறாக அவரின் கைகளைத் தட்டி விட்டான். அவரை இடித்துக்கொண்டு பாய்ந்து ஓடினான். அவன் கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடும்வரை அலெக்ஸ் பார்த்துக்கொண்டு நின்றார். அவரின் கவனம் பின் பெட்டியின் பக்கம் திரும்பியது.

அவனை அடிப்பதற்கு அவர் விரும்பவில்லை. அதனால் கண்டவாறு ஏசினார். என்னைப் பார்த்தார். அவரின் பார்வை என் கண்களை சந்திக்கும் போது என் உடல் சிலிர்த்தது.

என்னை முறைத்துப் பார்த்தாரேதவிர எதுவும் சொல்லவில்லை. வேகமாக பூஜை நடக்கும் அறைக்குள் நுழைந்தார்.

அதன்பின்னர்தான் எனக்கு சுய உணர்வு வந்தது. யூஜினிடம் சென்றேன். என்ன நடந்தது என்று கேட்டேன். அவள் விளக்கமாக எல்லாவற்றையும் சொன்னாள்.

அலெக்ஸ் தன் நண்பரோடு பூஜையில் கலந்து கொண்டிருந்த சமயம் இங்கு நடந்த விஷயம்பற்றி அவருக்குத் தெரிந்து விட்டது. அவரின் கையில் இருந்த கத்தி தவறி விழுந்திருக்கிறது. மேஜைமீதிருந்த வைன் கிண்ணம் தானாக சரிந்து விழுந்திருக்கிறது. உடனே அலெக்ஸ் பூஜையை நிறுத்திவிட்டு யூ ஜி னை அழைத்துக்கொண்டு அங்கிருந்து வெளியேறினாராம்.

புயல் வேகத்தில் காரை ஓட்டிக்கொண்டு வரும் சமயம் அவளிடம் ஒரே ஒரு வார்த்தைதான் சொல்லி இருக்கிறார். ''ஹரிஸ் அந்த அப்பாவிப்பெண் பெட்டியைக் கற்பழித்துக் கொண்டிருக்கிறான்'' என்பது தான் அந்த வார்த்தைகள்.

அதை என்னிடம் சொல்லிய யூஜின் ''ஹரிஸ் செய்தது மன்னிக்க முடியாத ஒரு குற்றம். அலெக்ஸ் அவனை சும்மா விடமாட்டார்'' என்றாள்.

அதன்பின் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கும் யுவதி பெட்டியைப்பார்த்து 'நீ வீட்டுக்கு போ' என்றாள். அவள் சென்றதும் என்னை அழைத்துக்கொண்டு அலெக்ஸ் புகுந்த பூஜை அறைக்குள் நுழைந்தாள்.

நானும் யூஜினும் அந்த அறைக்குள் நுழைந்ததும், யூஜின் என் கையைப் பிடித்து நிறுத்தினாள்.

அவள் அதைச் செய்த வேகத்தில் நான் அதிர்ந்து விட்டேன். திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

அவள் விறைத்துப்போய், அலெக்ஸையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

நானும் அப்போதுதான் அலெக்ஸை கவனமாகப் பார்த்தேன். அவர் அறையின் நடுவில் கால்களை மடித்து உட்கார்ந்திருந்தார். கறுத்த பூஜை உடையுடனேயே இருந்தார்.

அவரின் முன்னால் சாம்பிராணியும் ஊதுபத்தியும் இருந்தன.

அவற்றைவிட வேறுசில பொருட்கள் என் கவனத்தைக் கவர்ந்தன.

அவை—ஒரு தும்புத் தடி, சிவப்புநிற மெழுகுதிரி, ஒரு வெள்ளை உருவம்.

அவருக்கு முன்னால் நடுமத்தியில் தும்புத்தடி வைக்கப் பட்டிருந்தது. அதற்கு அருகே தடித்த சிவப்பு நிற மெழுகு திரி ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அலெக்ஸிற்கு முன்னால், மாவில் செய்யப்பட்ட பொம்மை ஒன்று இருந்தது.

அலெக்ஸ் கையில் கத்தி ஒன்றை வைத்திருந்தார்.

நான் அதிர்ந்து நிற்க, யூஜின் என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு, வா வெளியே போகலாம் என்று ஜாடை காட்டினுள். இருவரும் அலெக்ஸைக் குழப்பாமல் கதவை அடைத்து விட்டு, வெளியே வந்தோம்.

யூஜின் நன்ருக அதிர்ந்து போயிருந்தாள். அவளின் நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பி நின்றன.

அதைத் துடைத்துவிட்டுக்கொண்டே, கதிரையில் உட்கார்ந்தாள். நான் அவளுக்கு அருகே உட்கார்ந்து, அவளின் கையைப் பிடித்துக்கொண்டு, ''யூஜின்... ஏன் ஒரு மாதிரியாக இருக்கிருய்? என்ன நடக்கிறது...?'' என்று கேட்டேன்.

''நமக்கு ஏன் இந்தப் பிரச்சினைகள் வருகின்றன என்று தெரியவில்லை மெக்ஸின்...'' என்று குழப்பமாகச் சொன்னுள். அவள் விரக்தியோடு இருந்தவிதம், என்னையும் குழப்பி எடுத்துவிட்டது. பயமாக இருந்தது.

அவளின் கையை உலுக்கிக்கொண்டு, ''யூஜின் என்ன சொல்கிருய்...?'' என்று கேட்டேன். அவள் என்னைப் பார்த்தாள்.

அமைதியாக ஒவ்வொரு வார்த்தையாகப் பேசினுள். ''அலெக்ஸ்... ஹரிஸைக் கொல்லப் போகிருர். அதற்காகத்தான் அந்தச் சடங்கு நடக்கிறது!'' என்ருள்.

எனது உடல் சில்லிட்டது. அதிர்ந்து போனேன்! ''என்ன...?'' என்று அதற்குமேல் பேசமுடியாமல் தடுமாறினேன்.

யூஜின், விளக்கமாக எல்லாவற்றையும் சொன்னுள். அலெக்ஸ், இப்போது ஹரிஸின் மீது பேயை ஏவிவிட்டிருக்

கிறாராம். அந்தப் பேய், அவனைச் சித்திரவதை செய்து விடும். அதாவது, அவர் முன்னால் இருக்கும் மாவு உருவத்தில் அவர் தன் கையில் இருக்கும் கத்தியினால், கீறக்கீற ஹாரிஸின் உடலிலும் அந்தக் கீறல்கள் விழும். அவன் கடுமையான காயங்களுக்கு உள்ளாவான். உருவத்தின் கண்கள் தோண்டி எடுக்கப்பட்டால், ஹாரிஸின் கண்களும் தோண்டப்படும்.

அலெக்ஸின் முன்னால், எரிந்துகொண்டிருக்கும் மெழுகுதிரி அணையும் வரையில் இந்தச் சித்திரவதை தொடர்ந்து நடைபெறும். மெழுகுதிரி அணையும்போது அவனுடைய உயிர் பிரிந்துவிடும்.

இதையெல்லாம் விளக்கிவிட்டு, ''இதைப் போல மரணத்தைத் தழுவும்போது கிடைக்கும் வேதனை மிகவும் பயங்கரமானது'' என்றாள்.

நான் அதிர்ந்து போனேன். ஹாரிஸின் மீது எனக்கு ஏற்பட்டிருந்த ஆத்திரமெல்லாம் மறைந்து விட்டது.இது மிகவும் கோரமான செயல். அவனால் தாங்கிக்கொள்ள முடியாது. அதனால், சிறிதுநேரம் அமைதியாக இருந்து விட்டு, ''யூஜின்... ஹாரிஸும் ஒரு பேய் சாமியார்தானே. அவனால், இதைத் தடுத்து நிறுத்த முடியாதா?'' என்று கேட்டேன்.

யூஜின், தலையை ஆட்டினாள். ''அலெக்ஸிற்கு இருக்கும் வலிமை அவனுக்கு இல்லை'' என்று அமைதியாகச் சொன்னாள்.

என்னால், அதற்குமேல் அங்கே சும்மா உட்கார்ந்துகொண்டிருக்க முடியவில்லை. எழுந்து அலெக்ஸ் இருக்கும் அறையை நோக்கி ஓடினேன். யூஜின் என்னை இங்கே வா என்று அழைப்பதற்குள்ளாக நான் அறைக்குள் நுழைந்து விட்டேன். அலெக்ஸ் வாசலைக் கவனிக்கவில்லை. கண்களை மூடியபடி மந்திரங்களை உச்சரித்துக்கொண்டிருந்தார். அவர் முன்னால், மாவினால் செய்யப்பட்ட பொம்மை உருவும் கிடந்தது. அவரின் வலது கையில் இருக்கும் கத்தி,

அந்த உருவத்துக்கு அருகே இருந்தது. நான் மெதுவாக ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து அவருக்கு 'அருகே சென்றேன். அவர் என்னைக் கவனிக்கவில்லை. முன்னால் போய் நின்றேன். கத்தியைக் கவனித்துவிட்டுக் கீழே இருக்கும் உருவத்தைக் கவனித்தேன். அது ஒன்றரை அடி உயரமானதாக இருந்தது.

ஆனால், அதில் என்பார்வை பட்டதும், இதயத்துடிப்பு நின்றுவிட்டாற்போல் இருந்தது. அதில் கத்தியினால் கீறப்பட்ட இடங்களில் இருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது.

ஏக்கத்தோடு மார்பைப் பிடித்துக் கொண்டேன்.

அந்த அறையில், கேட்டுக்கொண்டிருக்கும் அலெக்ஸின் மந்திர உச்சரிப்பு, என் காதுகளுக்குள் புகுந்து என் தலையை வெடிக்க வைத்துவிடும் போல இருந்தது.

''அலெக்ஸ்...''

என்னை அறியாமலேயே என் வாய்க்குள்ளிருந்து வார்த்தைகள் வெளிவந்தன.

அலெக்ஸ் மந்திர உச்சரிப்பை நிறுத்தவில்லை. கண்களைத் திறந்து என்னைப்பார்க்கவுமில்லை.

மீண்டும் அழைத்தேன்.

மந்திரம் ஓய்ந்தது.

மெதுவாக கண்களைத் திறந்தார்.

''அலெக்ஸ்...!'' என்று கெஞ்சும் குரலில் மீண்டும் சொல்லிக்கொண்டு மண்டியிட்டு உட்கார்ந்தேன். ''ஹரிஸ் தெரியாத்தனமாக அதைச் செய்து விட்டான். இம்முறை மாத்திரம் அவனை மன்னித்து விடுங்கள்'' என்றேன்.

அவரின் கண்கள் என்னை துளைத்து எடுப்பதைப்போலப் பார்த்தன. வாயிலிருந்து வார்த்தைகள் மிகவும் வெறியோடு வெளியே வந்தன. ''வெளியே போ'' என்றார்.

மீண்டும் கண்களை மூடிக்கொண்டார். வேகமாக மந்திரங்களை உச்சரித்தார். நான் தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் அப்படியே இருந்தேன். அவர் கள்கண் திறபட்டன. நான் இன்னும் அங்கே இருப்பதைக்

கவனித்தபோது அவரின் கோபம் அதிகரித்தது. கத்தியை உயர்த்தினுர். முன்னுல் இருக்கும் உருவத்தின் உடலில் எங்கே குத்துவதென்று யோசிப்பதுபோல யோசித்தார். பின் இடது விலாவில் வைத்து அழுத்தினுர்.

சிவப்பாக இரத்தம் பாய்ந்தது. இந்தக் காட்சியை என்னுல் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை.

முகத்தைமூடிக்கொண்டு வெளியே ஓடினேன். வெளியே வந்ததும், என்னுல் அழுகையை அடக்கிக்கொள்ள முடியாமலிருந்தது. கதவுக்கு வெளியே நின்று முகத்தை மூடிக் கொண்டு அழுதேன். யூஜின் நான் விட்டுச் சென்றபோது இருந்த இடத்திலேயே இருந்திருக்க வேண்டும். வந்து எனக்கு ஆறுதல் சொல்லி அழைத்துப்போனுள்.

''யூஜின்... இது ஒரு பயங்கரக் கொலை'' என்று சொல்லியவாறு அவளின் மார்பில் சாய்ந்துகொண்டு அழுதேன்.

சிறிது நேரம் சென்றது. என் அழுகை அடங்கி விட்டது.

யூஜினின் மார்பில் நான் சாய்ந்திருக்க, அவள் என்னைத் தன்னேடு அணைத்துக் கொண்டிருப்பது இதமானதாக இருந்தது. அதனுல், நான் தலையை நிமிர்த்தாமல் அப்படியே இருந்தேன்.

திடீரென டமார் என ஒரு சத்தம் கேட்டது.

யூஜின் திடுக்கிடுவது தெரிந்தது. நான் தலையை நிமிர்த்தினேன். அதே கணம், வெளிக்கதவு திறந்து கொள்ள திடீரென ஒரு உருவம் உள்ளே நுழைந்தது. முதலில் என்னுல், அடையாளம் காண முடியவில்லை. நானும், யூஜினும் ஏக காலத்தில் எழுந்துசென்ருேம்.

விழுந்த உருவம்''இல்லை...இல்லை...'' என்றபடி தலையை நிமிர்த்தியபோதுதான், அது ஹரிஸ் என்று கண்டுகொள்ள முடிந்தது. அவனுடைய முகத்திலும் இரத்தம் தோய்ந்திருந்தது.

சேர்ட்டும், லோங்ஸூம் மாத்திரம் அணிந்திருந்தான்.

சேர்ட்டும், காற்சட்டையும் பல இடங்களில் கிழிந்து தொங்கியது. இரண்டும் இரத்தத்தில் ஊறியிருந்தன.

கொலைவெறியன் ஒருவனின் முன் அகப்பட்டு, பின் குற்றுயிராக விடப்பட்ட மனிதனைப்போலக் காட்சி அளித்தான். கைகளை ஊன்றிக்கொண்டு எழுந்திருக்க முயன்றான். தடால் என சரிந்து விழுந்தான்.

அப்போதுதான் எனக்கு உணர்வு ஏற்பட்டது போல இருந்தது.

''ஹரிஸ்...'' என்றபடி அவனை நோக்கி ஓட முயன்றேன். யூஜின் என்னை எட்டிப் பிடித்துக்கொண்டாள். ''கையைவிடு...!'' என்றவாறு திரும்பினேன். அவள் என்னைப்பார்த்த பார்வை என்னை அடக்கிவிட்டது.

அப்படியே நின்றேன்.

இந்தக் காரியத்தில் நான் தலையிடுவது மிகவும்ஆபத்தானது என்று அப்போதுதான் எனக்குப் புரிந்தது.

கால்கள் பலம் இழந்துவிட்டதைப் போலிருந்தன. என்றாலும் உட்கார மனம் வரவில்லை. ஹரிஸ் கீழே கிடந்து துடித்துக்கொண்டிருக்கும் காட்சியைப் பார்த்துக்கொண்டு நிற்கவும் முடியவில்லை.

அதைப்பார்க்காமல் இருக்கவும் முடியவில்லை!

அவன் வேதனையோடு என்னவெல்லாமோ முனகினான். ஆனால், ''மன்னித்து விடுங்கள்... மன்னித்து விடுங்கள்...'' என்று அவன் சொல்வதுதான் என்காதில் விழுந்தது.

தரையோடு தவழ்ந்தான்.அலெக்ஸ் இருக்கும்அறையை நோக்கி தவழ்ந்துகொண்டு இருந்தான்,

திடீரென ''ஐயோ...'' என்றலறிக்கொண்டு அடிவயிற்றைப் பிடித்தான்.

அந்த இடத்தில், திடீரென சேர்ட் கிழிந்தது! இரத்தம் பீறிட்டுப்பாய்ந்தது.

அலெக்ஸ் மாவினால் செய்யப்பட்ட அந்த உருவத்தின் விலாவில் கத்தியினால் வெட்டியிருக்கிறார்!

இன்னும் சில நிமிடங்கள் கழிந்தால் ஹரிஸின் உயிர் பிரிந்துவிடும்! அந்த அளவுக்கு அவனது உடலில் காயங்கள் ஏற்பட்டுவிட்டன . அதோடு அலெக்ஸின் முன்னால் எரிந்து

கொண்டிருக்கும் சிவப்பு மெழுகுவர்த்தியும் அணையும் கட்டத்துக்கு வந்திருக்கும்.

நான் பதறினேன்.

ஆனால், என்னால் எதுவும் செய்யமுடியாமலிருந்தது.

நேரம் கடந்தால் தான் உயிர்தப்ப முடியாது என்பது ஹரிஸிற்கும் விளங்கியிருக்கவேண்டும். பற்களைக் கடித்து வலியை அடக்கிக் கொண்டு ஒருவித வெறியோடு அலெக்ஸ் இருக்கும் அறையை நோக்கித் தவழ்ந்தான்.

கதவு மூடப்பட்டிருந்ததால், அவனால் திறக்க முடியவில்லை. உடலை உயர்த்தி, கைப் பிடியைத் திருகினான். கதவு திறபட்டபோது, அதனோடு சேர்ந்து சுழன்று விழுந்தான். மறுகணம் தன்னைச் சுதாரித்துக்கொண்டு உள்ளே சென்றான். கதவு லேசாகத் திறந்திருந்தது. உள்ளே என்ன நடக்கிறது என்று எங்களால் பார்க்க முடியவில்லை. ஆனால்,பேச்சுக் குரல் கேட்டது!

ஹரிஸ் உள்ளே நுழைந்ததும் ''அலெக்ஸ்... என்னை மன்னித்துவிடுங்கள்... இனி அப்படிச் செய்யமாட்டேன்... எனக்குக் கொடுத்த தண்டனை போதும்'' என்று கெஞ்சிக் கொண்டு வேகமாக முன்னேறுவது தெரிந்தது.

சில வினாடி அமைதிக்குப் பின், அலெக்ஸின் குரல் கேட்டது. அவர் அமைதியாகவும், ஆறுதலாகவும் பேசினார்.என்றாலும், குரலில் ஒருவித பயங்கரம் தெரிந்தது. ''நீ செய்த குற்றத்துக்குப் பிராயச்சித்தம் செய்வதென்றால் உன் உயிரைத்தான் கொடுக்க வேண்டும். வேறு வழி இல்லை.''

''ஆனால், அலெக்ஸ்...!'' ஹரிஸ் பேசமுடியாமல் இடையில் நிறுத்திவிட்டு விக்கி விக்கியழுதான்.

அழுதுகொண்டே பேசினான்: ''எனக்கு ஏற்ற தண்டனை கிடைத்துவிட்டது! இவ்வளவு இரத்தம் சிந்தி விட்டேன். இவ்வளவு வேதனைகளையும் தாங்கிக் கொண்டுவிட்டேன். இது போதும்'' என்றான்.

அவன் தனது உயிர்ப்பிச்சை கேட்கும் விதம், எனது நெஞ்சைப் பிழிந்தெடுத்தது. அறைக்குள் சென்று அவனுக்

காக அலெக்ஸிடம் பரிந்து பேசுவோமா என்றுகூட நினைத்தேன். பின், அது தவறான காரியமென்று சும்மா இருந்துவிட்டேன்.

ஹரிஸின் கெஞ்சல், அலெக்ஸினதும் மனதை இளக வைத்திருக்கவேண்டும். அவர் பேசும்போது அது குரலில் தெரிந்தது.

ஆனால், அவர் என் பெயரைச் சொன்னதைக் கேட்டதும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''ஹரிஸ்... உன்னை உயிரோடு வைப்பதில்லை என்றுதான் நினைத்தேன்! இன்னும் அதைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், உனக்காக மெக்ஸின் வருத்தப்படுகிறாள். அவளின் மனதைநோகச் செய்யக் கூடாது என்பதற்காக உன்னை சும்மாவிடுகிறேன்'' என்றார்.

அவரின் பேச்சு அடங்கியதும், ஹரிஸ் பெண்ணைப் போல விம்மி விம்மி அழும் சத்தம் கேட்டது.

எனக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

அலெக்ஸ் மீண்டும் பேசினார்: ''இப்போது உன்னை காரில் ஏற்றிப் போய் எங்காவது ஒரு வீதியிலிறக்கி விடுகிறேன். பொலிசார் வந்ததும், உன்னை காடையர்கள் சிலர் தாக்கியதாகச் சொல்லு. அவர்கள் உன்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வார்கள்! காயங்கள் அவ்வளவு ஆழமானவையல்ல. ஒரு வாரத்தில் குணமாகி விடும்... பொலிசாரிடம் நீ என்னைக் காட்டிக்கொடுக்க முயன்றால்...''

அவர் முடிக்கவில்லை.

''இல்லை... இல்லை...!'' என்றான் ஹரிஸ்.

சில நிமிடங்கள் அமைதியாகக் கழிந்தன. பின் அலெக்ஸ், ஹரிஸை தாங்கலாக அழைத்துக்கொண்டு வந்தார். இருவரும் எங்களைப் பார்க்கவில்லை. ஹரிஸ் வேதனையுடன் முனுமுனுத்துக்கொண்டிருக்க, அலெக்ஸ் வெறுப்போடு அவனை இழுத்துக்கொண்டு வெளியேறினார்.

கதவு அடைக்கப்பட்டு, கார் புறப்படும் சத்தம் கேட்டதும்தான், ஒரு கெட்டகனவைக் கண்டுகொண்டு இருந்துவிட்டு விழித்ததைப்போலிருந்தது எனக்கு.

மறுகணம் விருட்டென எழுந்தேன். வேகமாக வாசலை நோக்கி நடந்தேன். யூஜின், திகைத்துப்போய் பெயர் சொல்லி என்னை அழைத்தாள்.

நான் திரும்பிப் பார்க்காமல் அங்கிருந்து வெளியேறினேன்.

* * *

அன்று டாக்சி பிடித்து வீட்டுக்குவந்து சேர்ந்த போது இந்த பேய் மதத்துக்கே முழுக்குப் போட்டு விடவேண்டும் என்ற எண்ணம்தான் என் மனதில் எழுந்து கொண்டிருந்தது.

ஆனால்,அதிகாலையில் கண்விழித்து, படுக்கையில் இருந்து கொண்டு நடந்தவைகளையெல்லாம் அசைபோட்டுப் பார்த்தபோது, நான் அவசர முடிவுக்கு வந்துவிட்டேன் என்றே தோன்றியது. இந்தப் பேய் மதத்துக்கு வந்ததன் பின்பு எனக்குக் கிடைத்த மதிப்பையும், பெருமையையும் நினைத்துப் பார்த்தேன்.

இரவு எடுத்த முடிவை மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. அன்றுமாலைதான் என் வாழ்க்கையிலும் முக்கிய திருப்பமேற்பட்டது. இரவுநான் என்அறையில் இருந்து சில மந்திரங்களைப்பற்றிய விளக்கம் தரும் புத்தகம் ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தேன்.

அம்மா, மார்கிரெட் மாமியின் வீட்டுக்குப் போயிருந்தாள்.

திடீரென ஏதோ ஒரு உணர்வு உந்தத் தலையை நிமிர்த்திப் பார்த்தேன். உடல் ஒருகணம் விறைத்தது. வாசலில் அலெக்ஸ் நின்றுகொண்டிருந்தார்.

அவர் எப்படி ஓசை எழுப்பாமல் வீட்டுக்குள் நுழைந்தார். படுக்கை அறைவரை வந்து, கதவைத் திறந்தார் என்று எனக்குப் புரியவில்லை. என்னிடம் ஏற்பட்ட அதிர்ச்சியை மறைத்துக்கொண்டு புன்னகை செய்யமுயன்றேன்.

''பயந்து விட்டாயா?'' என்று சிரித்துக்கொண்டே அவர் கேட்டார்.

''எப்போது வந்தீர்கள்...'' என்று கேட்டுக்கொண்டே கட்டிலை விட்டிறங்க முயன்றேன்.

அதற்குள் அலெக்ஸ் உள்ளே வந்தார். கட்டிலுக்கு அருகில் வந்துவிட்டார்.

அவரின் முகத்திலும், செயல்களிலும் என்றுமில்லாத ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. என்னோடு நெருக்கமாக நின்றபடி, ''மெக்ஸின்...... முக்கியமான விஷயம் பேசிவிட்டு போகலாம் என்று வந்தேன்'' என்றார்.

நான் பதில் சொல்லவில்லை. அவரையே பார்த்துக் கொண்டு இருந்தேன். அலெக்ஸ் பேசப் பேச என் உடல் புல்லரித்துக்கொண்டு வந்தது.

''மெக்ஸின்... நேற்று இரவுவரை நான் திருமணத்தைப் பற்றியே யோசிக்கவில்லை. எந்தப் பெண்ணைப் பற்றியும் நினைத்துப் பார்க்கவுமில்லை... ஆனால், நேற்றிரவு நீ ஹரிஸின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அறைக்குள் வந்தபோது, என் மனதில் என்றும் ஏற்படாத அந்த எண்ணம் ஏற்பட்டு விட்டது. உன்னை என் மனைவியாக்குவது என்று முடிவுசெய்து விட்டேன்.

நான் மௌனமாகவே இருந்தேன்.

''உனக்குச் சம்மதமா?''

என் கண்கள் படபடத்தன. என் முதுகை வளைத்துப் பிடித்து இறுக்கமாக முத்தமிட்டார்.

அதற்கு அடுத்த வாரம் என்னைவிடப் பத்து வயது அதிகமான அலெக்ஸுக்கும், எனக்கும் எங்கள் மத ஆசாரப்படிக்குத் திருமணம் நடந்தது.

அது ஒரு புதுமையான திருமணம். ஆனால், இங்கிலாந்தின் பல பகுதிகளிலுமிருந்து ஏராளமானோர் வந்திருந்தார்கள்.

எங்களின் திருமணத்துக்கு வந்திருந்த ஆட்களைக் கொண்டே, அலெக்ஸிற்கு எவ்வளவு செல்வாக்கிருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ளமுடிந்தது.

அதோடு திருமணத்துக்குப்பின்னர் அவர் ஆட்களை அறிமுகப்படுத்தியபோது, அவர்கள் அனைவரும் இங்கிலாந்து முழுவதும் பரவிக்கிடக்கும் பேய் இயக்கங்களின் தலைவர்களென்றுதெரிந்தது. இத்தனை இயக்கங்கள் இருக்கின்றனவா என்று எனக்கு பிரமிப்பு ஏற்பட்டது.

எங்கள் அம்மாவும் திருமணத்துக்கு வந்திருந்தாள். அழகான உடை அணிந்துகொண்டு மிகவும் சந்தோஷமாகக் காணப்பட்டாள்.

திருமணச்சடங்கு இப்படித்தான் நடந்தது.

நான் அன்று கறுத்த உடை அணிந்திருந்தேன். அலெக்ஸும் வழக்கமான கறுத்த அங்கியிலேயே இருந்தார். அலெக்ஸின் நண்பர் ஒருவர்தான் சடங்கை நடத்தினர்.

என்னவெல்லாமோ சடங்குகள் நடந்ததன் பின்பு இரு முனையிலும் இரு வளையங்களைக் கொண்ட சங்கிலி ஒன்று கொண்டுவரப்பட்டது! இரு வளையங்களும், எங்களின் கழுத்துக்களில் மாட்டப்பட்டன. பின் மந்திரிக்கப்பட்ட வைன் தரப்பட்டது. ஒரே கிண்ணத்தில் இருந்த அதை, முதலில் அலெக்ஸ் குடித்தார். பின், மிகுதி எனக்குத் தரப்பட்டது. அதோடு நாங்கள் கணவன் மனைவியாகிவிட்டோம்.

எல்லோரும் வந்து என் கன்னத்தில் முத்தமிட்டார்கள். அலெக்ஸின் கையைக் குலுக்கி வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

மறுநாள் நானும், அலெக்ஸும் தேன்நிலவைக் கழிக்கப் புறப்பட்டோம்.

தேன்நிலவு என்றதும் என் மனதில் பலவிதமான எண்ணங்கள் எழுந்தன.

அதைப்பற்றிப் பலவிதமாகக் கற்பனை செய்துவைத்திருந்தேன். ஆனல், அந்தத் தேன்நிலவின் போது பல அதிர்ச்சிதரும் சம்பவங்கள் நடக்கத்தான் செய்தன.

இருவரும் கடற்கரையோரமாக உள்ள ஒரு இடத்தில் தேன்நிலவைக் கழிக்க வேண்டும் என்று அலெக்ஸ் ஏற்கனவே சொல்லியிருந்தார். அதனல் கடற்கரையோரமாக

உள்ள ஒரு கெபின் அறையை வாடகைக்கு புக் செய்திருந் தார். அது சகலவசதிகளும் கொண்ட அறை. டெலிபோன் மூலமாக உணவையும், தேவையான பொருட்களையும் வரவழைத்துக்கொள்ளலாம்.

அங்கு போய்ச் சேர்ந்ததும், நான் கடலில் நீந்தி விளை யாடினேன். நான் நீச்சல் உடை அணிந்துகொண்டு கடற் கரையில் ஓடுவதை அலெக்ஸ் ஆசையோடு கவனித்துக் கொண்டிருந்தார்.

அன்றிரவு மிகவும் சந்தோஷமாகக் கழிந்தது. அலெக்ஸ் ஏதோ வில்லைகளை சாப்பிட்டுவிட்டு கட்டிலில் வந்து சாய்ந் தார். என்னை அன்போடு அணைத்துக்கொண்டார்.

மறுநாளும் இன்பமாகக் கழிந்தது. மூன்றும் நாள்—

நான் காலையில் விழித்துக்கொண்டேன். காப்பி அனுப் பும்படி டெலிபோனில் சொல்லிவிட்டு கட்டிலைவிட்டு எழுந் தேன்.

அலெக்ஸ் உறங்கிக்கொண்டிருந்தார். நான் எழுந்து கொட்டாவி விட்டுக்கொண்டு நிற்கும்போதுதான், கட்டி லுக்கு அருகில் இருக்கும் மேஜையின்மீது இருந்த வில்லைப் போத்தல் என் கவனத்தைக் கவர்ந்தது.

அந்த வில்லைகளைத்தான் அலெக்ஸ் சாப்பிட்டார்.

ஏதோ நினைத்துக்கொண்டு, வில்லைப் போத்தலை எடுத் துப் பார்த்தேன். எனக்குத் திக்கென்றிருந்தது. அதில் இருந்தவார்த்தைகளை வாசிக்கும்போது, அது ஆண்மைஇழந் தவர்கள் பாவிக்கும் வில்லை என்று புரிந்தது!

அப்படியானல், அலெக்ஸிற்கு ஆண்மையில்லையா? அவர் இந்த வில்லைகளின் சக்தியினலா எனது கணவனுக வாழப்போகிறுர்......?

அதை அப்படியே வைத்துவிட்டு பேசாமல் குளியல் அறைக்கு வந்துவிட்டேன். அன்று முழுவதும் எனக்குப் பெரும் மனக்குழப்பமாக இருந்தது. என்றுலும் நான் அலெக்ஸிடம் எதுவும் கேட்கவில்லை.

நாங்கள் தேன்நிலவு முடிந்து வந்து தனிக்குடித்தனம் ஆரம்பித்தோம்.

அதன் பின்னர் நான் பேய்மதத்தில் தீவிர கவனம் செலுத்தினேன்.

அலெக்ஸிற்கு வரும் வேலைகளை எல்லாம் நான்தான் செய்வேன். அதோடு, இங்கிலாந்து பூராவும் பரவிக் கிடக்கும் பேய் மதங்களைப்பற்றிய பூரண விபரங்களையும் என்னால் அறிந்துகொள்ள முடிந்தது.

வேற்று மதங்களைச்சேர்ந்தவர்கள் அலெக்ஸின் நண்பர்களாதலால், தாங்கள் முக்கிய சடங்குகள் நடத்தும்போது என்னையும், அலெக்ஸையும் அழைப்பார்கள். இதன்மூலம், நான் பல விஷயங்களைக் கண்டுகொள்ள முடிந்தது.

எல்லாவற்றையும் பார்த்தபோது, ஒரு உண்மை மாத்திரம் எனக்குப் புலப்பட்டது. அலெக்ஸும், வேறு ஒரு சிலரும் மாத்திரமே உண்மையான முறையில் மதச் சடங்குகளைச் செய்துவருகிறார்கள். மற்றவர்கள் அனைவரும், தங்களின் பாலுணர்வைத் தணித்துக்கொள்ளத்தான் இந்த மதச்சடங்குகளைச் செய்கிறார்கள்.

இதற்கு உதாரணத்துக்கு நான் கலந்து கொண்ட மதச் சடங்கு ஒன்றை விபரிக்கிறேன்.

அந்தப் பேய் மதப் பிரிவைச்சேர்ந்தவர்கள் அனைவரும் மிகவும் செல்வந்தர்கள். அதில் பல லட்சாதிபதிகளும், பணக்காரர்களின் மனைவிமாரும் அங்கம் வகித்தார்கள். அவர்களின் சடங்கு ஒன்றில் வந்து கலந்துகொள்ளுமாறு எனக்கும் அலெக்ஸிற்கும் அழைப்பு வந்தபோது, நாங்கள் சென்றோம்.

காரில் சென்றோம். பிரதான சாலையைவிட்டு குறிப்பிட்ட ஒரு இடத்துக்கு வந்து, மணல் பாதை வழியாகச் சென்றபோது, வீதியில் ஒரு மனிதன் நின்றுகொண்டிருந்தான்.

அப்போது பிற்பகல் மூன்று மணி இருக்கும்.

நல்ல வெளிச்சமாக இருந்தது. அலெக்ஸ் அந்த மனிதனுக்கு அருகில் காரை நிறுத்தி, ஹீத்கென்ட் என்பவர் எங்கே வசிக்கிறார் என்று கேட்டார். ஹீத்கென்ட் என்பவர் தான் அந்த இயக்கத்தின் தலைவர்.

அந்த மனிதன் சிரித்தான். அலெக்ஸுடன் கை குலுக்கி விட்டு, தொடர்ந்து முன்னேறிச் செல்லும்படியும், முதலாவது வரும் பெரியமாளிகை கென்டினுடையது என்றும் சொன்னான். அந்த மனிதன் கென்டின் ஆட்களில் ஒருவன். புதிதாக வருபவர்களுக்கு வழிகாட்டுவதற்காக அங்கே நின்றுகொண்டிருக்கிறான் என்றார் அலெக்ஸ்.

நாங்கள் தொடர்ந்து சென்றோம். அந்த மாளிகை வந்தது. அந்த மாளிகையைப் பார்க்கவே பயமாக இருந்தது. பழைய கோட்டையைப் போலக் காட்சி அளித்தது. வெளியே ஏராளமான கார்கள் நின்று கொண்டிருந்தன. எல்லாம் டாம்பீகமான, பெறுமதிவாய்ந்த கார்கள். நாங்கள் இறங்கி மாளிகையின் வாசலுக்குச் சென்றபோது, வெள்ளைக்கோட் அணிந்த பட்லரைப் போலத் தோன்றிய மனிதன், நீங்கள் யார் என்று கேட்டான்.

அலெக்ஸ் தன்னை அறிமுகப்படுத்தியதும், உள்ளே விட்டான். உள்ளே சென்று, பெரிய மண்டபம் ஒன்றுக்குள் புகுந்ததும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

அங்கு எல்லோரும் ஜோடிஜோடியாக இருந்தார்கள். எல்லோரும் உயர் ஸ்தானத்தில் இருக்கும் மனிதர்கள் என்பது அவர்களைப் பார்த்ததும் தெரிந்தது. ஆனால், எவரும் தங்களின் சொந்த மனைவிகளுடனோ, காதலர்களுடனோ வந்திருக்கவில்லை என்று எடுத்த எடுப்பில் சொல்லக் கூடியதாக இருந்தது. காரணம் கிழவர்கள் பலர் தங்கள் மகள்மாரைப் போல தோன்றிய பெண்களுடன் இருந்தார்கள். மினுமினுக்கும் நகைகளையும், பெறுமதியான உடைகளையும் அணிந்து வந்திருந்த கிழட்டுப் பெண்கள் பலர் வாலிபர்களுடன் இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் கறுத்த உடை அணிந்த ஆண்கள் சிலர் வைன் பரிமாறிக்கொண்டிருந்தார்கள்.

முன்னால், மேடை போன்ற இடத்தில் பலிபீடம் ஒன்றிருந்தது. அங்கு மூன்று குருக்கள் இருந்தார்கள். அவர்கள் சடங்குக்கான ஆயத்தங்களை செய்துகொண்டிருந்தார்கள்.

அலெக்ஸ் என்னை ஒரு இடத்தில் விட்டுவிட்டு பலிபீடத்துக்குச் சென்றார். குருக்களுடன் பேசினார். உள்ளேபோய் அவர்களைப்போல உடை அணிந்துகொண்டு வந்தார். அலெக்ஸும் அந்த சடங்கை நடத்தப்போகிறார் என்று எனக்குத் தெரிந்தது.

நான் அமைதியாக நின்று மண்டபத்தில் இருக்கும் பெண்களையும், அவர்களின் செய்கைகளையும் கவனித்துக் கொண்டிருந்தேன். ஒரு கறுத்த உடை மனிதர் வந்து எனக்கு வைன் கொடுத்தார். எடுத்துக் குடித்தேன். சிரசில் ஏறிவிட்டது. அந்த வைன் மிகவும் காரமானது, வேகமாக வெறியேற்றக் கூடியதென்று எனக்குத் தெரிந்து விட்டது. மிகுதியைக் குடிக்கவில்லை. கையில் வைத்துக் கொண்டே இருந்தேன்.

சிறிது நேரம் சென்றதும் மணி அடிக்கப்பட்டது. எல்லோரும் அமைதியாகத் தரையில் உட்கார்ந்துகொண்டார்கள்.

நானும் உட்கார்ந்துகொண்டேன். எனக்கு அருகில் இருந்த கிழவி ஒருத்தி, என் தோளில் தட்டினாள். திரும்பிப் பார்த்ததும், ''உன் சகா எங்கே?'' என்று கேட்டாள். அலெக்ஸைக் காட்டினேன். ''ஓ... அவரா?...'' என்று சொல்லி விட்டு சும்மாயிருந்தாள்.

அவளை நன்றாகக் கவனித்துப் பார்த்தேன். அவளுக்கு ஐம்பது வயதிருக்கும். தடித்த பெண். மிகவும் அடர்த்தியாக மேக்—அப் போட்டிருந்தாள். அவளுக்கு அருகில் இருபது வயது மதிக்கத்தக்க வாலிபன் ஒருவன் இருந்தான். மிகவும் நெருக்கமாக இருவரும் உட்கார்ந்திருந்தார்கள். அவனுடைய கையை எடுத்துத் தன் மடியில் வைத்து ஆசையோடு பிடித்துக்கொண்டிருந்தாள் அந்தக் கிழவி.

நான் மேடையை கவனிக்கத் தொடங்கினேன். அலெக்ஸ் உட்பட நான்கு குருக்களும் மந்திரங்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். வைன் கிண்ணங்களை உயர்த்திப்

பிடித்து என்னவெல்லாமோ சொல்லிவிட்டு, அதைக் குடித்தார்கள். அவர்களின் வைன் கிண்ணங்கள் காலியான உடனேயே மீண்டும் நிரப்பப்பட்டன.

அவர்கள் வைனைக் குடிக்கும் விதம் எனக்கு கவலையைத் தரத் தொடங்கியது. காரணம், மற்றவர்களைப்போல அலெக்ஸும் குடித்துக்கொண்டிருக்கிறார்! அவர் அளவுக்கு அதிகமாகக் குடிப்பதில்லை. அதனால், ஆகக் கூடுதலான வெறி அவருக்கு ஏதும் செய்துவிடுமென்று எனக்குப் பயமாக இருந்தது.

நான் இப்படிப் பயந்துகொண்டிருக்கும்போதே—

கறுத்த உடைஅணிந்த மனிதர்கள் இருவர் ஒரு யுவதியை மேடைக்கு அழைத்து வந்தார்கள்.

அவளுக்கு பதினறு வயதளவில் இருக்கும்! மெல்லிய வெள்ளை அங்கி அணிந்திருந்தாள்.

அவள் மேடைக்குக் கொண்டுவரப்பட்டதும், குருமார் சொல்லும் மந்திரங்கள் ஒரு உத்வேகத்துடன் உச்சரிக்கப்படுவதைக் கவனித்தேன். அத்தோடு, மண்டபத்தில் இருந்தவர்களும், ஒருவித புத்துணர்வுடன் மேடையைக் கவனிக்கத் தொடங்கினர்கள்.

யுவதி, பலிபீடத்துக்கு அருகே நிறுத்தப்பட்டாள். அவள் மீது தண்ணீர் தெளிக்கப்பட்டது.

பின் அவளுக்கு வைன் கொடுக்கப்பட்டது.

இரண்டு கோப்பை வைன் கொடுத்தார்கள்.

குருக்களில் ஒருவர், அவளின் அங்கியைக் களைந்து போட்டார்.

அதன்பின்பு என் கண்களைக் கூசவைத்த சம்பவங்கள் சில நடக்கத் தொடங்கின.

## 4. உறவுக்கு வந்த பேய்!

அந்த யுவதியின் முகத்தை அப்போது தான் கூர்மையாகக் கவனித்தேன். அது வாடியிருந்தது. அவள் பயத்தோடு நிற்கிறுள். ஆனுல், எதிர்ப்பு தெரிவிக்கும் தைரியம் அவளிடம் இல்லை.

அவள் பயத்தோடு நடப்பதெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு நின்றுள். அலெக்ஸும் மற்ற இரு குருவானவர்களும் மந்திரங்களேச் செய்து கொண்டிருக்க கறுத்த உடை மனிதர்களில் ஒருவர்,ஒரு பாத்திரத்தில் வைனை எடுத்து அதில் பஞ்சை தொட்டு யுவதியின் முக்கிய அங்கங்களைக் கழுவினுர்.

அதன் பின் பலி பீடத்தில் இருந்த பொருட்கள் அகற்றப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டது. யுவதிக்கு மீண்டும் வைன் கொடுக்கப்பட்டது. அவளுக்கு நல்ல வெறி ஏற்றப்படுகிறது என்று நினைத்துக் கொண்டேன்.

அடுத்து கறுத்த உடை மனிதர்கள் இருவர் சேர்ந்து அவளைத் தூக்கி பீடத்தில் கிடத்தினுர்கள். அவளின் கைகளும் கால்களும் பீடத்துடன் கட்டப்பட்டன. இதற்கு ஒரு வகையான தோல் பட்டிகளை உபயோகித்தார்கள்.

அலெக்ஸும் மற்ற இரு குருவானவர்களும் யுவதிக்கு அருகில் நின்று மந்திரங்கள் சொல்லிக் கொண்டிருக்க கறுத்த உடை மனிதர்களில் ஒருவர் முன்னுல் வந்தார். கூடியிருக்கும் ஆட்களைப் பார்த்து—''எல்லோரும் உங்கள் உடல்களை நம் தெய்வத்துக்கு அர்ப்பணிக்கத் தயாராகுங்கள்'' என்றுர்.

எல்லோரும் அமைதியாக எழுந்தார்கள். நானும் எழுந்து நின்றேன். ஆனல், அடுத்ததாக அதிர்ச்சியில் விக்கித்துப் போனேன்.

எல்லோரும் மளமளவென தங்களின் உடைகளை களையத் தொடங்கினுர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் மிகவும் அவசர அவசரமாக அதைச் செய்தார்கள். குருக்களும்—கறுத்த உடை மனிதர்களும் அப்படிச் செய்தார்கள்.

சில நிமிடங்களில் நிர்வாண முகாமில் நிற்பவர்களைப் போல எல்லோரும் நின்றுர்கள். எனக்கு அலெக்ஸைப் பார்க்கப் பார்க்க ஆத்திரமாக இருந்தது. அவர் என்னை ஏமாற்றி அழைத்து வந்து விட்டார். இப்படிப்பட்ட சம்பவங்கள் இங்கு நடக்கும் என்று தெரிந்திருந்தால் நான் வந்திருக்கவே மாட்டேன்.

திடீரென என் கையை யாரோ பிடித்தார்கள். உடல் புல்லரித்து விட்டது. திரும்பிப் பார்த்தேன். அந்த தடித்த பெண். அவளுக்கு நன்ருக வெறியேறி இருந்தது. குரலில் அனுதாபத்தைக் காட்டிக் கொண்டு, ''இந்த கன்னிப்பலி சடங்கைப் பற்றி உனக்குத் தெரியாதா? உடைகளைக் களைந்து போடு'' என்ருள்.

எனக்கு ஆத்திரம் வந்தது. வெடுக்கென அவளிடமிருந்து கையைப் பிடுங்கினேன்.

எல்லோரும் பலி பீடத்தை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். அலெக்ஸுக்கு அருகில் நிற்கும் குருவானவர்களில் ஒருவர், வைன் கிண்ணத்தை உயர்த்திப் பிடித்து ஏதோ மந்திரம் சொல்லி விட்டு அதைக் குடித்தார். பின் யுவதிக்கு அருகில் வந்து பலி பீடத்தின்மேல் ஏறினுர்.

கறுத்த உடை மனிதர்களில் ஒருவர் கூட்டத்தினரைப் பார்த்து, ''தெய்வத்துக்கு உங்கள் உடல்களை சமர்ப்பணம் செய்யுங்கள்'' என்ருர். அவர் சொல்லி வாய் மூடவில்லை ஜோடி ஜோடியாக நின்று கொண்டிருந்தவர்கள் எல்லோரும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு

தரையில் சாய்ந்தார்கள். ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு கணவன் மனைவியாக நடந்துகொள்ளத் தொடங்கினார்கள்.

நான் மேடையைப் பார்த்தேன். யுவதி வேதனையால் முணுமுணுத்துக் கொண்டிருக்க அவள் மீது இருந்த குருவானவர் அவளின் கற்பை கொஞ்சம் கொஞ்சமாக பறித்துக் கொண்டிருந்தார்.

என் கண்களையே நம்பமுடியாமல் நடப்பதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென எனக்கு அலெக்ஸின் ஞாபகம் வந்தது. அவரைத் தேடினேன்; மேடையில் ஓரமாக நின்று கொண்டிருந்தார். என்னையே பார்த்துக்கொண்டிருந்தார்.

எனக்கு அவர் மீது கடுமையான ஆத்திரம் ஏற்பட்டது. வெடுக்கென திரும்பி அந்த மண்டபத்தை விட்டு வெளியேறினேன். வெளியே வந்து அலெக்ஸின் காரில் உட்கார்ந்து கொண்டேன். அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. குமுறிக் குமுறி அழுதேன். நான் ஏன் அழுகிறேன் என்று எனக்கே தெரியவில்லை.

அந்த மண்டபத்தில் நடந்த சடங்கைப் பற்றிய விபரங்கள் எனக்கு உடனே தெரியாவிட்டாலும் பின்னர் போக போகத் தெரிந்தது.

பணத்தை வைத்துக் கொண்டு வாழ்க்கையை எப்படி ரசிப்பது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் சோம்பேறிகள் சிலர் சேர்ந்து தங்களுக்கு சாதகமாக இயற்றிய மதம் தான் அது. அதைப் போல ஏராளமான பேய் மதங்கள் பிரிட்டன் முழுவதும் இருக்கின்றன.

தங்களின் செக்ஸ் விரக்தியை தணித்துக் கொள்வதற்காக அவர்கள் அதை நடத்தி வருகிறார்கள்.

ஒவ்வொரு பூஜையின் போதும் ஒவ்வொரு கன்னிகள் பலிகொடுக்கப்படுகிறார்களாம். இந்தக் கன்னிகளை அவர்கள் பணத்துக்காக வாடகைக்கு அமர்த்திக் கொள்வது என்று நான் கேள்விப் பட்டேன்.

இது இப்படிஇருக்க நான் காரிலிருந்து அழுது கொண்டிருக்கும் போது—

சில நிமிடங்களில் அலெக்ஸ் வந்தார். என் தோளைப் பிடித்து, ''ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டார். நான்பதில் சொல்லவில்லை. என்னை தன்னோடு அணைத்துக் கொண்டார். என்னை முத்தமிட்டார். அலெக்ஸ் வில்லை சாப்பிடாமல் என்னோடு கணவனாக நடந்து கொண்டது அன்று தான்.

அந்த மண்டபத்தில் நடந்த பூஜை ஒரு மனிதனுக்கு எவ்வளவு தூரம் செக்ஸ் பசி கொடுக்கிறது என்பது அப்போது தான் எனக்குத் தெரிந்தது.

அலெக்ஸை மணந்ததன் பின்னர் என் வாழ்க்கையில் பல திகில் சம்பவங்கள் இடம் பெற்றன. அவற்றை விபரிப்பதானால் என் கதையை பல புத்தகங்களாக வெளியிட வேண்டிவரும்.

அதனால் அவற்றை நான் விபரிக்கவில்லை.

அலெக்ஸையும் — எனக்கு பெரும் செல்வாக்கையும் தந்த அந்த வாழ்க்கையையும் துறந்து ஏன் கத்தோலிக்க சுவாமியாரிடம் தஞ்சம் புகுந்தேன் என்ற காரணத்தை விளக்க வேண்டும்.

அது எல்லாம் எனக்கு ஏற்பட்ட குழந்தை ஆசையினால்தான் வந்தது.

நாங்கள் திருமணம் செய்து பல வருடங்களாகி விட்டன. நான் யுவதி என்ற ஸ்தானத்திலிருந்து பெண் என்ற ஸ்தானத்துக்கு வந்து விட்டேன். இந் நிலையில் எனக்கு குழந்தை மீது திடீர் மோகம் பிறந்தது. வீதியில் பெண்கள் குழந்தைகளுடன் செல்வதைப் பார்க்கும் போது ஏக்கமாகப் பார்ப்பேன். எனது மடியில் குழந்தை தவழும் நாள் எப்போது வரும் என்று ஏக்கமாக இருக்கும்.

இதைப் பற்றி அலெக்ஸிடம் கூட மறைமுகமாகச் சொல்லிப் பார்த்தேன். அவர் அதை புரியாதவராகவே இருந்து விட்டார். ஒரு நாள் அலெக்ஸ் ஒரு சடங்கில் கலந்து கொள்வதற்காக தூர இடத்துக்கு சென்றிருந்தார்.

அன்று நான் தனியாக ஷொப்பிங் சென்றிருந்தேன். ஒரு சூப்பர் மார்க்கெட்டுக்குள் நுழைந்து பொருட்கள் வாங்கிக் கொண்டிருக்கும் போது ஒரு தாய் குழந்தையை வண்டியில் வைத்து தள்ளிக் கொண்டே பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தாள். அந்தஅழகானகுழந்தைஎன்னைப்பார்த்து சிரித்தது. எனது மனம் படபடத்தது. ஏக்கமாக அந்தக் குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்னை அந்தக் குழந்தையின் தாய் கவனித்துக் கொண்டிருக்கிறாள் என்பது எனக்கு தெரியவில்லை.

அவள் அருகே வந்து "ஹலோ..... ......" என்று சொன்னதும் தான் என் நிலை எனக்குப் புரிந்தது.

தடுமாற்றத்துடன் அவளைப் பார்த்து சிரித்தேன். ஏதாவது சொல்ல வேண்டும் என நினைத்து, "அழகான குழந்தை மிகவும் துடிப்பாக இருக்கிறது" என்றேன். அவள் நன்றி தெரிவித்து விட்டு தயக்கத்தோடு என்னைப் பார்த்தாள். பிறகு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பேசுவதைப் போல "உனக்கு குழந்தைகள் இல்லையா..." என்று கேட்டாள்.

நான் திருமணமானவளா என்று கேட்காமலேயே குழந்தைகள் இல்லையா என்று கேட்கிறாளே என்று நான் ஆச்சரியப்பட்டாலும் அவள் அதை அப்படிக் கேட்ட காரணம் புரிந்தது. நான் அவளின் குழந்தையைப் பார்த்த விதம் அதைக் காட்டிக் கொடுத்து விட்டது.

ஆம் என்று விரக்தியோடு சொன்னேன். திருமணம் செய்து எத்தனை வருடங்கள் கழிந்து விட்டன என்று கேட்டாள்.

எட்டு வருடங்களாகிறது என்றேன்.

அவள் திருமணம் செய்து பத்து வருடங்களின் பின்னர் தான் அந்தக் குழந்தை பிறந்ததாம். "உன்னிடம் அல்லது உன் கணவரிடம் ஏதாவது குறை இருக்கும். டாக்டரிடம் காட்டிப் பாருங்கள்" என்றார்.

அவளும் டாக்டரிடம் சென்றதன் பின்னர் தான் குழந்தை பிறந்திருக்கிறது. அவள் தான் சென்ற டாக்டரின்

விலாசத்தைச் சொன்னாள். பயப்படாதே கடவுள் உன்னை ஏமாற்றமாட்டார் என்று சொல்லி விட்டு அப்பால் நகர்ந்தாள்.

எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. அந்தப் பெண்ணும் என்னைப் போலவே குழந்தைக்காக ஏங்கியவளாகத் தான் இருக்க வேண்டும். அதனால் தான் மற்றொரு பெண்ணின் ஏக்கத்தை அவளால் உணரமுடிந்திருக்கிறது.

அதற்கு மேல் என்னால் அங்கு நின்று ஷொப்பிங் செய்ய முடியவில்லை. எடுத்த பொருட்களுக்கான பணத்தை கட்டிவிட்டு வெளியே வந்தேன். மனம் பெரும்போராட்டத்தில் ஈடுபட்டது. அந்த டாக்டரிடம் செல்வதா வேண்டாமா என்று தெரியவில்லை.

இறுதியில் போவது என்று முடிவு செய்தேன். டாக்ஸியில் சென்றேன்.

அவர் ஒரு வயது முதிர்ந்த டாக்டர். தலையின் முன் பக்கம் முழுவதும் முடி நரைத்திருந்தது. திருமணம் செய்து பல வருடங்களாகியும் குழந்தைகள் பிறக்கவில்லை என்று சொன்னேன். கணவர் எங்கே என்று கேட்டார். நான் உண்மையைச் சொன்னேன். நான் இங்கு வருவது பற்றி என் கணவருக்குத் தெரியாது, அவர் வெளியூர் சென்றிருக்கிறார் என்றேன்.

இருவரையும் பரிசோதித்துப் பார்த்தால் தான் நல்லது. என்றாலும் பரவாயில்லை என்று சொல்லிவிட்டு என்னை பரிசோதித்தார். எல்லாம் முடிந்ததும் எனக்கு ஒரு அதிர்ச்சித் தகவல் கிடைத்தது. என் உடலில் எவ்வித தவறுமில்லை. குழந்தை பெறுவதற்கான வாய்ப்புகள் அனைத்தும் என் உடலில் இருக்கிறது. தவறு என் கணவரிடம் தான் இருக்க வேண்டுமென்று அவர் சொன்னார்.

வீட்டுக்கு திரும்பியதும் என் நிம்மதி குலைந்து விட்டதைப் போல இருந்தது. அலெக்ஸ் மலடா? அல்லது அவர் பாவிக்கும் வில்லைகள் தான் இந்த வேலையைச் செய்கின்றனவா?

அன்று இரவு அலெக்ஸ் திரும்பியதும் என்னைப்பார்த்து ஏன் வாட்டமாய் இருக்கிறுய் என்று கேட்டார். நான் ஒன்றும் இல்லை என்று சமாளித்து விட்டேன்.

அடுத்த நாளும் எனக்கு பெரும் தடுமாற்றமாக இருந்தது. டாக்டர் சொன்னதை லெக்ஸிடம் சொல்லி அவரை டாக்டரிடம் அழைத்துப் போய் வைத்தியம் செய்வோமா என்று நினைத்தேன். ஆனுல், அதைப்பற்றி அலெக்ஸிடம் பேசவே பயமாக இருந்தது. அதே சமயம் குழந்தை ஆசை என்னை அணு அணுவாக வதைத்துக்கொண்டிருந்தது.

பகல் இருவரும் சாப்பிட்டு முடிந்ததும் அலெக்ஸ் சமையல் அறைக்குள் வந்தார். ''மெக்ஸின் எதையோ மனதுக்குள் வைத்துக் கொண்டு தடுமாறிக்கொண்டிருக்கிறுய். அது என்னவென்று சொல்'' என்ருர்.

''எனக்கொரு குழந்தை வேண்டும்...........'' என்று சொல்லி விட்டேன். எனது கட்டுப்பாட்டை மீறி வார்த்தைகள் வெளிவந்து விட்டன.

என்னை தன்னேடு அணைத்துக் கொண்டார். அதற்கு மேல் என்னுல் எதையும் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. அழுது கொண்டே டாக்டரிடம் சென்ற விஷயத்தை சொன்னேன்.

பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த அலெக்ஸ் அதற்கு மேல் எதுவும் சொல்லவில்லை. தன்பாட்டில் அங்கிருந்து போய்விட்டார்.

பிற்பகல் வெளியே சென்ற அவர் மாலையில் தான் திரும்பி வந்தார். நான் கதிரையில் விரக்தியோடு உட்கார்ந்திருந்தேன். அவரின் கையில் சிறிய பார்சல் ஒன்று இருந்தது.

என்னைப் பார்த்து ''சிறிய வேலை இருக்கிறது. இரு வருகிறேன்'' என்று சொல்லி விட்டு சென்ருர். குளித்து விட்டு வெள்ளை உடை ஒன்றை அணிந்து கொண்டு வந்தார். என்னையும் குளித்து விட்டு பூஜை நடத்தும் அறைக்குள் வரச்சொனுன்ர்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இப்படி திடீரென பூஜை நடத்தப் போகிறாரே என்று வியந்தாலும் அவரின் பேச்சை தட்ட விரும்பாமல் குளித்து விட்டு பூஜை அறைக்குள் நுழைந்தேன்.

ஒவ்வொரு அடியாக நிதானமாக எடுத்து வைத்துக் கொண்டு சென்றேன். பலமுறை தவறி விழுந்தேன். பல தடவை அப்படியே நின்று ஓய்வெடுத்து விட்டு திரும்பவும் நடந்தேன். ஏதோ பல மைல்களைக் கடக்க வேண்டியதைப் போல இருந்தது.

ஒன்று சொல்கிறேன். நான் மாத்திரம் திடமான மனதுடைய பெண்ணாக இல்லாமல் இருந்திருந்தால் மரத்தின் அடியிலிருந்து எழுந்து வீட்டுக்கு வரும் வழியிலேயே கீழே விழுந்து உயிரை விட்டிருப்பேன். எனது உடல் அவ்வளவுக்குப் பலவீனப்பட்டிருந்தது. உடலில் இரத்த ஓட்டம் மிகவும் குறைந்து அங்கங்கள் இயங்க மறுக்கின்றன என்று எனக்கு நன்றாகத் தெரிந்தது. ஆயினும் நான் தைரியத்தை இழக்கவில்லை.

பேய் என்னைவிட சக்திகூடியதாக இருக்கலாம். ஆனால் என் உடலில் உயிர் இருக்கும்வரைக்கும் அதை எதிர்த்துக் கொண்டே இருப்பேன்.

வீடு என் கண்ணில்பட்டபோது எனக்குஏற்பட்டமகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அப்படியே நீண்டநேரம் நின்றேன். பிறகு பயணத்தைத்தொடர்ந்தேன். நான் நடந்த விதத்தை வர்ணித்தால் அதிசயப்படுவீர்கள். மரத்தால் செய்யப்பட்ட உருவத்தைப்போல முதலில் ஒரு காலை எடுத்துவைப்பேன். காலை மடிக்க முடியாமலிருந்ததால் மடிக்காமல் அப்படியே வைப்பேன். பின் அதேபோல மறுகாலை எடுத்துவைப்பேன்.

இப்படி ஒருமாதிரியாக வீட்டு வாசலை அண்மித்ததும் தான் எனக்குத் திக்கென்று இருந்தது. வீட்டுப் படிகளில் கால் அடையாளம் தெரிந்தது. சேற்றை மிதித்துவிட்டு வந்திருக்கும் சிறிய கால்களின் அடையாளங்கள்.

அது ஜோவினுடையது என்று புரிந்துகொண்டேன். மங்கலான வெளிச்சத்திலேயே அவற்றைக் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்குமானல் விடிந்த பிறகு சொல்லவும் வேண்டுமா?

அவற்றுடன் என் கால் அடையாளங்களும் சேர இரவு ஏதோ நடந்திருக்கிறது என்று கார்மலினும், அவளின் கணவனும் உணர்ந்து கொள்வார்கள். எனக்கு ஒரு யோசனை வந்தது.

எனது இரவு அங்கிதான் சேற்றில் பட்டுத் தண்ணீரில் நனைந்திருக்கிறதே. அதைக்கொண்டே காலடையாளங்களை துடைத்து விடலாம் என்று முடிவு செய்தேன்.

சீமெந்து படியில் ஏறினேன். அங்கியைக் கழற்றினேன். அங்கே பிறந்த மேனியுடன் நிற்பதற்கு வெட்கப்படவில்லை. எவரும் இல்லையே. என் கால்களைத் துடைத்துக்கொண்டேன். பின் ஜோவினுடைய காலடையாளங்களைத்துடைக்கத் தொடங்கினேன். அதைச்செய்துகொண்டிருக்கும்போது எனக்குக் கிடைத்த வேதனை, நான் என்றுமே அனுபவித்திராத ஒன்று. ஒவ்வொரு எலும்புகளும், தசைகளும் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல் பயங்கரமாக வலியைக்கொடுத்துக் கொண்டிருக்கும்போது திரும்பி குனிந்து துடைப்பது என்பது பயங்கர சித்திரவதையாக இருந்தது.

காலடையாளங்கள் ஜோவின் அறையை நோக்கிச் சென்றன. நானும் அவனுடைய அறைக்குள் புகுந்தேன்; லைட்டைப் போட்டேன். அவன் கட்டிலுக்கு அருகே கிடந்தான். சுருண்டு உறங்கிக்கொண்டிருந்தான். அவனுடைய உடலிலும் உடைகளிலும் சகதி. அருகே சென்று பார்க்கும்போது முகத்தில் இரத்தக்கறைகள் இருந்தன.

கொஞ்சமும் இரக்கம் இல்லாத அந்தப் பேய் என்னிடம் வெறியாட்டம் ஆடுவதுடன் நின்று விடாமல் எனக்கு எவ்வளவு வேலைகளையும் வைத்துவிட்டுப் போகிறது என்று நினைத்துச் சபித்தேன்.

ஜோ இப்போது சுய உணர்வோடு உறங்கிக் கொண்டிருக்கிறுன். அவன் விழித்து நான் இருக்கும் கோலத்தில்

என்னைக் காண்பது நல்லதல்ல. அதனால், என் அறைக்குப் போனேன். அங்கியை குளியல் அறையில் போட்டுவிட்டு உடலைக் கழுவினேன். புதிய அங்கி அணிந்துகொண்டு ஒரு துணியைத்தண்ணீரில் நனைத்துக்கொண்டு ஜோவின் அறைக் குத் திரும்பி வந்தேன். அவனைத் தட்டி எழுப்பினேன். அவன் விழிக்கவில்லை. மயக்கத்தில் கிடப்பதைப்போல இருந்தான். அவன் அணிந்திருக்கும் சேர்ட்டையும் பிஜாமா வையும் கழற்றினேன். துணியினால் சேற்றைத் துடைத் தேன். குளிர் நீரில் ஊறியிருக்கும் துணி உடலில்பட்டதும் அவனுக்கு கொஞ்சம் விழிப்பு வந்தது. வலியால் முனகுவ தைப் போல அம்மா அம்மா என்றபடி முனகினான். ஆனால், விழிக்கவில்லை. பூரணமாகத் துடைத்துவிட்டு அலுமாரியில் இருந்து புதிய சேர்ட்டையும் பிஜாமாவையும் எடுத்து அணி வித்தேன். அவனைத் தூக்கி கட்டிலில் கிடத்தினேன். அவனை தூக்குவதற்கு நான் பட்டபாடு கொஞ்ச நஞ்சமானதல்ல. மூச்சைப் பிடித்துக்கொண்டு தூக்கியும் அவனுடைய உடல் கைகளிலிருந்து வழுக்கியது. ஒருவாறாக கட்டிலில் கிடத்தி விட்டு சேறு படிந்திருந்த பிஜாமாவையும், துணியையும் எடுத்துப்போய் என் அறையில், குளியல் அறையில் ஒளித்து வைத்தேன். என் உடல் அப்போதிருந்த நிலையில் அதற்கு மேல் என்னால் எதுவும் செய்யமுடியாது. அப்படியே வந்து கட்டிலில் சாய்ந்தேன். கொஞ்ச நேரத்தில் விடிந்து விட் டது. கார்மலினும் அவள் கணவனும் எழுந்து வேலைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதற்கு அறிகுறியான சத்தங்கள் கேட் கத் தொடங்கின. அப்போதுதான் எனக்கு உறக்கம் வந் தது.

இதற்குப் பிறகு நான் விழித்துக்கொண்டபோது —

உடல் முழுவதும் முன்னரைப்போலவே கடுமையாக வலித்துக் கொண்டிருந்தது. நெருப்பாகச் சுட்டுக்கொண்டி ருந்தது. எனக்குக் காய்ச்சல் ஏற்பட்டுவிட்டது. நான் மர ணத்தின் பாதையில் சென்றுகொண்டிருக்கிறேனா என்ற சந்தேகம் ஏற்பட்டுக்கொண்டிருந்தது.

தலையில் காயம்பட்டு, ஜோ இரத்தத்தை உறிஞ்சிய இடத்தில் வலித்தது! உடல் வலியும் அடங்கியதாகத்தெரிய வில்லை. பதிலுக்கு அதிகரித்திருந்தது.

என்ன செய்வது என்று தெரியாத நிலையில் நீண்ட நேரம் அப்படியே கட்டிலில் கிடந்தேன்.

பிறகு எழுந்து வெளியே வந்தேன். வீடு அமைதியில் மூழ்கிக் கிடந்தது. கார்மலினும், அவளின் கணவனும் பால் பண்ணைக்குப் போயிருக்கவேண்டும்.

ஜோ, எங்கேயென்று எனக்குத் தெரியவில்லை.

மெதுவாக கீழே வந்தேன். மருந்துச் சாமான்கள் எங்கே வைக்கப்பட்டிருக்கின்றன என்று எனக்குத்தெரியும். அங்கேபோய் அஸ்பிரீன் வில்லைகள் இரண்டை எடுத்து விழுங்கிவிட்டு, தலைக்கு மருந்து வைத்துக் கட்டினேன்.

திரும்பவும் அறைக்கு வந்து கட்டிலில் படுத்திருந்து கொண்டு நடந்த சம்பவங்களை மனதில் அசைபோட்டேன்.

பேயின் அட்டகாசம் அதிகரித்துவிட்டது. என்னைப் பயமுறுத்தியோ, பலாத்காரம் செய்தோ என் உடலை சித்திரவதை செய்யும் அளவுக்கு அது வந்துவிட்டது. இனி நான் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

முதல் இரவு எனது இரத்தத்தைக் குடித்த பேய், அதைத் தொடர்ந்து செய்ய முயன்றால், சில நாட்களி லேயே நான் பிணமாகிவிட வேண்டியதுதான்.

நீண்ட நேரம் யோசனை செய்தேன். பேயை என்னருகில் நெருங்கவிடாமல் தடுப்பதெப்படி என்றுதான் எனக்குத் தோன்றவில்லை.

பகல், கார்மலின் உணவைத் தயாரித்துவிட்டு என்னைச் சாப்பிட அழைக்கும் வரைக்கும் எனக்கு எவ்வித யோசனையும் வரவில்லை. காய்ச்சல் சற்றுக்குறைந்து இருந்தாலும், உடல் மிகவும் பலவீனமாக இருந்ததாலும் கொஞ்ச உணவு சாப்பிட்டேன்.

சாப்பாடு தயார் என்று கார்மலின் கீழே இருந்து குரல் கொடுக்க, நான் அறையைவிட்டு வெளியே வந்ததும் கீழே நின்றுகொண்டிருந்த கார்மலின் என்னைக் கண்டு விட்டாள். ''தலையில் என்ன கட்டு?'' கார்மலின் அதிசயத்தோடு கேட்டாள்.

நான் கீழே இறங்கி வந்ததும், ''குளியல் அறையில் தலை மோதிவிட்டது. சிறு காயம்தான்'' என்றேன்.

கார்மலினது கணவன் கேட்டபோதும் அதே பதிலைத் தான் சொன்னேன்.

சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது ஜோ கூட கட்டைப் பார்த்துவிட்டு என்ன காயமென்று கேட்டான். கார்மலினும், அவள் கணவனும் அங்கேயிருந்ததால் அதே பதிலைத் தான் நான் சொன்னேன்.

அதன்பிறகு சிறிதுநேரம் பத்திரிகை படித்தேன். பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், என் மனம் ஒருநிலையில் நிற்காமலிருந்தது.

அறைக்கு வந்து படுத்துக்கொண்டேன். பேயை என் அருகில் வரவிடாமல் தடுப்பதெப்படி என்ற கேள்வியே மனதில் பெரிதாக எழுந்து நின்று கொண்டிருந்தது.

பதில் கிடைக்கவில்லை!

நேரம் செல்லச் செல்ல என் இதயம் வேகமாக அடித்துக்கொள்ளத்தொடங்கியது. கார்மலினிடம் விஷயத்தைச் சொல்லி உடனடியாக அலெக்ஸையும், யூஜினையும் வரவழைப்போமா என்றுகூட நினைத்தேன். ஆனால், இது நிரந்தர பலன் தராதென்று தெரிந்ததும், அந்த யோசனையைக் கைவிட்டுவிட்டேன்.

இருட்டிவிட்டது. அறையில் இருக்கவே பயமாக இருந்தது.

கீழே இறங்கி வந்தேன். கார்மலினும், ஜோவும் மாத்திரமிருந்தார்கள்.

கார்மலினின் கணவன் எங்கோ போய்விட்டான். ஜோ ஏதோ பொருட்களை வைத்து விளையாடிக்கொண்டிருக்க, கார்மலின் பைபிள் வாசித்துக்கொண்டிருந்தாள். அவள் மிகவும் தெய்வ பக்தி நிறைந்தவள்.

மாலையானதும் அவளை பைபிளும் கையுமாகத்தான் காணலாம்.

பைபிளில் இருந்து பார்வையை என் பக்கம் திருப்பியவள், ''மெக்ஸின் ஏன் வாட்டமாக இருக்கிறாய்......'' என்று கேட்டாள். தலையில் ஏற்பட்ட காயத்தினால் தலை வலிக்கிறது என்றேன். அவள் தன் கவனத்தை மீண்டும் பைபிளின் பக்கம் திருப்பினாள். அவளுக்கு எதிரே உட்கார்ந்து கூரையைப் பார்த்தபடி யோசித்துக்கொண்டிருந்தேன்.

சிறிது சத்தமாக பைபிளை வாசிக்கும் கார்மலினின் குரல் இடைக்கிடை என் காதில் விழுந்து யோசனையைக் கலைத்துக்கொண்டிருந்தது. யேசுவை பிசாசு மலைக்கு கொண்டு சென்று சோதனை செய்த அத்தியாயத்தை அவள் வாசித்துக்கொண்டிருந்தாள்.

''சாத்தான் சர்வ வல்லமை பொருந்தியவன். சர்வேசுரனுக்கு நிகரான சக்தி அவனுக்குண்டு'' என்று அவள் வாசித்தபோது என் உடல் சிலிர்த்தது. அவ்வளவு வல்லமை பொருந்திய ஏசு கிறிஸ்துவையே சோதித்த பேயிடமிருந்து எனக்கு விடுதலை கிடைக்காதா?

எனக்கு வியர்க்கத் தொடங்கியது.

அவள் தொடர்ந்து வாசித்துக்கொண்டிருந்தாள்.

''சாத்தான் உங்களைப் பல வழிகளிலும் சோதிப்பான். சர்வேசுரன் மீது நம்பிக்கை வையுங்கள்...''

நான் வெறி பிடித்தவளைப் போல கார்மலினையே பார்த்துக்கொண்டு இருந்தேன். எனக்கு மூளை குழம்பிவிட்டது போல இருந்தது. இவ்வளவு நாளும் மனதில் உதிக்காத எண்ணங்களெல்லாம் உதித்துக்கொண்டிருந்தன.

இறைவன் என்று ஒருவன் இருப்பதையே மறந்து, பேய்தான் இறைவன் என்று எண்ணிக்கொண்டிருந்த எனக்கு இத்தனை நாட்களுக்குப் பிறகு முதல் தடவையாக இறைவனின் ஞாபகம் வந்தது.

இளம் வயதில் பள்ளிக்கூடத்தில் சமயபாடம் படிக்கும்போது ஆசிரியை சொல்லித் தந்த விஷயங்கள் ஞாபகம் வந்தன. "பேய்களை ஒழிப்பதற்கென்று மிக்கேல் சம்மனசானவர் சர்வேசுரனால் அனுப்பப்பட்டிருக்கிறார்" என்று ஒரு நாள்—அந்த ஆசிரியை சொன்னது ஞாபகம் வந்தது.

மிக்கேல் சம்மனசானவர் பேயை காலால் மிதித்து, ஈட்டியினால் குத்திக்கொண்டிருக்கும் காட்சி என் கண் முன் தெரிந்தது.

துள்ளிக்கொண்டெழுந்து கார்மலினுக்கு அருகில் வந்தேன். நான் எழுந்த விதத்தைக் கண்டு அவள் திடுக்கிட்டாள். அருகே வந்து நான் அவளின் கையைப் பிடித்ததும் பயந்துபோனாள். என் முகம் அவ்வளவு விகாரமாக மாறி இருந்திருக்க வேண்டும்.

சிறிது நேரம் பதட்டத்தோடு இருந்தவள், பிறகு "என்ன...... என்ன...... உனக்கு......?" என்று கலவரத்துடன் கேட்டாள்.

"கார்மலின்...... எனக்கு மிக்கேல் சம்மனசின் படமொன்று வேண்டும்......" என்று கெஞ்சினேன்.

அவள் முகத்தில் ஆச்சரியக் குறிகள் படர்ந்தன.

"ஏன் திடீரென்று இப்படிக் கேட்கிறாய்......?" என்றாள்.

"அதையெல்லாம் பிறகு சொல்கிறேன். இரவில் என் கட்டிலில் வைத்துக்கொள்ள வேண்டும்......" என்றேன்.

அவள் சந்தேகத்தோடு பார்த்தாள்.

"பயமாக இருக்கிறதா......? அல்லது பயந்து விட்டாயா......?"

"தயவுசெய்து அதையெல்லாம் இப்போது கேட்காதே...... மிக்கேல் சம்மனசின் படத்தைத் தா" என்றேன் அவளின் கையை இறுக்கிக்கொண்டே.

பைபிளை அப்பால் வைத்தாள். ''படம் என்ன...... என்னிடம் மிக்கேல் சம்மனசது சிலை ஒன்றே இருக்கிறது. மந்திரிக்கப்பட்டது. வா எடுத்துத் தருகிறேன்'' என்றாள்.

அவளின் பின்னால் சென்றேன். நூலக அறைபோன்று வைக்கப் பட்டிருந்த விசாலமான அறைக்குள் நுழைந்தோம்.

அங்கே யேசுவின் படமும், வேறு படங்களும் இருந்தன. ஒரு சிறு அலுமாரியின் மீது மிக்கேல் சம்மனசினதும், வேறொரு சிலையும் இருந்தன. அதைக் காட்டி எடுத்துக்கொள் என்றாள்.

என்னை மின்சாரம் தாக்கியது போல இருந்தது.

அப்படியே விறைத்து நின்றேன். பின் மந்திரத்தால் கட்டுண்டவளைப் போல முன்னே சென்றேன். அந்தச் சிறிய சிலையை எடுக்கக் கையை நீட்டியபோது, இரண்டு கைகளும் நடுங்கின. நெருப்புக்கு அருகே கையைக் கொண்டு செல்வதைப் போல இருந்தது.

கண்கள் கலங்கிக் கொண்டு வந்தன. ஒருவாறாக அதைப் பிடித்தேன். பய பக்தியுடன் சிலையைத் தூக்கினேன்.

கையில் பிடித்துப் பார்த்துக்கொண்டே இருந்தேன்.

''மெக்ஸின்...... ஏதோ ஒரு காரணத்துக்காக இந்தச் சிலையை கேட்கிறாய். அது என்னவென்று சொல்ல மாட்டாயா?'' என்று கேட்டாள் கார்மலின்.

அப்போதுதான் எனக்கு சுய உணர்வு வந்தது

திரும்பி அவளைப் பார்த்தேன். பதில் சொல்லவில்லை. திரும்பி அறைக்கு வெளியே வந்தேன். மேல் மாடியை நோக்கிச் சென்றேன். கார்மலின் அதிசயமாக என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள் என்று எனக்குத் தெரியும். என்றாலும் நான் திரும்பிப் பார்க்கவில்லை.

## 7. கோவிலில் அடைக்கலம்!

கார்மலின் என்னை அனுதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் அழுகையையும்-மனதில் குமுறிக்கொண்டிருக்கும் பயத்தையும் என்னால் அடக்க முடியாமல் போய் விட்டது.

அவளின் மார்பில் முகத்தை புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழத் தொடங்கினேன்.

'அழாதே மெக்ஸின்' என்று அவள் ஆறுதல் சொன்னாள். எனது அழுகை அடங்கியதும் ''மெக்ஸின் நீ எதையோ மனதில் வைத்துக் கொண்டு மிகவும் சஞ்சலப்படுகிறாய். அது என்னவென்று என்னிடம் சொல்லு. முடியுமானால் உனக்கு என்னால் ஆன உதவியைச் செய்கிறேன்'' என்றாள்.

எல்லாவற்றையும் அவளிடம் சொல்லிவிட வேண்டுமென்று ஆவலாக இருந்தது. ஆனால், அதனால் ஏற்படக் கூடிய பயங்கர விளைவுகளை நினைத்துப்பார்க்கும் போது பயமாக இருந்தது.

''என்னால் சொல்ல முடியாது'' என்று அழுகைக்கு இடையே சொன்னேன். அவள் வற்புறுத்தவில்லை.

சிறிது நேரம் என்னோடு இருந்தாள். பின் சாப்பிட அழைத்துப் போனாள். எனக்காக விசேடமாக சூப் தயாரித்து இருந்தாள். அதைக்குடித்து இரண்டு துண்டு ரொட்டி சாப்பிட்டேன்.

சாப்பிட்டு முடிந்து அறைக்கு திரும்பி வருவதற்கே பயமாக இருந்தது. எனக்கு எதிரில் இருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும் ஜோவைப் பார்க்கவே பயமாக இருந்தது. ஆனால், அறையில் நான் கொண்டு போய் வைத்திருக்கும் மிக்

கேல் சம்மனசின் சிலையை நினைக்கும் போதே கொஞ்சம் தைரியம் பிறந்தது.

கார்மலினும் அவளின் கணவனும் படுக்கைக்குச் செல்லத் தயாராகும் போது நானும் புறப்பட்டேன்.

அறைக்குள் புகுந்து கதவை இறுக்கமாக அடைத்து விட்டு கட்டிலுக்கு வந்தேன். நான் சிறு வயதில் படித்த ஜெபங்கள் சிலவற்றை ஞாபகப்படுத்திக் கொண்டேன். மிக்கேல் சம்மனசின் சிலையைப் பார்த்துக் கொண்டு அவற்றை சொன்னேன்.

பிறகு சிலையைப் பிடித்துக் கொண்டே படுத்து விட்டேன். மற்ற நாட்களை விட அன்று வேகமாக உறங்கி விட்டேன். அப்போது நேரம் எத்தனை மணியென்று தெரியவில்லை. கனவு போல ஒரு பயங்கர காட்சி தெரிந்தது. இராட்சத உருவத்தைக் கொண்ட மனிதன் ஒருவன் பெரிய சுத்தியல் ஒன்றினால் எனது தலையில் அடிப்பது போல தெரிந்தது. விழித்துக்கொண்டேன். கண்களைத் திறந்து பார்த்த போது அறைக் கதவு திறந்து இருப்பது தெரிந்தது.

நான் அதைப் பூட்டி விட்டது நன்றாக ஞாபம் வந்தது. திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தேன். வாசலில் ஜோ நின்று கொண்டிருந்தான். அவனுடைய முகத்தில் கோப வெறி தெரிந்தது.

என்னை சுட்டெரித்து விடப் போவதைப் போல பார்த்துக் கொண்டு நின்றான். உள்ளே வர பயந்து கொண்டு வாசலில் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

நான் தன்னைப் பார்ப்பதைக் கண்டதும் அவனுடைய வாய் அசைந்தது. அவன் மெதுவாகத் தான் பேசினான். ஆனால், அது எனக்குத் தெளிவாகக் கேட்டது.

''அவனை வெளியே போகச் சொல்...... என் கோபத்தைக் கிளறாதே......'' என்றான். குரல் மிகவும் கடுமையாக இருந்தது. என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

அவன் யாரைச் சொல்கிறான் என்று எனக்கு விளங்கவில்லை. அவன் இனி அறைக்குள் புகுந்து என் இரத்தத்தைக்

குடிக்கப் போகிருன் என்ற நினைவே என் முன் எழுந்து நின் றது.

நான் மருண்டு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் உள்ளே வந்தால் எப்படி தப்பிச் செல்வது என்று ஆராய்ந்து கொண்டிருந்தேன்.

''அவன் திரும்பவும் பேசினுன். ''அவனை ஜன்னல் வழி யாக வெளியே போகச் சொல்......... அவனை ஏன் இங்கே கொண்டு வந்தாய்?'' என்று தலையணையைப் பார்த்துக் கொண்டு ஒருவித பயத்தோடு பேசினுன்.

அப்போது தான் எனக்கு அருகில் இருக்கும் மிக்கேல் சம்மனசினது ஞாபகம் வந்தது. அதைக் கண்டுதானு ஜோ பயப்படுகிருன். அந்தச் சிலையைத்தானு வெளியே எறியச் சொல்கிருன்.

எனக்கு தைரியம் பிறந்தது. சிலையை கையில் எடுத் தேன். ஏளனமாக அவனை பார்த்தேன்.

சிலை என் கைக்கு வந்ததும் அவனுடைய முகம் போன போக்கைக் கண்டு எனக்கே பயம் ஏற்பட்டது. சட்டென பின்னல் ஒரு அடி வைத்து நின்ருன். பற்களை நறநறவென கடித்தான்.கண்கள் இரண்டும் இரத்தச்சிவப்பாக வெளியே வந்து விழுந்து விடப்போவதைப் போல வீங்கியிருந்தன.

''அவனைத் தொடாதே...............வெளியே போகச் சொல்லு'' என்று கத்தினுன்.

ஜோ பேசும் விதம் அதிசயமானதாக இருந்தது. அவன் வாயை மாத்திரம் அசைத்தான். ஆனல், ஓசை என் காது களைத் துளைத்துக் கொண்டு சென்றது.

ஜோவிடம் ஏற்படும் பதட்டம் எனக்குத் தைரியத் தைக் கொடுத்தது. எவருக்கும் அடங்காமல் என் உயிரைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்துக் கொண்டிருந்த பேயை அடக்கி விட்டேன். இனி அது என்னருகே வராமல் செய்து விடவேண்டும்.

எனக்கு சிரிப்பு வந்தது. ''மிக்கேல் சம்மனசு இனி இர வும் பகலும் என்னேடு தான் இருப்பார். இனி என்னிடம்

வராதே......''என்று சொல்லிக் கொண்டு எழுந்தேன். கட்டிலை விட்டு இறங்கினேன்.

ஜோவின் முகம் வெளிறியது. பின் வாங்கினுன். நான் முன்னேறிக் கொண்டு சென்றேன். சிலையை முன்னுல் பிடித்துக்கொண்டேன். நான் வாசலை நெருங்கும் போது ஜோ அவனுடைய அறையை நோக்கி ஓடினுன்.

நான் வாசலுக்கு வந்து பார்த்த போது அவன் அவனுடைய அறைக் கதவை திறந்து பிடித்தபடி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இத்தனை மாதங்களுக்குப் பிறகு அன்று தான் நான் முதல் தடவையாக மனநிம்மதியோடு சிரித்தேன். வாய் விட்டுச்சிரித்தேன்.

கதவை அடைத்து விட்டு உள்ளே திரும்பி வந்தேன். அந்தச் சிலைக்கு இருக்கும் சக்தி என்னை புல்லரிக்க வைத்தது.

மனதார மிக்கேல் சம்மனசுக்கு நன்றி சொன்னேன். கட்டிலில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டேன். உறக்கம் வருவது போல இருந்தது. முதலில் என் கனவில் தோன்றிய அந்த இராட்சத உருவ மனிதன் திரும்பவும் தோன்றினுன். இப்போது தூரத்தில் நின்று கொண்டு என்னை நோக்கி கற்களை வீசினுன்.

விழித்துக் கொண்டேன். அப்படியே இருந்தேன். அவனை வெளியே போகச் சொல் என்று பல குரல்கள் கேட்டன. எனது காது அடைப்பது போல இருந்தது. சிலையை கையில் எடுத்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தேன். அறை முழுவதும் சுவரோரமாக நூற்றுக்கணக்கான ஜோக்கள் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

எல்லோரும் ஏககாலத்தில் அவனை வெளியே போகச் சொல் என்று கூச்சலிடுவது தெரிந்தது.

'முடியாது' என்று வெறி பிடித்தவளைப் போல முணுமுணுத்தேன்.

அவர்களின் கைகளில் பெரிய கருங்கற்கள் தோன்றின. ''வெளியே போகச் சொல்'' என்று திரும்பவும் கத்தினார்கள். என் காதுகள் அடைத்தன.

'முடியாது' என்று திரும்பவும் சொன்னேன். எல்லோரும் என்னை நோக்கி கற்களை வீசினார்கள். நூற்றுக்கணக்கான பெரிய கற்கள். எல்லாம் என் தலையை நோக்கி வருகின்றன.

அம்மா என்றபடி சிலையை அணைத்துக் கொண்டு குனிந்தேன். கற்கள் என்னை அண்மிக்கும் போதே திடீரென மறைந்து விட்டன.

குனிந்து இருந்தவள் எழவில்லை. ''அவனை வெளியே அனுப்பாவிட்டால் உன்னை கொன்று விடுவோம். அவன் பொல்லாதவன். உன்னை ஏமாற்றுகிறான்.'' என்று ஜோக்கள் திரும்பவும் கத்தின.

''நீ தான் பொல்லாதவன்.வெளியே போ......''என்று எழுந்து கத்தினேன்.

''உன்னை என்ன செய்கிறோம் பார்...........'' என்றபடி ஜோக்கள் எல்லோரும் கையை நீட்டினார்கள். அந்தக் கைகள் நீண்டு கொண்டு வந்து நான் இருக்கும் கட்டிலைப் பிடித்தன.

முன்னர் நடந்த சம்பவங்களுக்கும் இப்போது நடக்கும் சம்பவங்களுக்கும் பெரும் வித்தியாசம் இருப்பதை என்னால் உணரமுடிந்தது.

முன்னர் எல்லாம் உண்மை நிகழ்ச்சிகளாக நடந்தன. அவை எனக்குத் தெளிவாகத் தெரிந்தன. இப்போது எல்லாம் கனவில் நடப்பது போல இருந்தது. நான் விழித்துக் கொண்டிருந்து பேசுவது தெரிந்தாலும் அவை துல்லியமானவையாக இருக்கவில்லை.

நான் பதை பதைத்துக் கொண்டு கட்டிலில் இருக்க, அறையில் சுவரோரமாக நின்று கொண்டிருக்கும் ஜோக்களின் கைகள் கட்டிலை நோக்கி வந்தன. அந்தக் கைகள் வளர்ந்து கொண்டு வந்தன.

கட்டிலைப் பிடித்ததும் நான் கூச்சலிட வாயைத் திறந்தேன். சத்தம் வெளியே வரவில்லை. என் கையில் இருக்கும் மிக்கேல் சம்மனசின் சிலையை மார்போடு இறுக்கமாக அணைத்துக் கொண்டு அழுதேன்.

கட்டிலை அந்தக் கைகள் மேலே உயர்த்தின. நான் கட்டிலை விட்டு இறங்க முயன்றேன். அதற்குள்ளாக கட்டில் அந்தரத்துக்கு வந்து விட்டது.

கட்டில் அங்குமிங்கும் ஆடியது. நான் பயந்து நடுங்குவதைப் பார்த்து விட்டு ஜோக்கள் அனைவரும் வெறித்தனமாக சிரித்தார்கள்.

''அவனை வெளியே போகச் சொல்லு'' என்று திரும்பவும் சொன்னார்கள்.

எனக்கு ஆத்திரம் வந்தது. சிலையை ஆத்திரத்தோடு முன்னால் நீட்டிப் பிடித்தேன். கட்டில் பொத்தென கீழே விழுந்தது. எனது தலையில் அடிபட்டது போல இருந்தது. என்றாலும் நான் சிலையைவிடவில்லை. இறுக்கமாகப் பிடித்துக் கொண்டேன்.

திடீரென கனவு கலைவது போல இருந்தது. கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தேன். ஜோ வாசலில் நின்று கொண்டிருந்தான். இப்போது அவன் மாத்திரமே நிற்கிறான்.

ஏதோ சொல்லப் போனான். நான் கட்டிலிலிருந்து இறங்கி அவனை நோக்கி வெறியோடு வந்தேன். அவன் மாத்திரம் என் கையில் சிக்கினால் மிக்கேல் சம்மனசின் சிலையால் அவனது தலையில் அடிக்க வேண்டும் என்று எனக்கு ஆத்திரமாக இருந்தது.

ஆனால், நான் வருவதைக் கண்டதும் அவன் ஓடி விட்டான்.

நான் வாசலில் நின்று கொண்டிருந்தேன். அவன், அவனது வாசலுக்கு அருகில் நின்று கொண்டு என்னை கண்காணித்துக் கொண்டிருந்தான்.

எனக்கு அருகே வரப்பயப்பட்டு அவன்தூரத்தில் நின்று கொண்டிருக்கிறான் என்று பார்த்ததும் தெரிந்தது.

நான் அறைக்குள் திரும்பி வந்தால் அவன் மீண்டும் வாசலுக்கு வருவான் என எனக்குத் தெரியும். அதனுல் அங்கே நின்றேன்.

ஜோவுக்குஏற்பட்டிருக்கும் கோபத்தை நன்ருக உணர முடிந்தது. அங்கு நின்று கொண்டு கெட்ட வார்த்தைகளி ஞல் ஏசினுன். அவளே விட்டு விட்டு வேருெருவனை எடுத் திருக்கும் விபசாரி என்று குற்றஞ்சாட்டினுன். அசிங்கமான சேட்டைகள் எல்லாம் செய்தான்.

எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டேன். நேரம் சென்று கொண்டிருந்தது. எனக்கு உறக்கமே இல்லே. வாச லில் நின்று கொண்டிருந்தேன். கால் வலிக்கவே கதவுக்கு அருகே உட்கார்ந்து விட்டேன்.

விடிந்து கொண்டு வந்தது. தூக்கக் கலக்கமாக இருந் தது. மரங்களில் இருக்கும் பறவைகள் விழித்துக்கொள்ளத் தொடங்கியதும் ஜோ அங்கிருந்து மறைந்து விட்டான். நான் அப்படியே வாசலில் உறங்கி விட்டேன்.

இராட்சத உருவத்தைக் கொண்ட மனிதர்கள் சிலர் என்னைச்சுற்றி நின்றுகொண்டிருப்பது போலவும் கையில் ஈட்டி வைத்திருக்கும் போர் வீரன் ஒருவன் அவர்களை என் அருகில் நெருங்க விடாமல் தடுத்துக் கொண்டிருப்பது போலவும் கனவு கண்டு கொண்டிருக்கும் போது விழிப்பு வந்தது.

என்னை கார்மலின் தட்டி எழுப்பியதனுல் ஏற்பட்ட விழிப்பு.

நான் அறையின் வாசலில் குறுக்கே படுத்து உறங்கிக் கொண்டிருக்க அவள் என்னை எழுப்பியிருக்கிருள். வாரிச் சுருட்டிக் கொண்டு நான் எழுந்திருக்க கையிலிருக்கும் சிலே யையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''மெக்ஸின் வா முகம் கழுவலாம்'' என்ருள். சிலேயை வாங்கினுள். அறைக்கு உள்ளே வந்து அதை கட்டிலில் வைத்து விட்டு நான் குளியலறைக்குச் செல்லும் போது பின்னுல் வந்து என்னை கண்காணித்துக் கொண்டிருந்தாள்.

நான் முகத்தைத் துடைத்ததும் வா போகலாம் என்று கீழே அழைத்து வந்தாள்.

கார்மலினிடம் ஒருமாற்றம் ஏற்பட்டிருப்பதைக்கவனித்தேன். கொஞ்சம் கடு கடுப்பாக முகத்தை வைத்துக் கொண்டு பேசினுள்.

கீழே வந்ததும் எனக்கு காலே உணவு தந்தாள். நான் சாப்பிட்டு முடிந்ததும் எனக்கு அருகே வந்து உட்கார்ந்தாள். "இதோ பார் மெக்ஸின், நீ உடல் நலம் தேற வேண்டும் என்பதற்காக உன்னே இங்கே கொண்டு வந்து விட்டார்கள். ஆனுல் இங்கு, வந்த ஒரு சில நாட்களுக்குள்ளாகவே நீ, நன்ருகமெலிந்து கிழவியைப்போல மாறிவிட்டாய். உனக்கு ஏதாவது நடந்தால் நான் தான் பதில் சொல்ல வேண்டும். அதனுல் என்னிடம் உண்மையைச் சொல்லிவிடு. நான் அதை ரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்று நீ விரும்பினுல் ரகசியமாக வைத்திருந்து என்னுல் முடியுமான உதவிகளே செய்கிறேன்" என்ருள்.

நான் பதில் சொல்லவில்லே. அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். என் மனம் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது. மிக்கேல் சம்மனசினதுசிலே மூலமாக பேய் எனக்கு அருகில் வருவதைத் தடுத்து விட்டேன். ஆனுல், அதன் தொல்லேகளே நீக்க முடியாமல் இருக்கிறது.

மதத்தின் மீது பூரண நம்பிக்கை வைத்தால் பேயிடம் இருந்து தப்பிவிட முடியுமா?

கார்மலினிடம் உண்மையைச்சொல்லிவிட்டால் அவள் என் மீது அருவருப்பு கொள்வாளா அல்லது அனுதாபப் பட்டு உதவ முன்வருவாளா?

இந்தக் கேள்விகளுக்கு விடை காண முடியாமல் நான் திணறிக்கொண்டிருக்கும் போது, அவள் மீண்டும் என் கையைப்பிடித்து உலுக்கினுள். "மெக்ஸின் தயங்கிக் கொண்டிருப்பதில் பலனில்லே. உன்னே என் உடன்பிறவா தங்கையாகவே மதித்து வருகிறேன். அதனுல் தைரியமாக எல்லாவற்றையும் சொல்லு" என்ருள்.

அவளை வெறித்துப் பார்த்தேன். பின் மளமளவென்று எல்லாவற்றையும் சொல்லத் தொடங்கினேன். எதையும் மறைக்கவில்லை. ஆரம்பம் முதல் முதலிரவு நடந்த சம் பவங்கள் வரைக்கும் அத்தனையையும் சொன்னேன்.

அவள் இடையில் குறுக்கிடவே இல்லை. இடிந்து போய் நான் சொல்வதையே கேட்டுக் கொண்டிருந்தாள். நான் சொல்லி முடிந்ததும் எழுந்தாள். எதுவும் சொல்லாமல் என் கையைப் பிடித்து இழுத்தாள். இருவரும் மேலே சென் ரேம். என் அறைக்குள் சென்று கட்டிலில் இருக்கும் மிக் கேல் சம்மனசினது சிலையை எடுத்து என்னிடம் தந்தாள். ''இதை வைத்துக் கொள். எக் காரணத்தைக் கொண்டும் கீழே வைக்காதே'' என்றுஎச்சரிக்கும் தொனியில் சொல்லி விட்டு என்னை அழைத்துக் கொண்டு ஜோவின் அறைக்குச் சென்ருள்.

ஜோ இன்னும் உறங்கிக் கொண்டிருந்தான். அவள் கவலையோடு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு அவனை எழுப்பினுள். அவன் கண்களை கசக்கிக் கொண்டு எழுந்து உட்கார்ந்ததும் அவனை அழைத்துக் கொண்டு கீழே வந்தாள். எதுவும் சொல்லாமல் அவனுடைய கையில் ஒரு சிலுவையைக் கொடுத்து அதை பத்திரமாக கையில் பிடித் துக் கொள்ளுமாறு சொன்னுள்.

கார்மலின் என்ன செய்கிருள் என்று எனக்குப் புரிய வில்லை. ஆனல், அவள் இருக்கும் நிலையில் அதைக் கேட்ப தற்கு தைரியம் வரவில்லை.

மூவரும் வீட்டை விட்டு வெளியே வந்தோம். வெளியே அவர்கள் உபயோகிக்கும் வெகன் வாகனம் நின்றது. அதன் பின் ஆசனத்தில் என்னையும்,ஜோவையும் ஏறச்சொன்னுள். அவள் முன்னல் ஏறி சாரதியின் ஆசனத்தில் அமர்ந்து கொண்டே திரும்பி எங்களைப் பார்த்து, ''என்ன நடந்தா லும் அந்தச் சிலையையும், சிலுவையையும் கைதவற விட்டு விடாதீர்கள்'' என்ருள்.

நான் சரி என்றேன்.

ஜோ புதிராக அவளைப் பார்த்து, 'இதெல்லாம் என்ன? எங்கே போகிறோம்' என்றான்.

''அதைப் பிறகு சொல்கிறேன் ஜோ'' என்றவாறு அவள் காரை ஓடவிட்டாள்.

கார்மலின் என்னை எங்கே கொண்டு செல்கிறாள் என்று எனக்கு தெரியவில்லை. ஆனால், அவள் எனக்கு தீங்கு விளை விக்கக்கூடிய வகையில் நடந்து கொள்ள மாட்டாள் என்ற நம்பிக்கை இருந்ததால் பேசாமல் இருந்தேன்.

தோட்டத்தை கடக்கு முன்பு கார்மலினது கணவனைக் கண்டேன். பால் வாளியையெடுத்து வந்து கொண்டிருந்த வன் காரைக் கண்டதும் நின்றான். கார்மலின் காரை அவ னுக்கு அருகே நிறுத்தியதும் ''எங்கே போகிறாய்?'' என்று கேட்டான். பின்னால் சிலுவையையும் சிலையையும் வைத் துக்கொண்டு இருக்கும் என்னையும், ஜோவையும் கண்டதும் அவனுடைய கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. அவன் என்னவென்று விசாரிக்கும் முன்பு கார்மலின் பேசினாள். ''ரொபர்ட்..........அவசர காரியமாக போகிறேன். பிறகு எல்லாவற்றையும் சொல்கிறேன்'' என்றாள்.

அவன் அவளை சந்தேகமாகப் பார்த்தான். என்றாலும் ஒன்றும் சொல்லவில்லை.

கார் புறப்பட்டு ஓடியது. கேட்டை அண்மித்தபோது திரும்பிப் பார்த்தேன். ரொபர்ட் அந்த இடத்திலேயே நின்று காரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

கார் வீதிக்கு வந்து ஓடியது. நானும் கார்மலினும் எது வும் சொல்லவில்லை. ஜோ மாத்திரம் தனக்கே உரித்தான துடுக்குத்தனத்துடன் அடிக்கடி குறும்புப் பேச்சுகள் பேசிக் கொண்டிருந்தான். கார்மலினும் நானும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் எங்கள் பாட்டில் இருந்தோம்.

திடீரென மழை பெய்யத் தொடங்கியது. பலமாக காற்று வீசியது.எதிரே வரும் வாகனங்களைக்கண்டு கொள்ள முடியாமல் இருந்தது. மிகவும் அருகே வந்த பிறகு தான் அவற்றைக் கண்டு கொள்ள முடிந்தது.

கார்மலின் வாகனத்தை மிகவும் மெதுவாக ஓட்டினுள். கடுமையான குளிராக இருந்தது.

சிறிய பாலம் ஒன்றைக் கடந்து கொண்டிருக்கும் போது—

திடீரென ஜோ போட்ட கூச்சல் என் உடலை புல்லரிக்க வைத்தது.

அவன் பயங்கரமாக அலறிக் கொண்டு கார்மலினை நோக்கி பாய்ந்தான். அவன் பாய்ந்த வேகத்தில் ஸ்டியரிங் ஆடியது. கார் வளைந்து நின்றது. அவள் பயத்தோடு பின்னுல் திரும்பினுள்.

ஜோவின் உடலில் பேய் புகுந்து விட்டதா என்ற கேள்வியுடன் பயத்தோடு அவனைப் பார்த்தேன்.

அவனுடைய கையிலிருந்த சிலுவை கீழே விழுந்து கிடந்தது. அவன் தனது தாயின் உடலைக் கட்டிப் பிடித்தபடி பயந்தவனுக 'அம்மா அம்மா' என்று கத்திக் கொண்டிருந்தான்.

கார்மலினும் நன்ருகப் பயந்து விட்டாள்.

கழுத்திலிருந்த அவனுடைய கையை விடுவித்துக் கொண்டு ''ஜோ.........'' என்ருள்.

அவன் ஜன்னலுக்கு அருகே இருக்கப் பயந்தவனைப் போல நடுவுக்கு வந்தான். தாயின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

இதற்கிடையே பின்னுல் வந்து கொண்டிருந்த கார் ஒன்று எங்கள் வாகனத்துடன் மோதி நின்றது. அந்தக்காரக்காரன் ஹாரனை பலமாக அழுத்திக் கொண்டிருந்தான்.

ஜோ ஜன்னலைக் காட்டினுன். ''அவன் என்னை அடிக்க வருகிருன்......'' என்று பயந்த குரலில் சொன்னுன்.

நான் திடுக்கிட்டு அவன் காட்டிய பக்கம் பார்த்தேன். இராட்சத முகம் ஒன்று தெரிந்தது. அது எப்படியான முகம் என்று விபரிக்க முடியாது. ஆனுல், அது என்னை நடு நடுங்க வைத்துக் கொண்டிருந்தது. என்னைப் பார்த்து ''உன்னை சும்மா விடமாட்டேன்'' என்று சொல்வது போல இருந்தது.

கார்மலினும் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாள். ஆனல், அவளுக்கு எதுவும் தெரியவில்லை. என்றாலும் அவளால் விளங்கிக் கொள்ள முடிந்தது. நான் பேயறைந்த மாதிரி இருப்பதைக் கண்டதும் அவளால் அதை ஊகித்துக் கொள்ள முடிந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

''மெக்ஸின் சிலையை இறுக்கமாகப் பிடித்துக் கொள். சிலுவையை எடுத்து வைத்துக் கொண்டு ஜோவையும் உன்னோடு அணைத்துக் கொள்'' என்றாள்.

பின்னல் பல கார்கள் ஹாரனை அடித்துக் கொண்டிருந்தன.

நான் கீழே கிடக்கும் சிலுவையை எடுத்துக் கொண்டேன். ஜோவை இழுத்து என்னோடு அணைத்து அவனுடைய முகத்தை என் மார்பில் சாய்த்துக் கொண்டேன்.

கார்மலின் அவசர அவசரமாக காரை ஓடவிட்டாள்.

நான் ஜன்னலைப் பார்க்கவில்லை. கார்மலினது பின்புறத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவளும் மிகவும் பயந்து போயிருந்தாள். ஸ்டியரிங்கில் இருக்கும் அவளின் கை நடுங்கிக் கொண்டிருந்தது.

ஜோ மெதுவாக தலையை நிமிர்த்தினன். திரும்பி ஜன்னலைப் பார்த்தான். திடீரென மீண்டும் என் மார்பில் தலையை புதைத்துக் கொண்டு ''அவன் ஏசுகிறன்............ பயமாக இருக்கிறது'' என்று அழுதான்.

என்னை அறியாமலேயே ஒரு காந்த சக்தியினல் இழுப்பட்டு செல்வது போல என் பார்வை ஜன்னல் பக்கமாகச் சென்றது.

அந்த கறுத்த உருவம் கண்களில்அனல் பறக்க என்னைப் பார்த்துக் கொண்டிருந்தது. அது காருக்குள் புக முயலுவது போல இருந்தது.

கண்களை மூடிக் கொண்டேன். ஜோவையும் சிலுவையையும் சிலையையும் இறுக்கமாகப் பிடித்து க்கொண்டேன்.

வாகனம் வேகமாக ஓடியது. கார்மலின் வின்ஸ்கிரீனுக்கு அருகில் குனிந்து பார்த்துக் கொண்டு காரை ஓட்டினள்.

திடீரென பலமான காற்று வீசியது. காரையே அந்தக் காற்று அள்ளிச் சென்று விடும் போல இருந்தது. நான் பயந்து ஜன்னலைப்பார்த்தேன். அந்த கறுத்த உருவம்பயங்கரமாக என்னைப் பார்த்தது. அதன் வாயிலிருந்து இரத்தம் வடிவது போல இருந்தது. "அவனை விரட்டமாட்டாயா?" என்று கேட்டுக் கொண்டு ஜன்னலில் ஓங்கிஅறைந்தது, என் முகத்தில் அறைவது போல இருந்தது.

வீரிட்டு அலறினேன்.

ஜன்னல் கண்ணாடி வெடித்து விட்டது. அதன் வழியாக தண்ணீர் உள்ளே புகுந்து கொண்டிருந்தது. ஜோ என்னை இறுக்கமாகக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதான்.

கார்மலின் காரை நிறுத்தவில்லை. "மெக்ஸின் பயப்படாதே...... ஜோவையும் சிலையையும் விட்டு விடாதே" என்று பதட்டத்தோடு சொன்னாள்.

நான் கண்களை இறுக்கி மூடிக்கொண்டிருந்தேன்.

கார் நகருக்குள் நுழைந்து விட்டது.

வீதிகள் வழியாக ஓடியது. நான் பயத்தோடு "கார்மலின் எங்கே போகிறோம்?" என்று கேட்டேன்.

அவள் பதில் சொல்லவில்லை.

அதே கணம் கிரீச்சென்று பிரேக் விழும் சத்தம் கேட்டது. நானும், ஜோவும் முன் ஆசனத்துடன் மோதிக் கொண்டு கீழே விழுந்தோம். கார் பிரேக்கிற்கு கட்டுப்படாமல் வழுக்கிக் கொண்டு சென்று நின்றது.

நான் மெதுவாக எழுந்து ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டதும் கார்மலினைப் பார்த்தேன்.

அவள் வின்ஸ்கிரீன் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். பின் காரை ஸ்டார்ட் செய்து ஓட்டினாள்.

பிரேக் போடப்பட்டதற்கான காரணத்தைஅவள் அப்போது சொல்லவில்லை. பிறகு அது எனக்குத்தெரியவந்தது.

வீதியின் குறுக்கே சிறுமி ஒருத்தி பாய்ந்திருக்கிறாள். அவளின் மீது மோதாமல் தடுக்கவே காரை வளைத்து பிரேக்கைப் பிடித்திருக்கிறாள் கார்மலின். நல்ல வேளையாக

எதிரே வேகமாக வந்து கொண்டிருந்த இராட்சத டிரக் ஒன்றுடன் மோதவில்லை. மோதியிருந்தால் கார் சுக்கு நூரு கியிருக்கும். நாங்கள் தப்பியிருக்க முடியாது.

கார் நின்றதும் குறுக்கே பாய்ந்த சிறுமி எங்கே என்று பார்த்தபோது அவள் மாயமாக மறைந்து விட்டாளாம். அதனால் தான் கார்மலின் அதிர்ச்சியோடு அப்படி பார்த்துக் கொண்டிருந்திருக்கிருள். இது பேயின் விளையாட்டு என்று அவளுக்குத் தெரிந்திருக்கிறது. அதனல் தான் பேசாமல் காரை தொடர்ந்து ஓட்டிச் சென்றிருக்கிருள்.

மழை கொஞ்சம் ஓய்ந்து விட்டது. கார் வீடுகள் இருக்கும் வீதிகள் வழியாக சென்று கொண்டிருந்தது. ஜோ முகத்தை நிமிர்த்தப் பயந்து என்னைக் கட்டிப் பிடித்தபடி இருந்தான்.

தூரத்தில் ஒரு கோயில் தெரிந்தது.

கார்மலின் என்னையும், ஜோவையும் அந்தத் தேவால யத்துக்குத் தான் கொண்டு போகிருள் என்று எனக்குத் தெரிந்து விட்டது. தேவாலயத்தை நோக்கி கார் திரும்பியதும், என் நெஞ்சு படபடக்கத்தொடங்கியது.

குற்றவாளி ஒருவன் பொலிஸ் நிலையத்தை காணும் போது எப்படி பதறுவானே அப்படிப் பதறத் தொடங்கினேன்.

கேட்டுக்குள் கார் நுழைந்தது. எனக்கு வியர்க்கத் தொடங்கியது. ''கார்மலின் காரைத் திருப்பு......''என்று கத்தினேன். அவள் கேட்கவில்லை. பதிலுக்கு பலமாக காரை செலுத்தினள். தேவாலயத்துக்கு அருகில் இருக்கும் குருவானவரின் பங்களாவை நோக்கி கார் சென்றது.

நான் போட்ட கூச்சலை கேட்டு ஜோ திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். அவனிடமிருந்த பயம் இன்னும் அகல வில்லை. விறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நான் திரும்பவும் ''கார்மலின் வீட்டுக்குப் போய் விடுவோம்'' என்று கத்தினேன். அதற்குள் கார் பங்களாவின் வாசலில் நின்று விட்டது.

மழை லேசாக தூறிக் கொண்டிருந்தது. கார்மலின் காரை விட்டு இறங்கினாள். பின்னால் இருக்கும் கதவைத் திறந்து கொண்டு— ''மெக்ஸின் வெளியே வா''என்றாள்.

நான் ஒதுங்கிக் கொண்டேன். 'முடியாது முடியாது' என்று பதறினேன்.

அவள் கோபத்தோடு என்னைப் பார்த்தாள். ஜோவை இறங்கச் சொன்னாள். அவன் இறங்கினான்.

கார்மலின் என் பெயரைச் சொல்லி அழைத்துக் கொண்டு காருக்குள் நுழைந்தாள். என் கையைப் பிடித்து இழுக்க முயன்றாள், நான் தட்டி விட்டேன். அவளுக்கு கடுமையான கோபம் வந்து விட்டது. உனக்கு பைத்தியம் பிடித்து விட்டதா என்று கத்தினாள். நான் அவள் சொல்வதை காதில் வாங்காமல் முடியாது முடியாது என்று சொல்லிக்கொண்டேயிருந்தேன்.

அவள் முறைத்துப் பார்த்தாள். பிறகு வெளியே இறங்கி கதவை அடித்துச் சாத்திவிட்டு ஜோவை அழைத்துக் கொண்டு பங்களாவை நோக்கிச் சென்றாள். நான் பைத்தியக்காரியைப் போல அவள் என்ன செய்கிறாளென்று வின்ஸ்கிரீன் வழியாக பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவள் உள்ளே சென்றாள். சிறிது நேரத்தில் வெள்ளை உடை அணிந்த குருவானவருடன் திரும்பி வந்தாள். குருவானவரைக் கண்டதும் என்னை என்னவோ தாக்கியது போல இருந்தது.

கதவைத் திறந்து கொண்டு வெளியே பாய்ந்தேன்.

கையிலிருந்த மிக்கேல் சம்மனசினது சிலை கீழேவிழுந்து உடைந்தது. நான் பொருட்படுத்தவில்லை. திரும்பி ஓடினேன். கார்மலின் கூச்சலிட்டாள். பாதிரியார் என்னவோ சொன்னார். நான் தலை தெறிக்க ஓடினேன்.

அவர்கள் இருவரும் கூச்சலிட்டுக்கொண்டு விரட்டி வந்தார்கள். நான் இளைக்க இளைக்க ஓடினேன். என் அருகில் இருந்து கொண்டு எவரோ ''அவர்களிடமிருந்து தப்பிவிடு. வேகமாக ஓடு''என்று என்னை உற்சாகப்படுத்துவது போல இருந்தது.

கேட்டைக் கடந்து விட்டேன். வீதியில் இறங்கி ஓடினேன். கார் ஒன்று வருவதைக் கவனிக்கவில்லை. அந்தக் கார்க்காரன் என்னைக் கவனித்து விட்டான். தக்க சமயத்தில் பிரேக் பிடித்தான். வீதி நனைந்திருந்ததால் கார் நிற்கவில்லை. என்னை மோதி தூக்கி எறிந்து விட்டே நின்றது.

விழுந்ததும் என்னால் எழ முடியவில்லை. தலையில் அடிபட்டுவிட்டது. அந்தக்கணம் தான் ஒரு கோரமான காட்சி என் கண் முன் தெரிந்தது.

வழியில் காரில் ஜன்னலூடாகக் கண்ட அந்த கோரமான முகம் எனக்கு அருகில் தெரிந்தது. சிரித்தது. திடீரென கைகள் இரண்டு தோன்றின. என்னை நோக்கி அந்தக் கைகள் வந்தன.

வீரிட்டு அலறினேன்.

முகம் மறைந்து விட்டது.

கார்க்காரன் காரைவிட்டு இறங்கி ஓடிவந்தான். பாதிரியாரும், கார்மலினும் வந்தார்கள். பாதிரியாரைக் கண்டதும் நான் திரும்பவும் அலறினேன். கார்க்காரன் அதிர்ந்து நின்றான். கார்மலின் என்னவோ சொல்லிக் கொண்டு அருகில் வர, குருவானவர் அவளைத் தடுத்து நிறுத்தினார். எனக்கு அருகில் வந்து என்னை தூக்க முயன்றார். நான் "என்னைத் தொடாதே............" என்று கத்தியவாறு அவரின் கையைத் தட்டிவிட்டேன்.

அவர் கைகள் இரண்டையும் பிடித்துக் கொண்டார். இடது கையில் இறுக்கமாக பிடித்துக் கொண்டு வலது கையினால் என் சட்டையில் பிடித்து தூக்கினார். நான் திமிறினேன். விடுபடமுயன்றேன்.

ஒரு ஆணை அடிப்பதைப் போல பளார் பளாரென்று கன்னத்தில் அறைந்தார். அந்த அறைகள் என்னை சுயநினைவுக்கு கொண்டு வந்தன.

அதிசயமாகப் பார்த்தேன். கார்மலின் அருகில் வந்தாள். அவளின் மார்பில் சாய்ந்து கொண்டு விக்கி விக்கி அழத் தொடங்கினேன்.

நெற்றியிலிருந்த காயத்திலிருந்து இரத்தம் நீராக வடியத்தொடங்கியது.

கார்மலின் என்னை அணைத்தவாறே கோவிலுக்கு அழைத்து வந்தாள்.

குருவானவரின் பங்களாவுக்குச்சென்றோம். முதலில் குருவானவர் என் காயத்தைக் கழுவி மருந்து போட்டார். பின் என்னையும் ஜோவையும் முழங்காலில் நிற்கச் சொல்லி ஏதோ ஜெபங்கள் சொன்னார். பின் புனித நீர் தெளித்தார்.

அதன் பின் நடந்தவற்றைச் சொல்ல சொன்னார். ஆரம்பம் முதல் எல்லாவற்றையும் சொன்னேன்.

குருவானவருக்கு என்மீது பெரும் அனுதாபமாக இருந்தது. எழுந்துவந்து தலையைத்தடவி விட்டு, ''இன்னும் சிறிது நாட்கள் கழிந்திருந்தால் விபரீதமான முடிவு ஏற்பட்டிருக்கும்'' என்றார்.

கார்மலின் என்னைப் பார்த்து, ''ஒன்றுக்கும் பயப்படாதே. இவள் சிறிது நாட்களுக்கு இங்கே இருக்கட்டும். நான் அவளைக் குணப்படுத்துகிறேன்'' என்றார்.

ஜோவும் சில நாட்களுக்கு இங்கேயே இருக்கட்டும் என்றார்.

கார்மலின் சென்றதன் பின் டெலிபோன் செய்து ஒரு கிழவியை வரவழைத்தார். என்னை கவனித்துக் கொள்ளும்படி சொன்னார்.

அந்தக்கிழவி ஒரு சமூக சேவகி. அத்தோடு மதத்தில் ஊறிப் போனவள். நல்லவளும் கூட. என்னைத் தன் மகள் போல கவனித்தாள்.

அன்று இரவு எதுவும் நடக்கவில்லை. நிம்மதியாக நான் உறங்கினேன். மறுநாள் காலையிலேயே கார்மலின் வந்தாள். என்னைக் கண்டதும் அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. என் முகத்தில் இப்போது தான் ஒளி தெரிகிறது என்றாள்.

அவளுடன் ஜோவை அனுப்பி வைத்தார் குருவானவர்.

அன்று மாலையில் நான் எனக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறையில் இருந்து கிழவியுடன் பேசிக் கொண்டிருக்கும் போது, வெளியே கார் ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டது. அடுத்து குருவானவருடன் எவரோ பலத்த குரலில் பேசுவது தெரிந்தது.

அந்தக் குரலை அடையாளம் கண்டுகொண்டேன். அது அலெக்ஸின் குரல். எனது இதயத்துடிப்பு நின்று விட்டது போல இருந்தது.

எழுந்து அவசரமாக முன்னுல் வந்தேன்.

குருவானவரின் வரவேற்பு அறையில் அவர்கள் இருந்தார்கள். குருவானவர் மேசைக்கு பின்னுல் இருந்தார். அவருக்கு முன்னுல் அலெக்ஸும், யூஜினும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு பின்புறமாக அறை வாசலுக்கு நான் வந்ததால் அவர்கள் என்னைக் கவனிக்கவில்லை.

''என் மனைவியை இங்கு வைத்திருக்க உங்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை'' என்று அலெக்ஸ் பயமுறுத்தும் தொனியில் சொல்லிக் கொண்டிருக்கும் போது, நான் அங்கு வந்து சேர்ந்தேன்.

குருவானவர் ஏதோ சொல்ல வாய் திறந்தார். அதற்குள்ளாக நான் ''அலெக்ஸ்......''என்று அமைதியான குரலில் அழைத்தேன். அலெக்ஸும், யூஜினும் வெடுக்கென திரும்பினுர்கள். அலெக்ஸ் மிகவும் கோபத்தோடு என்னைப் பார்த்தார். பின் என்னை அடிக்கப்போவது போல முன்னுல் வந்தார். நான் சிறிதும் அஞ்சவில்லை. அசையாமல் அப்படியே நின்றேன்.

குருவானவர் தன்பாட்டில் அப்படியேஇருந்தார். யூஜின் செய்வதறியாமல் திகைத்து நின்ருள்.

அலெக்ஸ் என் முன்னுல் வந்து நின்றதும் அவரின் விழிகளைப் பார்த்தேன். பொங்கிக் கொண்டு வரும் கோபத்தை அவர் அடக்கிக் கொண்டிருக்கிருர்.

''மெக்ஸின் வா போகலாம்'' என்ருர்.

நான் விரக்தியாக அவரைப்பார்த்தேன். பின்-யூஜினைப் பார்த்தேன். அலெக்ஸைத் தாண்டிக் கொண்டு குருவானவரின் மேசையை நோக்கிச்சென்றேன்.

அலெக்ஸ், ''மெக்ஸின்'' என்று அந்தக் கட்டிடமே அதிரும் விதத்தில் கத்தினுர். நான் அலட்சியமாக மேசைக்கு அருகில் வந்து நின்றேன்.

அலெக்ஸ் பாம்பைப் போல சீறிக் கொண்டு வந்து என் தோள்கள் இரண்டையும் பிடித்து உலுக்கினுர். ''மெக்ஸின் உனக்கு என்ன நேர்ந்தது?'' என்று முகத்துக்கு அருகில் கத்தினுர்.

நான் அமைதியாக பதில் சொன்னேன். ''என்னை மறந்து விடுங்கள் அலெக்ஸ்'' என்றேன்.

நான் அப்படிச் சொன்னதும், அவரின் முகம் போன போக்கைக் கண்டு நானே பயந்து போனேன்.

கண்களை அகலத் திறந்துகொண்டு என்னைப் பார்த்தார். இடி தாக்கியிருந்தால்கூட அவ்வளவுக்கு விறைத்துப் போயிருக்கமாட்டார். முகம் மாறியது, உடல் தளர்ந்து விட்டது.

யூஜினும் அதிர்ந்து விட்டாள். அலெக்ஸைக் கடந்து எனக்கருகில் வந்தாள். கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்கு கோபம் வருகிறது என்று தெரிந்தது. ''மெக்ஸின்...என்ன சொல்கிருய்?'' என்று சீறினுள்.

நான் அமைதியாகப் பதில் சொன்னேன். ''யூஜின்...... நான் நன்ருக யோசித்து இந்த முடிவுக்கு வந்துவிட்டேன். அலெக்ஸ் மீது எனக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது என்ருே அல்லது அவரை நான் விரும்பவில்லை என்ருே நினைத்து விடாதே. அவரின் பாதையும் என் பாதையும் வேருகிவிட்டன. அதனுல் இனி அவருடன் வாழ்வது உகந்ததல்ல என்று தீர்மானித்துவிட்டேன்'' என்றேன்.

அலெக்ஸ் இடிந்துபோய் குருவானவரின் மேசைக்கு முன்னுல் கிடந்த கதிரையில் பொத்தென உட்கார்ந்தார். தலையைப் பிடித்துக்கொண்டார்.

யூஜின் என்னை முறைத்துப் பார்த்துக்கொண்டே இருந் தாள். ''இங்கிருந்து என்ன செய்யப் போகிறுய்? இந்தக் கிழட்டுச் சாமியாரின் சமையல்காரியாக இருக்கப்போ கிறுயா?'' என்றுள்.

நான் குருவானவரைப் பார்த்தேன். அவர் என்னையே பார்த்துக்கொண்டிருந்தார். யூஜின் சொன்னதைக் கேட்டு அவர் கோபித்ததாகத் தெரியவில்லை. எனது பிடிவாதத் தைக் கண்டு அவரும் அதிர்ச்சி அடைந்திருப்பதைப் போல இருந்தது.

நான் யூஜினைப் பார்த்து சிரித்தேன். ''எனது எதிர் காலம் எப்படி அமையும் என்றே எனக்குத் தெரியவில்லை யூஜின்'' என்றேன்.

அவள் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு நின்றுள். பிறகு பற்களைக் கடித்துக்கொண்டு ''மெக்ஸின்... நாங்கள் நினைத் தால் உன்னைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்று தீர்த்து விடமுடியும். ஆனுல், அப்படிச் செய்யமாட்டோம்...'' என் றுள்.

அவள் பேசும்போதே அலெக்ஸ் திடீரென கதிரையிலி ருந்து எழுந்தார். ''யூஜின் அவளைச் சொல்லிப் பலனில்லை. எல்லாம் இந்தச்சாமியாரின் வேலைதான். பசப்புவார்த்தை களினுல் அவளை மயக்கிவிட்டான். என்றாவது ஒருநாள் அவள் மனம்மாறி நம்மைத்தேடி வருவாள். அன்று பார்த் துக்கொள்ளலாம்.'' என்றுர்.

என்னையும் சாமியாரையும் மாறி மாறிப்பார்த்துவிட்டு ''வா போகலாம்'' என்று யூஜினை அழைத்தார். இருவரும் வாசலை நோக்கிச் சென்றுர்கள். அவர்கள் கதவை நெருங் கியபோது நான் ''அலெக்ஸ்'' என்றேன்.

இருவரும் நின்றுர்கள். ''என்னை விவாகரத்து செய்து விட்டு வேறு பெண்ணைத் திருமணம் செய்யவேண்டுமானுல் செய்து கொள்ளுங்கள். எதற்கும் நான் குறுக்கே நிற்க மாட்டேன்'' என்றேன்.

அவர் எதுவும் சொல்லவில்லை. யூஜின் பின்தொடர வெளியே சென்றார்.

அவர்களின் கார் புறப்பட்டுச் செல்லும்வரை நான் அப்படியே நின்றேன். பிறகு எனது அறையை நோக்கிச் செல்ல ஆயத்தமானேன். குருவானவர் என்னை அழைத்தார். ''மெக்ஸின்... இப்படி உட்கார்'' என்றார். அவரின் குரல் மிகவும் தளர்ந்து இருந்தது.

மேசைக்கு முன்னால் இருக்கும் கதிரையில் அமர்ந்தேன். அவர் என்னை எடை போடுவதைப்போல பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, ''மகளே...... நன்றாக யோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்தாயா?'' என்றார்.

''இனி அலெக்ஸுடன் என்னால் வாழ முடியாது. எனக்கும் அந்தப் பேய் இயக்கத்துக்கும் ஒத்துவராது''என்றேன்.

''நீ இன்னும் சிறிது நாட்களுக்கு இங்கிருக்கலாம். அதன்பின் என்ன செய்யப்போகிறாய்?'' என்று கேட்டார்.

''எனக்கு உதவுவதற்கு எவரும் இல்லை. நீங்கள்தான் ஏதாவது வழி செய்ய வேண்டும்'' என்றேன்.

அவர் யோசித்துக்கொண்டிருந்தார். பிறகு ''எல்லாம் ஆண்டவன் விட்ட வழியில் நடக்கட்டும்'' என்று சொல்லி என்னை அனுப்பினார்.

அன்று பிற்பகல் நான் எனக்குத் துணையாக இருக்கும் கிழவியுடன் பேசிக்கொண்டிருக்கும்போது அவள் ஒரு விஷயம் சொன்னாள். குருவானவர் என்னை ஒரு மடத்துக்கு அனுப்ப முடிவு செய்திருக்கிறார் என்றாள். அது அனாதைப் பிள்ளைகளின் மடம். அங்கு ஆசிரியையாகத் தொழில் பார்க்கலாம் என்று குருவானவர் சொல்லியிருக்கிறார்.

அன்று மாலை அம்மா என்னைத் தேடிக்கொண்டு வந்தாள். அவளிடம் யூஜின் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறாள். அதோடு என்னைப் பேய் படுத்திய பாடும் அம்மாவுக்குத் தெரிந்திருக்கிறது, என்னைக்கண்டதும் கட்டிப்பிடித்

துக்கொண்டு அழுதாள். அவளுக்கு ஆறுதல் சொல்ல வழியில்லாமல் நானும் அழுதேன்.

திடீரென அவள் கண்களைத் துடைத்துக்கொண்டு "ஏன் அலெக்ஸுடன் வாழமுடியாது என்று சொன்னுய். அவன் நல்ல பையன் அல்லவா?'' என்ருள்.

நான் விரக்தியாக அவளைப் பார்த்தேன். "உன் மகள் மீண்டும் பேயின் காதலியாவதை நீ விரும்புகிருயா?'' என்றேன்.

அவள் பதில் சொல்லவில்லை. அதோடு அலெக்ஸின் கதையையே விட்டுவிட்டாள். பிறகு நான் மடத்துக்குப் போவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதைச் சொன்னேன். அவள் பதில் சொல்லவில்லை. எங்கேயாவது நான் மகிழ்ச்சியாக இருந்தால் அவளுக்கு அதுவே போதும்.

என் நெற்றியில் முத்தமிட்டுவிட்டு அவள் புறப்பட்டுச் சென்றபோது என் கண்கள் கலங்கின. அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

வயது வந்த மகள் ஒருத்தி இருந்தும் அவள் இந்தத் தள்ளாத காலத்தில் அனுதைபோல வாழவேண்டியிருக்கிறதே என்பதை நினைத்தபோது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

இதன்பிறகு நான் வேகமாகக்குணமடைந்து வந்தேன். என்னை மடத்திற்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளையெல்லாம் குருவானவர் செய்துவிட்டார். அப்போதுதான் அவருக்கு அந்தப் புதிய யோசனை ஏற்பட்டது.

தற்போது பிரிட்டனில் ஏராளமான பேய் மதங்களும் இயக்கங்களும் உருவாகிக்கொண்டு வருகின்றன. பலர் ஆபத்தை உணராமல் அதில் சேர்ந்துகொண்டிருக்கிருர்கள். அதனுல் என் கதையைப் பத்திரிகைக்காரர்களுக்கு சொல்லி பத்திரிகைகளில் வெளியிட்டால் எல்லோருக்கும் ஒரு எச்சரிக்கையாக இருக்கும் என்று குருவானவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

நான் சம்மதித்தேன்.

அதன் பலனுகத்தான் மெக்ஸினின் அந்த பயங்கர வாழ்க்கை இரகசியம் அம்பலத்துக்கு வந்தது.

★

009003

[illegible] - EE/5

3/12 [illegible] A002

13/3/86 [illegible] A013

23.3. [illegible] B272

8.3. [illegible] B227

1.7. [illegible] B233

7-8 [illegible] [illegible]

VINAYAGAR

LIBRARY

ராத்தானின்

# ஊழியர்கள்

